185

Regd. No. M. 2569

OFFICE OF THE REGISTRAR OF ... 9 - DEC ...

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 7

செந்தமிழ் மாத சஞ்சிகை

இதழ் 12

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1355 ரமலான்௴ 1936௵ டிசம்பர்௴

1. திருகுர்ஆன் ... 353 2. அல்ஹதீது ... 356
3. நுங்கள் மாசிகை ... 358
4. நமது தொழுகையைப்பற்றி மேனாட்டினர் ... 360
5. முஸ்லிம்கள் கற்கவேண்டிய பாடங்கள் ... 363
6. உருதுபாஷையும் ஹிந்திப்பாஷையும்; ருசிகரமான விஷயங்கள் ... 364
7. இயேசுநாதர் கர்த்தரின் குமாரரா? ... 367
8. லைலதுல் கத்ர் 370 9. பித்று ஸதக்கா 372
10. ஈதுப்பெருநாள் தொழுகை ... 374
11. வஹ்தத்துல்உஜூத். அல்லது உள்ளமைப் பொருள் ஒன்றே ... 375
12. நஞ்சகோதரர்களுக்கு ... 379
13 இத்தாலியும் காதியானியும் ... 382
14. ஹஸ்ரத்உமர் (ரலி.) அவர்களது சாமர்த்தியம் 384
15. இந்திய முஸ்லிம்மன்னர்களது ஆட்சி ... 388
16. சாந்தி அளிப்பது சன்மார்க்கம் ஒன்றே ... 391

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,,	4 0 0
தனிப் பிரதி ...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-DEC 1936
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 7	ஹிஜ்ரி 1355 ரமலான் மீ 1936ஸு டிசம்பர் மீ	இதழ் 12

திரு குர்ஆன்

றமலான்மாதம் : அதில்தான் (திரு) குர்ஆன் அருளப்பட்டது. அந்த (குர்ஆன்) ஜனங்களுக்கு நேர்வழி காட்டியாகவும், நேர்வழியில் நின்றும் தெளிவான அத்தாட்சியாகவும், (சத்தியம் அசத்தியம் ஆகியவைகளை) பிரிக்கும்படியானதாகவும் இருக்கிறது. எனவே, அந்த மாதத்தை உங்களில் எவர் சந்திக்கிருரோ அதில் அவர் நோன்பு நோற்கவேண்டும்.— அல்குர்ஆன்.

இவ்வேத வசனத்தில் மூன்று விஷயங்கள் சொல்லப்பட் டிருக்கின்றன. (1) றமலான் மாதம் என்பது திரு குர்ஆன் அருளப்பட்ட மாதம் என்பதாக மாதத்தின் தன்மை. (2) திரு குர்ஆன் ஜனங்களுக்கு நேர்வழி காட்டியாகவும், சத்தியம் அசத்தியம் ஆகியவைகளைப் பிரித்தறிவிப்பதாகவும், தெளிவான அத்தாட்சிகளுள்ளதாகவும் இருக்கிறது என்று திரு குர்ஆனைப் பற்றிய வர்ணனை. (3) அந்த மாதத்தில் நோன்பு வைக்கவேண்டும். எனவே, இத் திருவசனத்திலிருந்து றமலான் மாதத்தில் நோன்பு வைக்கவேண்டும் என்று இறைவன் கட்டளை யிட்டதற்குக் காரணம் அந்த மாதத்தில் திரு குர்ஆன் அருளப்பட்டதாகும் என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்.

றமலான் மாதத்தில் திரு குர்ஆன் அருளப்பட்டதற்காக எல்லா ஜனங்களும் நோன்பு வைக்கவேண்டும் என்று ஏற்படுத்தியதற்குக் காரணமென்ன? பட்டினியாக இருப்பதற்கும் திரு குர்ஆனுக்கும் யாது சம்பந்தம்? என்ற விஷயங்கள் இங்கு உண்டாகின்றன. இவ்விஷயங்களைப்பற்றி விளக்கு முன், ஒரு விஷயத்தை நாம் தெரிந்து கொள்ளவேண்டிய தவசியமாகும். ஒரு மனிதரை ஞாபக மூட்டுவது அவருடைய செய்கைகளேயாகும். ஷேக்ஸ்பியர் என்ற பிரபல நாடகாசிரியரை அவரது டிராமாக்கள் ஞாபக மூட்டுகின்றன. ஹக்கீம் பூ அலீ ஸீனு (றஹ்) அவர்களை, அவரது வைத்திய சிகிச்சை முறைகளும் யுக்திகளும் நன்று ஞாபகப் படுத்துகின்றன. ஆகவே, இவைகளைத் தவிரவுள்ள ஞாபக மூட்டிகள் சகல விதத்திலும் சம்பூரணமான ஞாபகார்த்தம் என்று சொல்லமுடியாது. இம்முறையில், றமலான் மாதத்தைய நோன்பானது திரு குர்ஆன்

செய்த அரிய காரியங்களில் ஒன்றாகவும், திரு குர்ஆனை ஞாபகப் படுத்துவதாகவு மிருக்கிறது.

இவ்வுலகிற் றோன்றிய பல பெரியார்களும் தங்களுக் கிஷ்டமான ஒவ்வொரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அப்பெரியார்கள் பால் அபிமானங் கொண்டவர்கள் அவர்கள் எந்தெந்தக் காரியங்களில் அதிகப் பிரியமும் பற்றும் கொண்டிருந்தார்களோ அந்தக் காரியங்களில் அவர்களுக்கு ஞாபகச் சின்னங்களை ஏற்படுத்துகின்றனர். இதுபோல நோன்பு நோற்பதானது திரு குர்ஆனின் நோக்கம் சித்தியடைவதற்குப் பலத்தையும் ஆதரவையும் அளிக்கிறது. ஆகவே, திரு குர்ஆனுக்கு றமலான் மாதத்தின் நோன்புகள் ஞாபகச் சின்னமாக இருக்கின்றன.

ஒருவருக்கு ஒரு ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்துவதானது அவரைக் கௌரவிப்பதற்கு அறிகுறியாகும். இதுபோல் இஸ்லாமிய உலகம் திரு குர்ஆனைக் கௌரவிக்கிறது என்பதற்கு நோன்பு நோற்பது அறிகுறியாக இருக்கிறது. எவ்விதமெனில், றமலான் மாதத்தில் உலக முஸ்லிம்களது நிலைமையைப் பற்றிச் சற்று ஆராய்ந்து பாருங்கள். படித்தவர், பாமரர், ஏழை பணக்காரர், அரசர் ஆண்டி ஆகிய யாவரும் இம்மாதத்தில் ஒரு சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கின்றனர். அவர்களது நா தாகவிடாயால் காய்ந்திருக்கும். அவர்களது ஸ்தூலம் பசியினால் தளர்ந்து போயிருக்கும். உண்பதற்கும், பருகுவதற்கு முள்ள பதார்த்தங்கள் எதிரில் தானிருக்கும். அவைகளை அருந்திப் பசியையும் தாகத்தையும் தணித்துக் கொள்ளலாம். அவர்களை அப்படிச் செய்ய வேண்டாம் என்று தடுத்து நிறுத்துவதற்கோ அல்லது மீறிச் செய்தவர்களைத் தண்டிப்பதற்கோ சட்டப்படி எவருக்கும் அதிகாரமில்லை. அப்படி இருந்தும் முஸ்லிம் நோன்பாளிகள் அவைகளைப் புசிக்காமலும், அருந்தாமலுமிருக்கின்றனர். தனது அன்பிற்குரிய மனைவி பக்கத்தில்தான் வீற்றிருப்பாள். அவளது அழகும், ரூபலாவண்யமும் அவள்பால் காதலையுண்டாக்கி விடுவதற்கான அபூர்வ சக்திவாய்ந்தனவாயிருக்கின்றன. அவன் தனது இல்லாளின்பால் செல்வானாயின் அவனது கையைப்பிடித்து அவனை நிறுத்திக்கொள்வார் ஒருவருமில்லை. ஆனால், திரு குர்ஆனது ஒரு கட்டளையானது இவ்வுலகிலுள்ள கோடிக்கணக்கான முஸ்லிம்களைத் தடுத்து நிறுத்தி விட்டது. இவ்வுலகத்தைக் கட்டி ஆளும் அரசனும்கூட இத்திரு குர்ஆனது கட்டளையை மீறி நோன்பை முறித்து உணவருந்தவோ, தனது மனத்திற்கிசைந்த மனைவியுடன் கலவி செய்யவோ துணிவதில்லை. என்னே! திரு குர்ஆனின் அற்புத சக்தி!! எல்லோரும் ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாயையடக்கி வயிற்றையடக்கி அபத்தை அடக்கித் திரு குர்ஆனின் கட்டளையை நிறைவேற்றுகின்றனர். எல்லாருடைய நினைப்புகளும் விருப்பங்களும் பூட்டப்பட்டு விடுகின்றன. அரசர்களும் அவர்களது மனைவியரும், காலைமுதல் மாலைவரை மண்வெட்டி கல்லுடைத்து ஜீவனம் செய்யும் கூலிக்காரர்களும், நடுப்பகலில், உஷ்ண வெய்யிலில் தலை திறந்தவண்ணமாக வயல் காடுகளில் வேலை செய்யும் உழவர்களும், மற்றவர்களும் எவ்வித வித்தியாசமும் பாகுபாடுமின்றி திரு குர்ஆனின் இக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பசித்தும் தாகித்துமிருந்து நோன்பு நோற்கின்றனர். தெய்வத்திருமறையின் கட்டளைக்கு முன்னர் கோடிக்கணக்கான மனிதர்கள் கீழ்ப்படிந்து தங்கள் விருப்பங்களையும் பழக்கவழக்கங்களையும் தியாகம் செய்கின்றனர். இதில் ஆண் பெண் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசமின்றி எல்லோரும் சமமாகவே கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றார்கள். இது திரு குர்ஆனது தனிப்பெரும் அற்புதச் செய்கையாகும். இவ்வுலகிலுள்ள மிகப் பெரிய பலம் பொருந்திய அரசாங்கம் தனது முழு பலத்தையும் உபயோகித்து உலகிலுள்ள முஸ்லிம்களை இப்படிச் செய்யும்படி நிர்பந்தப்படுத்தினாலும் முஸ்லிம்கள் அதற்குக் கீழ்ப்படியப்போவதில்லை. ஒரு மணி நேரத்திற்கு மட்டிலும்கூடக் கட்டுப்பட்டிருக்கமாட்டார்கள். ஆனால், திரு குர்ஆனிடம் பீரங்கி இல்லை, குண்டு இல்லை, ஆகாயவிமான மில்லை, யுத்தக் கப்பல்களில்லை, ராணுவமில்லை. அப்படி இருந்தும் "அந்த மாதத்தைச் சந்திப்பவர்கள் நோன்பு வைக்க வேண்டும்" என்ற ஒரு கட்டளைக்கு உலக முஸ்லிம்களெல்லோரும் ஒன்றுபோல் கீழ்ப்படிகின்றனர்.

மனம் ஒரு நிலையிலில்லை; நிமிஷத்திற்கு நிமிஷம் அது மாறிக்கொண்டே இருக்கும். இவ்வுலக ஜீவியத்தில் மனிதனுக்கு தெய்வபயம், தெய்வபக்தி, அந்தரங்க சுத்தி ஆகிய எண்ணங்கள் உண்டாகுவது மிகக் குறைவு. ஆனால், இச்சை, காமம், ஆகியவைகளுக்கு அதிக வசதிகள் கிடைக்கின்றன. ஒரு மனிதன் இரவு பகல்

இருபத்துநான்குமணி நேரத்திற்குள் ஐந்து முறை தொழுகையை நிறைவேற்ற வேண்டுமாயின் அது அவனுக்குப் பெரும் சிரமமாகத் தான் தோன்றும். ஆனால், ஐம்பது முறை வேண்டுமானாலும் அவன் பொய்யுரைக்க முடியும். அக்கிரமம் செய்யமுடியும். இப்படிச் செய்வது அவனுக்குச் சிரமமாக இருக்காது. ஆனால், அல்லாஹு சுப்ஹானஹுவத ஆலாவானவன் மனித ஜீவியத்தின் இந்நிலையைக் கவனித்து மனித எண்ணத்தைத் தன்பால் திருப்புவதற்கான சில காரியங்களைத் தனது சன்மார்க்கத்தில் ஏற்படுத்தி இருக்கிறான். அப்படிப்பட்ட காரியங்களில் ரமலான்மாத நோன்பும் ஒன்றாகும்.

திரு குர்ஆனது நோக்கங்களுக்குப் புத்துயிரளிப்பதற்காக ஒரு மாதத்தைக் குறிப்பிட்டு, அதில் நோன்பு நோற்கவேண்டும் என்று கட்டளையிட்டது பெரிய காரியமல்ல, இந்த ஒரு மாத நோன்பிற்கு முஸ்லிம் பொதுஜனங்களிடை ஏற்பட்டுள்ள மகத்துவமும் ஆதரவும் தான் மிகப் பெரியதாகவும் ஆச்சரியப் படும்படியாகவும் இருக்கிறது. மனிதர் இஷ்டப்பட்டாலும் இஷ்டப் படாவிட்டாலும் ரமலான் மாதம் பிறந்து விட்டவுடன் மனிதருள்ளத்தில் ஒருவிதமான உணர்ச்சியுண்டாகி விடுகிறது. அவ்வுணர்ச்சியினுள் திரு குர்ஆனது நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கான முயற்சியும் தானாகத் தோன்றிவிடுகிறது.

ரமலான் மாதத்தில் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் நப்ஸுடன் யுத்தம் செய்வதாக இருக்கிறது. நோன்பு திறத்தல், நோன்பு வைத்தல், இந்த வேளையில் உணவுப் பதார்த்தங்களைத் தயாரித்து தானும் சாப்பிட்டு மற்ற நோன்பாளிகளுக்கு அளித்தல், தராவீஹ் தொழுதல், இம்மாதத்தில் விசேஷமாக தர்மஞ் செய்தல், இஃதிகா பிருத்தல், லைலத்துல் கத்ரியில் நித்திரையில்லாமல் விழித்திருந்து வணக்கம் புரிதல் ஆகிய காரியங்கள் இஸ்லாமிய உலகில் புதியதொரு மாறுதலையுண்டாக்கி விடுகின்றன. நோன்பாளி தினந்தோறும் வயிற்றுப் பசியுடனிருக்கவேண்டியதிருப்பதால் அகத்தின் சேஷ்டைகள் அகலுகின்றன. இச்சைகள் குறைகின்றன. இவ்விதமான நிகழ்ச்சிகள் சமூகத்தின் பொதுவாழ்வில் பெரிய மாறுதலைச் செய்கின்றன. இந்த மாதத்தில் தொழுபவர்களது எண்ணிக்கை அதிகமாகி விடுகிறது. தர்மம் செய்வதில் ஆர்வமுண்டாகிறது. தெய்வ பக்தி, தெய்வ வணக்கம், ஜபம், தபம், திரு குர்ஆன் ஓதல், ஒருவருக்கொருவர் ஒற்றுமை, அபிமானம், நேசம், ஆகியவைகள் எல்லாம் வாழ்க்கையின் அகத்தினுள்ளிருந்து புறத்தில் காரியமாக வெளிவருகின்றன. எனவே, ரமலான் மாதத்தில் நோன்பு வைப்பதன் மூலமாக திரு குர்ஆனது இந்நோக்கங்கள் நிறைவேறி விடுகின்றன.

உருவச்சிலையை நிறுத்துதல், ஒரு கட்டிடத்தைக் கட்டிவிடுதல், பாலங்கட்டுதல், ரஸ்தாவிற்குப் பெயரிடல், ஆஸ்பத்திரிவைத்தல், பள்ளிக்கூட மேற்படுத்துதல் முதலியவைகள் மூலமாக மனிதர்கள் ஞாபகச் சின்னங்களை ஏற்படுத்துகின்றனர். இன்னும் சில ஞாபகச்சின்னங்கள் ஒரு சமூகத்தாரின் வெற்றியையும் இன்னொரு சமூகத்தாரின் தோல்வியையும் அறிவிப்பனவா யிருக்கின்றன. இவைகளிற் சில வெண் சலவைக்கல்லால் செய்யப்பட்டிருக்கலாம். சொர்ணத்தாலும் இருக்கலாம். சாதாரணக் கல்லாலு மிருக்கலாம். இந்த ஞாபகச் சின்னங்களெல்லாம் ஏக காலத்தில் யாவருக்கும் பயன்படுவனவாயில்லை. ஆஸ்பத்திரிகளால் நோயாளிகளுக்கும், ஸ்கூல்களால் பாமரர்களுக்கும் நன்மை ஏற்படுவது போல ஒவ்வொருவிதமான ஞாபகச்சின்னத்தால் குறிப்பிட்ட ஒருவிதத்தில்தான் ஜனங்களில் ஒருசாராருக்கு நன்மை ஏற்படும். சிலவற்றால் எவ்வித நன்மையும் ஏற்படுவதே இல்லை.

ஆனால், திரு குர்ஆனின் நிலைமை அவ்வாறன்று. இது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வெற்றியன்று. மனிதத் தத்துவம் வெற்றி பெற்றதென்பதை அறிவிக்கும் அறிக்கையாகும். எல்லா ஜனங்களுக்கும் இந்த அறிக்கை தேவையாயிருந்தது. இதனை எதிர்பார்த்து ஜனங்கள் துடித்துக்கொண்டிருந்தனர். கஷ்டப்படுவோர் ஒவ்வொருவருக்கும் இஃதொரு உதவியாளனாக இருந்தது. ஸ்தூலம் ஆன்மா ஆகிய இரண்டும் அடையும் நித்திய ஜீவியத்திற்கு உயிரளிப்பதாக இருந்தது. திரு குர்ஆன் அருளப்படுவதற்கு முன்னிருந்த உலகத்தின் போக்கு அது அருளப்பட்ட பின் அடியுடன் மாறுதலடைந்து விட்டது. அஞ்ஞானமெனும் அந்தகாரம் மாறி சுஞ்ஞானமெனும் பிரகாசம் தோன்றிற்று. மனிதன் அடையக்கூடிய உயர்தரமான வெற்றிகளை இத்திரு குர்ஆன் அளித்தது. மனிதன் அடையக்கூடிய இறைவனது அனுக்கிரகம் சம்பூரணமாயிற்று. ஆகவே,

அதன் ஞாபகார்த்தமாக ஏற்பட்ட றமலான் மாத நோன்பும் மனித சமூகம் அனைத்தும் சந்தோஷமும் நன்மையும் அடையக்கூடிய பொதுவான ஞாபகச் சின்னமாக அமைந்துள்ளது. திரு குர்ஆன் அருளப்பட்டதற்குரிய ஞாபகார்த்தமாக உலகின் ஒரு மூலையில் ஒருகட்டிடத்தைக் கட்டிவிட்டாலும் அல்லது உருவச் சிலையை வைத்தாலும் அல்லது இதுபோன்ற ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்தினாலும் அது யாவருக்கும் நன்மை பயக்குவதாகவோ அல்லது யாவருக்கும் திரு குர்ஆனை ஞாபகமூட்டுவதாகவோ இருக்கமுடியாதென்பது திண்ணம். எனவே, திரு குர்ஆனின் மகத்துவம், அதன் தன்மை மகிமை இன்னதென்பதை மானிடவர்க்கத்தாராகிய நாம் நன்கு தெரிந்து கொள்ள முடியாதல்லவா? எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே அதனை நன்கு அறிந்துகொள்ள முடியும். ஆகவே, அதற்குரிய ஞாபகச் சின்னத்தை அவனே ஏற்படுத்தி யுள்ளான்.

எனவே, திரு குர்ஆனின் கட்டளைகளைக் கிரியாம்சையில் கொண்டுவருவதற்கான விதையை விதைப்பதற்கு ரமலான் மாதம் ஏற்ற காலமாக அமைந்துள்ளது. ஆகவே, இஸ்லாத்தின் செல்வப் புதல்வர்கள் திரு குர்ஆனுக்குக் கீழ்ப்படிந்து அதனைப்பரவச் செய்வதற்கு இக்காலம் பயிற்சி யளிக்கும் காலமாக இருப்பதால் யாவரும் கட்டுப்பாடான முறையில் திரு குர்ஆனை உலகமெங்கும் பரவச்செய்வதற்கு இம்மாதத்தில் தயாராக்கிக்கொள்வது அவசியமாகும். எல்லாம்வல்ல இறைவன் தனது வேதத்தை உலகமெங்கும் பரவச்செய்ய முஸ்லிம்களுக்கு நல்லுதவி செய்வானாக ஆமீன்.

அல்ஹதீது

லைலத்துல் கத்ரியில் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மலக்குகளைக்கொண்ட ஒரு கூட்டத்துடன் இறங்கி, அல்லாஹுதஆலாவை உட்கார்ந்த வண்ணமாகவும், நின்ற வண்ணமாகவும் ஜபிக்கிற (திக்ரு செய்கிற) ஒவ்வொரு அடியாருக்கும் பாபமன்னிப்புக் கேட்கிறார்கள். ஈதுல்பித்ரு பெருநாளன்று அல்லாஹுதஆலா அவர்களைப்பற்றி மலக்குகளிடம் பெருமை பேசுவதுடன் அவர்களை நோக்கி "என்னுடைய மலக்குகளே! தன்னுடைய நற்கிரியைகளைப் பூர்த்தியாக நிறைவேற்றிய கூலிக்காரருக்கு (=அடியாருக்கும்) எதைக் கூலியாக அளிக்கலாம்" என்று கேட்பான். அதற்கு அவர்கள் அவர்களுடைய கூலியை பரிபூரணமாகக் கொடுக்கும் விஷயத்தில் எங்களது றப்புதான் அவ்வடியாருக்குக் கூலிகொடுப்பவனாக இருக்கிறான்" என்று கூறுவார்கள். என்பதாக நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஜ்றத் அனஸ் (றலி) கூறி இருக்கிறார்கள்.

இது லைலத்துல் கத்ரியின் மேன்மையைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதாகும். லைலத்துல் கத்ரியில் மலக்குகள் இப்பூவுலகில் இறங்கி வருவதாகவும், அல்லாஹுதஆலாவை ஜபித்துக் கொண்டிருக்கும் அடியார்களுக்காகப் பாபமன்னிப்புக் கேட்கின்றனர் என்பதும், மனிதர்களை சிருஷ்டித்தால் அவர்கள் உலகில் கொள்ளை கொலை முதலிய அட்டூழியங்களைச் செய்து பூமியில் ரத்தம் சிந்துவார்கள் என்று இறைவனிடம் தர்க்கம் செய்த மலக்குகளிடம் லைலத்துல் கத்ரியில் வணங்கும் அடியார்களைக் குறித்து அவன் பெருமை பேசுகிறான் என்பதும் இந்த ஹதீதில் கூறப்பட்டிருக்கிறது. இவ்விரவின் மேன்மையும் சிறப்பையும்பற்றி இறைவன் தனது திருமறையில் ஒரு முழு அத்யாயத்தையே கூறி, திரு குர்ஆனை அவ்விரவில் இறக்கியதாகவும் மலக்குகளும் றாஹூம் இறங்குவதாகவும், அது ஆயிரம் மாதத்தைப் பார்க்கினும் சிறந்ததெனவும் கூறி இருக்கிறான். எனவே, அவ்விரவில் திரு குர்ஆனை இறக்கியதைப்பற்றிக் கவனிப்போம்.

இவ்விரவில் திரு குர்ஆன் முழுவதும் லௌஹுல் மஹ்பூவிலிருந்து இவ்வுலகத்தைய வானத்திலுள்ள பைத்துல் இஸ்ஸத்தில் ஒரே

முறையில் இறக்கிவைக்கப்பட்டிருந்தது பின்னர், ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அதனை நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களிடம் 23 வருஷ காலத்தில் கொஞ்சங்கொஞ்சமாகக் கொண்டுவந்தார்கள். திரு குர்ஆனை முதலாவது வானத்தில் ஒரே முறையில் இறக்கி வைத்துக்கொண்டு அப்புறம் கொஞ்சங்கொஞ்சமாக அருளியதற்குக் காரணமென்னவெனில், அவ்வானம் மனிதருக்கும் மலக்குகளுக்கும் பொதுவானதாக இருக்கிறது, என்பதற்காகவேயாம். ஆகவே, அவ்வானம் மனிதருக்கு முகமாகவும் மலக்குகளுக்குத் தங்குமிடமாகவு மிருக்கிறது. அவ்விரவில் எல்லாக் காரியங்களும்: மனிதருக்குரிய சம்பத்துகள், ஜீவியகாலம் முதலியவைகள் நிர்ணயம் செய்யப்படுவதால் இந்த இரவிற்கு நிர்த்தாரணம் செய்யும் இரவு அதாவது 'லைலத்துல் கத்ரி' என்ற பெயர் வந்தது. ஆனால், இந்த இரவில்தான் அல்லாஹுதஆலா ஒவ்வொருவருக்கும் இவைகளைப் பற்றி நிர்ணயம் செய்கிறான் என்பது கருத்தல்ல. ஒவ்வொருவரும் செய்யும் கிரியைகள், வயது, சம்பத்து முதலிய யாவும் அவர்கள் பிறப்பதற்கு முன்னர் அஜலிலேயே அதாவது ஆதியிலேயே அவனால் எழுதப்பட்டு விட்டன. அவைகளில் கூடுதல் குறைதல் எதுவுமில்லை. என்றாலும், ஒவ்வொரு வருஷத்திலும் நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றி மலக்குகளுக்கு அன்றைய இரவில்தான் கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன என்பதும், அன்றைய இரவில்தான் மலக்குகள் அவைகளைப் பற்றி அறிகின்றனர் என்பதும் கருத்தாகும்.

அன்றைய இரவில் புரியப்படும் ஒரு நல்ல காரியம் அல்லாஹுதஆலாவினிடம் அதிகம் மகத்துவமுள்ளனவாகவும், அவனால் ஒப்புக்கொள்ளப் படுவனவாகவும் இருப்பதால் இந்த இரவிற்கு "மகத்துவமுள்ள இரவு" என்ற பெயர் வந்தது என்பதாகவும், அன்றைய இரவில் மலக்குகள் இவ்வுலகில் வருவதால் பூமியில் நெருக்க மேற்பட்டு விடுகிறது. ஆதலின், அந்த இரவிற்கு நெருக்கமான இரவு என்பதாகப் பெயர் வந்தது என்றும் கூறுகின்றனர்.

புனிதமாகிய இவ்விரவிற் நித்திரையை நீக்கி இறைவணக்கம் செய்து, பாபமன்னிப்புப் பிரார்த்தனை செய்பவருக்கு அவரது சகல பாபங்களும் மன்னிக்கப்படுகின்றன, என்பதாக ஹதீது ஷரீபுகளில் வந்திருக்கிறது. இவ்விரவு ஆயிரம் மாதங்களைப் பார்க்கினும் சிறந்தது என்பதாக திரு குர்ஆனிலேயே இறைவன் கூறி இருக்கின்றான். எனவே, இவ்விரவிற்கு மட்டிலும் இவ்வளவு மகத்துவம் ஏற்பட்டதற்குக் காரணம் என்னவென்றால், இவ்விரவில் திரு குர்ஆன் அருளப்பட்டதேயாகும். மன்பதைகளுய்ய, அவர்களுக்கு நேர்வழி காட்டி மிருகத்தினுங் கடையனாய்த் தாழ்ந்த நிலையிலிருந்த மனிதனைத் தட்டி எழுப்பி மலக்குகளுக்குச் சமமான உச்சஸ்தானத்தை இத் திரு குர்ஆன் இம்மையிலும் மறுமையிலும் அளித்ததால் இது அருளப்பட்ட இரவானது மனித வர்க்கத்திற்கு மிகவும் மகத்துவம் பொருந்திய இரவு என்பதில் சந்தேகமில்லை. இதனை மனித வர்க்கம் அனைத்துமே கொண்டாடி, இறைவன் தமக்குச் செய்த அனுக்கிரகங்களுக்கு நன்றி செலுத்தி, திரு குர் ஆனது வழியின்படி இனிமேல் நடப்பதாக பிரதிக்ஞை செய்துகொள்வது மிகவும் அவசியமாகும். என்றாலும், அந்த இரவு றமலான் மாதத்தில் வருகிறது என்பதைத் திரு குர்ஆனிலிருந்தே நாம் தெரிந்து கொள்கிறோம். "றமலான் மாதம்: அதில்தான் (திரு) குர்ஆன் இறக்கப்பட்டது" என்பதாகத் திரு குர்ஆனில் தெளிவுபடக் கூறப்பட்டிருப்பதால், றமலான் மாதத்தில் லைலத்துல் கத்ரீ இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அது எந்த தேதியில் என்று நிச்சயமாகக் கூறுவதற்கு திரு குர்ஆனில் விபரமானதும் தெளிவானதுமான ஆதாரம் ஒன்றுமில்லை. ஆனால், ஹதீது ஷரீபுகளில் இது எந்தத் தேதி என்பதைப்பற்றிய விவரங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்த ஹதீதுகளை ரிபோர்ட் செய்த அதாவது தகவல்அறிவித்த ராவிகள் பலதிறப்பட்டவர்களாக இருப்பதால் இவர்களைக் கவனித்து இவர்களா லறிவிக்கப்பட்ட ஹதீதுகளை ஊர்ஜிதம் செய்யவேண்டியதாக இருக்கிறது. இந்த ஹதீதுகள் எல்லாம் ஒரே அந்தஸ்திலில்லாமலிருக்கின்றன. ஆனாலும், பெரும்பாலான உலமாக்களும் மேதாவிகளும் அந்த இரவு றமலான் மாதம் 27ந் தேதி வருகிற இரவு என்பதைப் பற்றிய ஹதீதுக்கே அதிகம் ஆதரவு கொடுத்து அதனையே ஊர்ஜிதம் செய்திருக்கின்றனர். ஆகவே, இந்த வருஷத்தைய றமலான் மாதத்தில் 27ந் தேதி இரவை முஸ்லிம்களாகிய நாமெல்லோரும் திரு குர்ஆன் அருளப்பட்ட புனித இரவாகக் கொண்டாடவும், நம்மால் நிகழ்ந்த பாபச்செய்கைகளுக்கு இஸ்திஃபார் செய்யவும் றஹ்மான் நல்லுதவி செய்வானாக. ஆமீன்.



நுங்கள் மாசிகை.

நுங்கள் அருமை மாசிகையாம் 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' 7-ம் வயதைப் பூர்த்தி செய்கிறது. இவ்வேழு வருடகாலமாக நுங்களது அருமை மாசிகை தனது நோக்கத்திலிருந்து சிறிதும் பிரளாமல் உங்களுக்குத் தொண்டாற்றும்படி செய்த எல்லாம் வல்ல இறைவனை யாம் வாயார மனதார வாழ்த்துகின்றனம். இவ்வேழு வருடகாலமாக இம்மாசிகையை ஆதரித்து போஷித்து வந்த அபிமானிகள், சந்தாதாரர்கள் முதலிய யாவருக்கும் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம். நுங்களது இம் மாசிகை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், நமது நாட்டில் காதியானிகளும், காதியானிப் பத்திரிகைகளும் செய்து கொண்டிருந்த அட்டகாசத்திற் கோரளவில்லை. சுத்த சத்திய இஸ்லாம் மதத்தின் புத்திரர்களாகிய உங்களைக் காதியானிக் குழாத்தினர் வழி தவறியவர்கள் என்றும், மௌட்டீகம் நிறைந்தவர்கள் என்றும், மூடபக்தி கொண்டவர்கள் என்றும் கருதி வந்ததுடன் இக்கருத்தைப் பற்பல விதமான முறையில் வெளியிட்டு உங்களை அவமதித்துக் கொண்டுமிருந்தனர். இருலோகத்திற்கும் சர்தாரான எம்பிரான் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களுக்குப் பின் எவ்வித நபியும் வரவேண்டிய அவசியமில்லை என்ற இஸ்லாமியக் கொள்கையைப் பலவாறு மறைமுகமாக தாக்கியும் மறுத்தும் கூறி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நபித்துவத்தை அவமதித்து வந்தனர். இக்குழாத்தினரும், இக்குழாத்தினரது பத்திரிகைகளும் தங்களை இஸ்லாத்திற்கு அருந்தொண்டு புரிகின்றவர்கள் என்று கூறிக்கொண்டு உங்களிடத்திலேயே பணம் வாங்கி, உங்கள் பொருளுதவியினாலேயே இஸ்லாத்தின் திரு வேதத்திற்கு விதண்டாவாத வியாக்யானம் செய்து, உங்களது மார்க்க பக்தியை வேறுவழியில் திருப்ப முயற்சி செய்து கொண்டிருந்தனர். "நிச்சயமாக நாம் அதனை இறக்கி வைத்தோம்; இன்னும் நிச்சயமாக நாம் தான் அதனைப் பாதுகாப்பவர்கள்" என்று அன்று இறைவன் அருளிய வேதவாக்கு பொய்யாகுமா? ஒருபோதும் பொய்யாகாது. இறைவனது திருகருணை உங்கள் பாலிருந்தது. மார்க்க பக்தரான சில அறிஞர்களுள்ளத்தில் இவ்வியக்கத்தை எதிர்ப்பதற்கான உணர்ச்சியை இறைவன் யுண்டாக்கினான். அன்னோர் அவ்வல்லோன் கருணையை ஆதாரவாகக் கொண்டு உங்களது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தைச் சென்னையில் நிறுவினர். காதியானி மிர்ஜாயி அஹ்மதிக் கூட்டத்தினர் செய்யும் சூழ்ச்சிகளையும் பொய்ப் பிரசாரத்தையும், இஸ்லாத்தின் வேரைக் கெல்லி எறிந்து விடுவதற்காகச் செய்யும் அவர்களது முயற்சிகளையும் பற்றிப் பத்திரிகை வாயிலாகவும், பிரசாரகர்கள் மூலமாகவும் பிரசாரம் செய்தார்கள். மக்கள் கண் திறந்தனர். தூங்கிக் கொண்டிருந்தவர்கள் விழித்தனர். வீருகொண்டு எழுந்தனர். குலத்தைக்கெடுக்க வந்த கோடரிக் காம்புகளே போன்ற காதி

யானிக் குழாத்தினருக்கு ஆங்காங்கு தக்க வாயாப்புக் கொடுக்கத் தொடங்கினர். ஆகவே, காதியானிகளது கொட்டம் அடங்கிற்று. அவர்கள் மூலை முடுக்குகளில் போய்ப் பதுங்கிக் கொண்டனர். இப்பொழுது அவர்களது சேஷ்டை அத்துணை பகிரங்கமாக இல்லை யென்றாலும், சமயத்தையும் சந்தர்ப்பத்தையும் பார்த்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். எனவே, நாம் இது சமயம் ஏமாற்றமடைந்து விடக் கூடாது. நெருப்புப் பொறி எவ்வளவு அற்பமாக இருந்தாலும் அதனை அவிக்காமல் விட்டுவிடக் கூடாது. மிகவும் அற்பமாக இருக்கிறதே என்று நினைத்து அலக்ஷியம் செய்வோமாயின் அது உள்ளாற கசிந்து பெரு நெருப்பாக மாறிவிடுவதை நாம் அனுபவத்தில் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே கொட்டம் அடங்கிக் கிடக்கிற காதியானிகளை அலக்ஷியம் செய்து விட்டுவோமாயின் நாளை அவர்கள் புத்துயிர் பெற்று வீருடன் எழுந்து நம்மவர் ஈமானைக் கெடுக்க "ஷெய்கு நஜ்தீ" வேஷம் போட்டு வருவது முடியாத காரியமல்ல. ஆகவே, உங்களது ஒத்துழைப்பின் பேரிலும் ஆதரவின் பேரிலும் உங்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கமும், அதன் அருமை மாசிகையும் காதியானிகளது விஷமத்தை அடக்கி ஒடுக்கி விட்டன வாயினும், அவைகளது வேலைகள் இன்னும் முற்றுப் பெற்று விடவில்லை.

மேலும், "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட சில மாதங்களுக்குள்ளாகவே இஷாஅத்தே இஸ்லாமிலும் சிரத்தை எடுத்துக் கொண்டு, இவ்வேலையைக் கவனிக்கப் பிரத்தியேகமான ஒருசபையையும் நிருவியது. அச்சபையின் மூலமாக இன்றுவரை சுமார் 4 ஆயிரம்பேர்கள் வரை இஸ்லாத்தைத் தழுவி இருக்கின்றனர். ஒரு இடத்தில் மாத்திரம் இச்சபை இருந்து வேலை செய்வது போதாதென்பதையும், ஹரிஜனங்கள் பிறமதந்தழுவ முடிவு செய்திருக்கிற சந்தர்ப்பத்தையும் கருதி நமது தமிழ் நாட்டிலுள்ள பல சங்கங்களையும் இதில் சிறத்தை எடுத்துக் கொள்ளும்படித் தூண்டி வந்திருக்கிறது. இதன் பயனாக நம்மவரிலுள்ள பல சங்கங்கள் அநேகம் பேர்களை இஸ்லாத்திற் சேர்த்திருக்கின்றன. இன்னும் சேர்த்தும் வருகின்றன.

மேலும் இந்தியாவிற்கு வெளியிற் சென்று இஸ்லாத்தைப் பிரசாரம் செய்யும் உலகப்பிரசித்தரான மீரட் மௌலானா ஹிஸ் ஹோலினஸ் முஹம்மது அப்துல் அலீம் ஸித்தீக்கி B. A. அவர்களை மூன்று முறை நமது தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்யும்படிச் செய்து மார்க் கோபன்யாசம் செய்வித்ததுடன் அவரது அந்நிய நாட்டு இஸ்லாமியப் பிரசாரத்திற்கு ஆதரவு தேடிக் கொடுத்துமிருக்கிறது.

இவைகளை யல்லாமல் நமது நாட்டில் தலையெடுத்துப் பரவி வந்த கூண்டு, கொடியேற்றம் முதலிய பிதுஅத்தான காரியங்களை நமது சங்கத்தாரும், பிரசாரகர்களும் தங்களது செல்வாக்கினால் சில இடங்களில் நிறுத்தி இருக்கிறார்கள். எவ்வாறாயினும், உங்களது இச்சங்கமும் மாசிகையும் ஆரம்ப முதல் சளைக்காமல் தொண்டாற்றிக் கொண்டே வந்தாலும் அவைகளது வேலைகள் பூர்த்தியாகி விட்டன என்று முடிவு கட்டிவிடுவதற்கில்லை. ஏனெனில், காதியானிகளும், மார்க்கப் புரட்டர்களும் எத்தனையோ வகையில் இஸ்லாத்திற்கு இடரல் செய்ய முயன்று கொண்டே இருக்கின்றனர். சத்திய சன்மார்க்கத்திற்கு இக்குழுக்களால் எவ்விதத் தீங்கும் விளைந்து விடாதென்பது உண்மையானாலும், அவைகளைக் கண்டித்துப் பொது ஜனங்களுக்கு அவர்களுடைய சூழ்ச்சிகளை அறிவிக்க ஒரு ஸ்தாபனம் எப்பொழுதும் தயாராக இருந்து கொண்டிருக்கவேண்டும் என்

பது மிகவும் அவசியமாகும். சத்திய சன்மார்க்கத்தைக் காத்து, அதனை அபி விருத்தி செய்யும் பொறுப்பை இறைவன் ஏற்றுக்கொண்டிருந்தாலும் "நன்மையை ஏவித்தீயதை விலக்கும்படியான ஒரு கூட்டத்தினர் உங்களில் (எப்பொழுதும்) இருக்க வேண்டும்" என்பதாகக் கூறி இருக்கிறான். ஆகவே, உங்களது இச்சங்கமும் இத் தெய்வ கட்டளைக் கேற்ப நன்மையை ஏவித் தீயதை விலக்கும் விஷயத்தில் பத்திரிகை மூலமாகவும் துண்டுப்பிரசுரவாயிலாகவும் பிரசாரகர்கள் மூலமாகவும் தன்னாலான சகல முயற்சியையும் செய்திருக்கிறது. ஆகவே, சன்மார்க்க பக்தர்களும், அபிமானிகளும் உங்களது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தையும், அதன் பத்திரிகையையும் ஆதரித்து அபிவிருத்தி செய்ய முயற்சி எடுத்துக்கொள்வது மிகவும் அவசிய மாகும். இக்காலத்தில் எக்காரியமும் பணச் செலவில்லாமல் நடைபெறுவதில்லை. உங்கள் சார்பாக உங்களுக்காக உழைக்கும் உங்களது இச் சங்கம் செய்யும் காரியங்களுக்கும் ஏராளமான பணத்தைச் செலவு செய்யவேண்டியிருக்கிறது. பணம் இல்லாவிடில் எவ்வேலையும் செய்ய முடியாது என்பதை நீங்கள் எல்லீரும் நன்கறிவீர்கள். எனவே, உங்களது இச்சங்கத்திற்கு பணவருவாய்க்குரிய மார்க்கம் யாது? இத்தியாதி காரியங்களைச் செய்வதற்குப் பணம் எங்கிருந்து வருகிறது? என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் சங்கத்தால் நடத்தப்படும் சஞ்சிகைக்குச் சந்தாவாகக் கிடைக்கும் பணத்தையும் அபிமானிகளது நன் கொடையையும் தவிர வேறுவிதமான ஏற்பாடு ஒன்றுமில்லை என்பதை உங்களுக் கறிவித்துக் கொள்கிறோம். ஆகவே, அன்பர்களும் அபிமானிகளும் தங்களது இச்சஞ்சிகைக்குப் பல புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தும், நன்கொடைகள் ஈந்தும் இச்சங்கத்தின் பொருளாதார நிலைமையைப் பலப்படுத்தி மாசிகை இஸ்லாத்திற்கு அருஞ் சேவை புரியக் கூடியதாய் சிறந்து விளங்கச் செய்வார்களாக.

நமது தொழுகையைப் பற்றி மேனாட்டினர்

ரேவரன்ட் லேபான்

பிரபல தத்துவ சாஸ்திரியான ரேவரன்ட் லேபான் என்பவர் தொழுகையைப்பற்றி ஆராய்ச்சி செய்து பின்வருமாறு எழுதி இருக்கிறார் :—

"நான் பல முறைகளிலும் கிறிஸ்துவர், யூதர், இஸ்லாமியரது தொழுகைகளைச் சீர்தூக்கிப் பார்த்திருக்கிறேன். இவைகளில் கடைசியில் சொல்லப்பட்டதாகிய முஸ்லிம்களது தொழுகைதான் மிகவும் சிறந்ததாக இருக்கிறது என்று தெரியவருகிறது. இஸ்லாமியரின் ஒரு தொழுகையானது அநேகம் வணக்கங்கள் ஒன்று சேர்ந்ததாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். முஸ்லிம்களது தொழுகையில் இறைவனது புகழ், ஸ்தோத்திரம், பரிசுத்தத் தன்மையை ஒப்புக் கொள்ளுதல், அவனது தலைமைத் தனத்தை அங்கிகரித்தல் ஆகியவைகளிருப்பதுடன், பிரார்த்தனை, மிகவும் பணிவுடன் கெஞ்சிக் கேட்குதல், ஆகியவைகளும் இருக்கின்றன. பணிவு, தாழ்மை ஆகியவைகள் மிகவும் நூதனமான முறையில் செய்கையில் காண்பிக்கப்படுகின்றன. முஸ்லிம்களது தொழுகையைப் பார்ப்பதற்காக நான் அலக்ஜாண்டரியாவிலுள்ள (எகிப்து) ஜாமிஆ மஸ்ஜிதுக்கு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் செல்வ

துண்டு. நான் கத்தீப்சாகிப் ஓதுகிற உணர்ச்சி ததும்பும் குத்பா, ஸப்புகள் வரிசை வரிசையாக அணி வகுத்தது போலிருத்தல், தொழுகையில் ஜனங்கள் செய்யும் ருக்கூஉ, ஸுஜூது முதலிய வைகளைப்பற்றி கவனித்தபோது எனது இருதயத்தில் ஒருவிதமான நூதன உணர்ச்சி உண்டாயிற்று. அவ்வுணர்ச்சியை விவரிக்க நாவால் முடியாது. இஸ்லாம் என்னைத் தன் பால் அழைத்துக் கொண்டிருக்கிறது என்றும், அதன் வணக்கத்தின் மனோரம்மியமான காக்ஷி எனது ஆன்மாவைக் கைப்பற்றிக் கொண்டிருக் கிறது என்றும் தான் கருதுகிறேன்.

(தி லெக்ச்சர் ஆப் ரிலிஜியன்ஸ் பக்கம்-47)

சேய்ன்ட் ஹெய்லர்

ரோமாபுரியிலுள்ள பிரபல பாதிரியாரான செய்ன்ட் ஹெய்லர் "திபிரே" (பிரார்த்தனை) என்ற தம்முடைய புத்தகத்தில் பின்வருமாறு எழுதி இருக்கிறார் :—

"நான் இஸ்லாமிய நாட்டில் எங்கெங்கு சென்றேனோ அங்கெல்லாம் நான் முஸ்லிம்களது வணக்க ஸ்தலங்களுக்கு அவசியம் சென்று பார்ப்பது வழக்கம். இதனால் இஸ்லாமியத் தொழுகையைப் பற்றிக் கவனம் செய்யச் சந் தர்ப்பம் கிடைத்தது. தொழுகை மிகவும் சிறந்த வணக்கம் என்பது எனதபிப்பிராயம். கடவுளை வணங்குகிற ஒருவர் தமது வேலை வெட்டிகளை முடித்துக்கொண்டு இறைவனின் திருப்தியை நாடி அவனது புகழையும் ஸ்தோத் திரத்தையும் பாடுவாராயின் அவரது ஆன்மா உண்மையில் பரவச மடைந்துவிடுகிறது. அது பொழுது அவர் மிகவும் நெருங்கியவராகி விடுகிறார். ஏனெனில், அவர் தனது சக்தி களெல்லாவற்றுடனும் இறைவனது தர்பாரில் தலைசாய்த்து ஸுஜூது செய்கிறார். இதனால், ஆத்மா சுத்த மடைகின்றது. அகத்தூய்மை ஏற்படுகின்றது. தொழுகையாகிய இவ்வணக் கத்தில் இப்பிரயோஜனங்கள் அல்லாமல் தேகப்பயிற்சியும் குறிப்பிடத்தக்க விதமாக இருக்கிறது. இதனால் ஸ்தூலத்திற்கு பலம் ஏற்படுகிறது. தொழுபவர்கள் சோம்பேறிகளா கவும் மந்தம் பிடித்தவர்களாகவு மிருக்க நான் பார்த்ததில்லை. முக்கியமாக காலைத் தொழு கைக்காக முழிப்பதுதான் மிகவும் அபூர்வமான சக்தியைத் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக் கிறது."

ஜேம்ஸ் முல்லர்

ரெவரன்ட் ஜேம்ஸ் முல்லர் என்பவர் பின் வருமாறு எழுதி இருக்கிறார் :—

"மத துவேஷம்,மத வைராக்கியம் ஆகியவை களின் மூலமாக ஒரு விஷயத்தை நிர்வகிப்ப தோ, கூறுவதோ மிக எளிது. ஆனால், உண்மை சொல்வது மிகப் பளுவு. நான் தற்போது மிகப்பளுவாகவும் கஷ்டமாகவுமுள்ள விஷயத் தையே எடுத்துக்கொள்கிறேன். நான் அநேகம் தடவைகளில் எனது முஹம்மதிய நண்பர்களு டன் சம்பாஷணை செய்திருக்கிறேன். அவர்க ளது மதக்கொள்கைகளை ஆராய்ச்சி செய்யும் விஷயத்தில் ஈடுபட்டிருந்திருக்கிறேன். 13 நூற் றூண்டுகள் சென்றுபோனபின்னரும்கூட அவர் கள் தங்களது நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் விசுவாசத்துடன் கீழ்ப்படிபவர்களா யிருக்கி றூர்கள். இன்னும் அந்த நபியவர்களது ஒவ் வொருகாரியத்தையும் மிகவும் நேசிக்கின்றனர். கிறிஸ்துவ உலகத்திற்கு இந்த அபிமானத்தி லிருந்து படித்துக்கொள்ள வேண்டிய பாட மிருந்து கொண்டிருக்கிறது.

இஸ்லாமிய மக்கள் வாழும் பகுதியி லுள்ள பெரும்பாலானபாகம் இன்றும்கூட ஒரு முக்கியமான வணக்கத்தை நிறைவேற்றி வருகி றது. அதற்குத் "தொழுகை" என்று பெயர். தொழுகையானது தீமைகளையும் மானக்கேடா னவைகளையும் விலக்குகிறது என்பது முஸ்லிம் களின் மதநம்பிக்கை. முஹம்மதியருடைய இந்த நம்பிக்கை சரியில்லாத ஒரு நம்பிக்கை யாகவே வெளிப்பார்வைக்குத் தோன்று கிறது. ஏனெனில், தொழுபவரிலும் பெரும் பாலர் தீமைகள் செய்வதில் ஈடு பட்டவர்க ளாகக் காணப்படுகின்றனர். ஆனால், அனுபவத் தில் தெரியவருவதென்ன வென்றால், தினசரி நாள் ஒன்றுக்கு ஐந்து முறை அதாவது ஒரு மாதத்தில் நூற்றைம்பது முறை தன திறைவனிடம், பாபம் செய்வதில்லை என்றும் பயபக்தியாக இருப்பதாகவும் வாக்குதத்தம் செய்து இதற்கு முன் நிகழ்ந்து விட்ட பாபங் களுக்காகத் தனது வருத்தத்தைத் தெரிவித்து அழிவிரக்கம் கொள்ளும் ஒருவர், இன்றைக்கே இல்லை யென்றாலும் இனி ஒருநாளில் தனது வாக்கு தத்தத்தில் பூர்த்தியானவராக அதாவது உண்மையிலேயே பயபக்தியுள்ளவராக ஆகிவிடு வார் என்பதிற் சந்தேகமில்லை."

கிங்

மிஸ்டர் எம். ஸீ. கிங் என்பவர் பின்வருமாறு எழுதி இருக்கிறார் :—

"உலக சம்மந்தமான வேலைகளிலும், வேடிக்கை விளையாட்டுகளிலும் மனிதன் ஈடுபடும் போது தனது அகத்தைச் சீர்திருத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இருப்பதில்லை. வேறுசில விளையாட்டுக் காரியங்களால் மனிதன் தன்னை சிருஷ்டித்தவனை ஞாபகம் செய்து கொள்ளவேண்டும் என்பதையே மறந்து விடுகின்றான். இது மனித இயற்கையில் இருந்துவருகிற ஒரு தன்மையாகும். இவ்வித நிலைமையில், இஸ்லாம் தனது பக்தர்கள் மீது தினசரி இரவு பகல் இருகாலங்களிலுமாக ஐந்து வேளை தொழவேண்டும் என்று கடமையான விதியாக்கி வைத்திருப்பதும், எவ்வித நிலைமையிலும் இம் முக்கியமான கடமையை நிறைவேற்றிப்போட வேண்டும் என்று நிர்ப்பந்தித்திருப்பதுமானது, இஸ்லாம் மதத்திலுள்ள இத்தொழுகையானது மிகவும் சிறந்தமுறையில் மக்களுக்கு ஆண்டவன் பால் வழிகாட்டுகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியவில்லை. உண்மையாகவே விசுவாசம் கொண்டுள்ள மார்க்கபக்தன் ஒருவன் சகலவிதமான அல்லல்களையும் துறந்துவிட்டு, அந்தரங்க சுத்தியும் அபிமானமும் கொண்டு தன்னை சிருஷ்டித்த அந்த முதல்வனை ஞாபகம் செய்து, அவனது பரிசுத்தத்தன்மைகளைக் கூறி அவனை ஸ்தோத்திரம் செய்து, அவனது திருப்தியை விழைந்தவனாக சர்வ வல்லோனாகிய அத்தூயவனிடம் உதவி தேடுவானாயின் அவனது ஆன்மாவானது பரிசுத்தமான ஒரு நிலைமையை அடைந்து விடுகிறது என்பது உறுதி. இன்னும் அவனது மனத்தையும் இருதயத்தையும் விட்டு சுயநலம், இச்சையைப் பின்பற்றல் என்ற ஷைத்தானிய தன்மை தூரமாகிவிடுகிறது.

உன்னத பதவியிலுள்ள முஸ்லிம்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் தங்களது செல்வாக்கு, அதிகாரம் ஆகியவைகளின் மூலமாக ஒரு உயர்ந்த பதவியையும் உன்னத ஸ்திதியையும் பெற்றிருக்கிறார்கள். தாழ்ந்த அந்தஸ்திலுள்ளவர்கள் அந்தப் பெரிய அந்தஸ்திலுள்ளவருடன் சம்பாஷணை செய்வதற்குக் கூட தகுதியில்லாதவராக இருக்கின்றார்கள். அப்படி இருந்தும் தொழுகையின் நேரம் வந்துவிட்டால் பெரிய அந்தஸ்திலுள்ள இந்த மனிதர் மஸ்ஜிதுக்குள் அதிவேகமாகச் சென்று, தனக்கு எவ்விதத்திலும் அறிமுகமில்லாத அந்தத்தாழ்ந்த மனிதர்களுடன் தோளோடுதோள் சேர்த்து நின்று தொழுகையை நிறைவேற்றுகிறார். இந்தக் காக்ஷியைப் பார்ப்பதிலிருந்து இவ்வணக்கத்தின் மூலம் தாழ்மை, சாமான்யத்தன்மை, அடக்கம் பணிவு ஆகியவைகள் கற்பிக்கப்படுகின்றன என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை என்பதும், இதில் சமத்துவத்தின் உயரிய நிலை பிரத்தியக்ஷமாகத் தென்படுகிறது என்பதும் வெளியாகிறது. இஸ்லாமிய றஸூல் (ஸல்) மிகவும் நூதனமான தோரணையில் அரசனையும் ஆண்டியையும், பிரபுவையும் பிச்சைக்காரனையும், வந்தவேயும் இரப்போரையும் ஒரு வரிசையில் ஒன்று சேர்த்துவிட்டார் என்பதும், மிகவும், பொருத்தமான வகையில், அகம்பாவம் தற்பெருமை என்ற மாய முடிச்சை உடைத்தெறிந்துவிட்டார் என்பதும் உண்மையாகும். எனவே தொழுகை மிகவும் சிறந்ததோர் வணக்கமாகும் என்பதை நான் அங்கீகரிக்கின்றேன்."

நேயர்காள்! இவ்வாறு பிரபல அறிஞர்களால் புகழ்ந்து கூறப்படும் தொழுகையை நம்மவர் மறந்திருப்பதேனோ? இதனை நம் நேயர்கள் கவனிப்பார்களாக.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

அவ்விடத்திலுள்ள நமது சந்தா நேயர்களி லனேகர் இதுவரை தங்கள் சந்தா பாக்கியை செலுத்தாமலே இருந்துவருகின்றனர். வி. பி. செய்வதுகொண்டு சந்தாதார்கட்கு வீண் செலவேற்படுகிறது. ஆதலால் சிலோன் பகுதியிலுள்ள நேயர்கள் தங்கள் பாக்கியை உடனே மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு கோருகிறோம். இல்லையேல் அடுத்த ஜனவரி மாதத்திய இதழ் அன்னோருக்கு வி. பி. செய்து அனுப்பப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

முஸ்லிம்கள் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள்

சுமார் 30-வருஷங்களுக்கு முன்னர் ஜப்பானியரது நிலைமை, இன்று நமது நிலைமை எவ்வளவு தாழ்ந்ததாக இருக்கிறதோ அவ்வளவுக்குத் தாழ்ந்ததாக இருந்தது. ஆனால், ஜப்பானியர் ஒரே மூச்சாகக் கண்ணைத் திறந்து உலகத்தின் நிலைமையைப் பார்த்தனர். ஆண்பிள்ளை சிங்கங்களைப்போல் தங்களது கடமைகள் பொறுப்புகள் யாவை என்பதைப்பற்றி முடிவு கட்டிக் கொண்டனர். அச்சமூகம் முழுவதுமே அக்கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதாக இடுப்புக் கட்டிக்கொண்டது. இன்று ஜப்பானின் பலமும் வல்லமையும் உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டது. ஜப்பானியர்களைப்பற்றிய பயமும் கிலியும் கொள்ளாத அரசாங்கம் இக்குவலயத்திலெங்குமில்லை.

மகாயுத்தம் முடிவடைந்த பின்னர் ஜெர்மனியின் வாழ்க்கை இயன்றமட்டில் அழிக்கப்பட்டது. ஆனால், ஜெர்மனியிலுள்ள கடமையை புணர்ந்த பொறுப்பு வாய்ந்தவர்கள் எவ்விதத்திலும் தங்கள் தேசத்தின் ஜீவியத்தை அழியவிடவில்லை. பொறுப்பை யுணர்ந்து இந்தத் தன்மையின் பயனாக சென்ற 15-வருஷ காலத்திற்குள் ஜெர்மனி இழந்துவிட்ட தனது சக்திகளை எல்லாம் திரும்பவும் திரட்டிக் கொண்டது. இப்பொழுது ஜெர்மனி என்ற பெயரைக் கேட்டவுடன் உலகத்திலுள்ள அரசாங்கங்களெல்லாம் நடுங்குகின்றன. உலகத்திலுள்ள மிகப் பெரிய அரசாங்கமாகிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், ஜெர்மனியர் செய்யும் தற்போதைய கலாட்டாக்கள் சமத்துவத்தை அடையவேண்டும் என்பதற்காகவன்று ; ஐரோப்பா முழுவதிலும் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதற்காகவே என்று கருதுகிறது.

ருஷ்யாவில் ஜார் சக்கிரவர்த்திகள் ஆட்சி புரிந்துகொண்டிருந்த காலத்தில் அங்கு எட்டு அல்லது பத்து சதவிகித முள்ளவர்கள் தான் படித்தவர்களாக இருந்தனர். பிறகு, ஜார் சக்கிரவர்த்தியின் சிம்மாசனம் புரட்டப்பட்ட பின்னர் ருஷ்யர்கள் கல்வி விஷயத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். இந்தப் பதினேழு பதினெட்டு வருஷ காலத்திற்குள் ருஷியாவில் தொண்ணூறு சதவிகிதம் ஜனங்கள் கல்வியில் முன்னேறிவிட்டனர் என்பதாகப் புதிதாகக் கிடைத்த ரிப்போர்ட்டிலிருந்து தெரியவருகிறது. தற்போது 145-லக்ஷம் ருஷ்ய பாலர்கள் ஸ்கூல்களில் கல்விபயின்று கொண்டிருப்பதாகவும், சென்ற வருஷத்தில் 4300-புதிய ஸ்கூல்கள் திறக்கப் பட்டதாகவும், 52-ஆயிரம் உபாத்தியாயர்கள் பிரைமரி ஸ்கூல்களில் கல்வி போதித்துக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

முஸ்லிம்களே! உங்களுக்கும் ஜப்பானியர், ஜெர்மனியர், ருஷ்யர்களது பாட்டைகள் திறந்து தானிருக்கின்றன. உங்களது தாழ்ந்த இந்நிலையை எங்ஙனம் உயர்த்த முடியும் என்று ஏங்கித் தவிக்கவேண்டியதில்லை. ஏங்கித் தவிப்பதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை. நீங்கள் இன்றையதினமே உங்களது கடமைகளை உணர்ந்து கிரியாம்சையில் ஈடுபட்டுழைக்க முன் வருவீர்களாயின் பத்து வருஷ காலத்திற்குள் உங்களது வீழ்ச்சியடைந்த உலகத்தின் நிறம் வேறுவிதமாகமாறிவிடும்.

இஸ்லாத்தின் நற்பாக்கிய புதல்வர்காள்! நித்திரையை விட்டெழுங்கள். முயற்சி செய்யுங்கள். இறைவனுதவி உங்களின் முயற்சியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

புனித ரமலான் மாதத்தில் தான தருமங்கள் செய்வது சாலச்சிறந்ததாகும். இதனை யுன்னியே இம்மாதத்தில் 'ஜகாத்' மிகுதமாய் வினியோகஞ் செய்யப்படுகிறது.

உருது பாஷையும் ஹிந்திப் பாஷையும்.

நாகப்பூரில் நடைபெற்ற ஹிந்தி பிரசார சமிதியின் தலைவர் செய்த பிரசங்கத்தில் தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபை இதுவரை 6-லக்ஷம் பேருக்கு ஹிந்தியைக் கற்றுக் கொடுத்திருப்பதாகவும், ஹிந்திப் பாஷையில் 11-லக்ஷ புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டிருப்பதாகவும், ஹிந்தியைப் பரப்புவதற்காக இந்தச் சபை இதுவரை 60-லக்ஷம் ரூபாய்களைச் செலவு செய்திருப்பதாகவும் தகவல் கூறி இருக்கிறார்.

உருது பாஷையை ஆதரிப்பவர்கள் இதுவரை என்ன செய்திருக்கிறார்கள் என்று நாம் வினவுகின்றோம். தேச மெங்கும் உருது, உருது என்று முறையிடுவதற்குக் குறைவில்லை. ஆனால், இந்த வாய்வீச்சு இன்னமும் கிரியாம்சையில் கொண்டுவரப் படவில்லை. பத்திரிகைகளில் உருது பாஷையைப்பற்றி வியாசம் எழுதி விடுதல், மகாநாடுகளைக் கூட்டுவித்தல், ஆலோசனை செய்தல், தீர்மானங்களை நிறைவேற்றுதல் மாத்திரமே உருது பாஷையை ஆதரித்தல் என்பதாக நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். இதுவரை நாம் இதனைப் பார்க்கினும் அதிகமாக ஒன்றுஞ் செய்து விடவுல்லை. அதிலும், நாம் செய்யவேண்டியது என்ன? என்பதைத் தெரிந்து கொள்ளக்கூட நாம் இன்றுவரை முயலாதது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும்.

நாம் உருது பாஷைக்காக ஏதேனும் உருப்படியான வேலையைச் செய்ய விரும்புவோமாயின் ஹிந்தி பிரசார சபையின் வேலையிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். வேலை இரண்டு மட்டிலும் தானிருக்கிறது. உருது தெரிந்து கொள்ளாதவர்களுக்கு உருது பாஷையைக் கற்பிக்க வேண்டும், உருது பாஷையில் மிகச் சிறந்த நூல்களை வெளியிடவேண்டும். உருது பாஷையை ஆதரித்து வளர்த்தல் என்ற விஷயத்தில் இவ்விரண்டையும் பார்க்கினும் சிறந்த மூன்றாவது வேலை வேறொன்றுமில்லை. உருது அபிவிருத்திக்கு மிகவும் இன்றியமையாதனவாகிய இவ்விரண்டு வேலைகளையும் நாம் கொஞ்சம் கூடச் செய்யவில்லை. நாம் செய்வதெல்லாம் வெறும் தீர்மானங்களும் ஆலோசனைகளுமே யாகும். இவைகளினால் உருது பாஷைக்கு எவ்வித வளர்ச்சியோ அபிவிருத்தியோ கிடையாது. இறைவன் தான் நம்முடைய இந்நிலைமையிலிருந்து நம்மைக் காப்பாற்றி நமக்குச் சரியான வழியைக் காண்பிக்க வேண்டும்.

ருசிகரமான விஷயங்கள்

அமெரிக்காவின் யுத்த முஸ்திப்பு

அமெரிக்கா ஏதோ ஒரு அரசாங்கத்தை எதிர்த்து யுத்தம் செய்வதற்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆனால், தங்களுடைய விரோதி யார்? இனி வருங்காலத்தில் எவரை எதிர்த்து யுத்தம் செய்யும்படி நேரிடும் என்பதைஅறிந்துகொள்ள அமெரிக்கபொதுமக்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்குள்ள விவேகிகளான ராஜதந்திரிகள் தங்களது விரோதியின் பெயரைக் கூறுவதற்குக் கூட இஷ்டப்படுகின்றனரில்லை. இவர்களது இப்போக்கும்கூட யுத்தகால தந்திர முறைகளிலொன்றாகும்.

ஜெர்மனியின் பயங்கரமான முஸ்தீப்பு

ஜெர்மன் அரசாங்கமும், ஜெர்மன் மக்களும் தங்களது நோக்கங்களை உலகில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தி விட்டனர். ஹிட்லரது நெற்றியிலுள்ள கோடுகள் வரப்போகிற உலக

மகாயுத்தத் திட்டத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறது.

"இன்றைய ஜெர்மனி மிகவும் விசாலமான அளவிற்கு யுத்த தளவாடம் சேகரிப்பதில் பணத்தைச் செலவு செய்து வருகிறது. அதில் ஒரு வாடையேனும் உலகத்திற்குத் தெரிந்து விடுமாயின் உலகத்தைய அமைதியும் சுகமும், நித்திரை முதலிய யாவும் புகைபோல புகைந் தோடிவிடும். ஜெர்மன் மந்திரி சபை யுத்த செலவுக்காக ஒரு வருஷத்திற்கு மட்டிலும் 30-கோடியை அதிகப்படுத்தி இருக்கிறது என்பது மட்டிலும்தான் நமக்குத் தெரிந்திருக்கிறது" என்பதாக, லண்டன் டெய்லி ஹெரால்ட் பத்திரிகையின் பொருளாதார ஆசிரியர் கூறி இருப்பது முற்றிலும் சரியேயாகும்.

சிறிய அரசாங்கங்கள்

யுத்த தளவாடங்களைச் சேகரிக்கும் விஷயத்தில் சிறிய அரசாங்கங்கள் பெரிய அரசாங்கங்களுக்கு இளைத்தனவாயில்லை. பால்கன் அரசாங்கங்களில் தன்னுடைய ராணுவ வசதி எல்லாவற்றிலும் முதன்மையாக இருக்கவேண்டுமென ரொமேனியா முயற்சி செய்து கொண்டிருக்கிறது. தற்போது அதன் வருஷாந்திரச் செலவு யுத்த தளவாடங்களுக்காக 22½-கோடி டாலர்வரை பெருகிவிட்டது. கிரீஸ் தேசத்திற்கு இச்செய்தி தெரிய வந்தபோது அதுவும் இந்தப் போட்டியில் இறங்கி வரவு செலவு பட்ஜட்டில் ராணுவச் செலவுக்காக அநேகம் லக்ஷம் டாலர்களை அதிகப்படுத்தி இருக்கிறது.

சமாதானம் விரும்பும் தேசம்

சர்வதேச சங்கத்தில் வைக்கப்பட்டுள்ள ராணுவப் புள்ளி விபரத்திலிருந்து, ராணுவக் காரியங்களுக்காக மிகவும் குறைந்த தொகையைச் செலவழித்திருப்பது கனடா ஒன்றுதான் என்பதாகத் தெரியவருகிறது. அதாவது நபர் ஒன்றுக்கு 124-டாலர் விகிதம் ராணுவச் சிப்பாய்களுக்குச் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

யுத்தச் செலவு

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள இதர டொமனியன்களில் நியூ ஜீலண்டு நபர் 1-க்கு 150-டாலர் செலவு செய்திருக்கிறது. இதனைத் தவிர இதர சில தேசங்களின் புள்ளி விபரம் வருமாறு.

தேசம்		எண்ணிக்கை
டென்மார்க்கு—நபர் 1-க்கு		218 டாலர்.
தெற்காப்பிரிக்கா	,,	220 ,,
ஆஸ்டிரேலியா	,,	240 ,,
ஜப்பான்	,,	370 ,,
பெல்ஜியம்	,,	410 ,,
அமெரிக்கா	,,	560 ,,
ஸ்விட்ஜர்லாந்து	,,	600 ,,
இத்தாலி	,,	800 ,,
இங்கிலாந்து, அயர்லாந்து	,,	950 ,,
பிரான்சு	,,	1480 ,,

ஒரு நாயின் நல்லறிவு

மனிதர்களைப்போல் மிருகங்களும் விஷயத்தைக் கிரகிக்கும் சக்தி பெற்றிருக்கின்றன என்பதைச் சில சமயங்களில் காண்பித்துக் கொள்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள மேரிலாண்டு என்னுமிடத்தில் 6-வயதுள்ள ஒரு நாய்க்குக்காது நோயுண்டாயிற்று. அந்த நாயின் எஜமான் அதனை டாக்டரிடம் கொண்டு சென்றார். அந்த நாயைச் சோதித்து டாக்டர் அதன் காதில் மருந்தை ஊற்றினர். அன்று முதல் அந்நாய் தினசரி குறிப்பிட்ட அதே நேரத்தில் டாக்டரிடம் சென்று மருந்து போட்டபின் வீடு திரும்பி வந்துகொண்டிருந்தது. 2-வாரங்களுக்குப்பின் நாய்க்கு அந்நோய் முற்றிலும் குணமாகிவிட்டதால் அது டாக்டரிடம் செல்வதை நிறுத்திக்கொண்டது.

ஒட்டகையின் விவேகம்

ஐக்கிய நாடுகளிலுள்ள மிருக காக்ஷிசாலை ஒன்றில் இருக்கிற ஒரு ஒட்டகைக்குப் பல்லில் கெடுதலேற்பட்டுவிட்டது. அதன் காரணமாக அதனுடைய வாயிலிருந்து சீயும் ரத்தமும் வடிய வாரம்பித்தன. அவ்வொட்டகை நோய் பொறுக்க மாட்டாமல் கூச்சலிட்டுக் கொண்டிருந்தது. இதற்கு வைத்திய சிகிச்சைசெய்ய முயன்றால் வயித்தியம் செய்யவரும் டாக்டரைக் கொன்றுவிடும் என்று அம்மிருகக் காக்ஷிச்சாலையின் அதிகாரிகள் பயந்து கொண்டிருந்தனர். ஆனல், டாக்டர் வந்து அதன் வாயில் கையை வைத்தவுடன் அவ்வொட்டகை தானகை வாயைத் திறந்து கொண்டதுடன், கண்ணை மூடிக்கொண்டு நிசப்தமாக நின்றதாம். எனவே, ஒட்டகை வைத்திய சிகிச்சை செய்து கொள்வதற்கு முன்னரிருந்தே தயாராக இருந்தது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

டாக்டர் அவ்வொட்டகையின் அப்பல்லை எடுத்துப் போட்டார். ஆனால், அவ்வொட்டகை கொஞ்சமும் அசையவில்லை.

மறந்துவிட்டார்

மார்க்காட் வீன் என்பவர் பிரபல நூலாசிரியர். ஆனால், அவருக்கு மறதி அதிகம். அவருக்கு எந்தச் செய்தியும் ஞாபகத்திலிருப்பதில்லை. ஒருமுறை அவரது புதல்வன் நோய் வாய்ப்பட்டான். வேலைக்காரன் மருந்து வாங்கி வருவதற்காக டாக்டரிடம் செல்லப் புறப்பட்டபோது அந்த நூலாசிரியர் அவ்வேலைக்காரனைப்போக விடவில்லை. அவரே டாக்டரிடம் நேரில் சென்று மருந்து வாங்கி வருவதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்றார். வழியில் ஒரு நண்பரைச் சந்தித்து, அவருடன் பேசிக்கொண்டே தமது வீட்டிற்கு அவரை அழைத்து வந்தார். மூன்று மணி நேரம் கழிந்த பின்னர் மருந்து வாங்காமல் வந்துவிட்டது ஞாபகத்திற்கு வந்தது. அவசரம் அவசரமாக டாக்டரிடம் வந்து மருந்து கேட்டபோது அவரது வேலைக்காரன் வந்து மருந்துவாங்கிச் சென்று இரண்டு மணி நேரமாயிற்றென்பது தெரிய வந்தது.

முத்து உண்டாகுவ தெப்படி ?

சமுத்திரத்திலுள்ள சிப்பிகளில் மழைத்துளி விழுந்தவுடன் சிப்பியின் வாய் அடைபட்டு விடுகிறதென்றும், அப்பால் சிப்பிக்குள் விழுந்த அம் மழைத்துளி முத்தாகி விடுகிறது என்றும் கருதப்பட்டு வருகிறது. இப்பொழுது ஜப்பானியர்கள் இதன் உற்பத்தியைப் பற்றிக் கண்டு பிடித்திருப்பது இவ்வபிப்பிராயத்தை அடியுடன் மறுப்பதாக இருக்கிறது.

சிப்பி சமுத்திரத்திற்குள்ளிருக்கும்போது அதற்குள் ரபூனட் ஆப் லைம் என்னும் சக்தி ஒன்று சேர்ந்துவிடுகிறது. இச்சக்தியின் காரணமாகவே சிப்பியும்கூடப் பெரிதாக வளர்கின்றது. பிறகு, 'அந்தச் சிப்பியே முத்தாக மாறுதலடைகிறது என்பதாக ஜப்பானியர் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே, ஜப்பானியர் இப்பொழுது இயற்கை முத்திற்கு பதிலாக செயற்கை முத்துச் செய்ய வாரம்பித்து விட்டனர்.

நரகத்துப் பறவை

ஒரு துரை 'டர்க்கிஷ்பாத்' எடுத்துக்கொண்டார். ஆகவே, அவருக்கு அவ்வறையிலேயே நித்திரை வந்துவிட்டது. அதற்குள்ளாக அத்துரையின் நண்பர்களிலொருவர் அங்கு சென்றார். துரைமகனார் நிர்வாணமாகத் தூங்குவதைப் பார்த்தார். பரிகசிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டார். யாது செய்வோமென்று யோசித்தார். கருப்பு வார்னிஷைக் கொண்டு வந்து அவர் தேகத்தில் பூசி பறவையின் மயிர்களையும் அவர்மீது ஒட்ட வைத்து விட்டுவிட்டு, பக்கத்தில் ஒளிந்து கொண்டார். கொஞ்சநேரத்திற்குப்பின் "டர்க்கிஷ்பாத்" எடுத்துக்கொண்ட துரைமகனார் துயிலெழுந்தார். கண்ணாடியின் முன் சென்று தன்னைப் பார்த்தபோது தனது நிறமே வேறுமாதிரியாக மாறி இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார், பிரமித்தார், பரதவித்தார். ஐயோ? யான் நரகத்திற் கல்லவா சென்றுவிட்டேன்? கரும் பறவையின் வடிவத்திலன்றோ ஆகிவிட்டேன்? என்று கதறிப் புலம்பினர். இதனைக் கேட்ட அந்த நண்பர் கொல்லென்று சிரித்துக்கொண்டு அவரண்டை வந்தார், விஷயம் புரிந்துவிட்டது.

ஆகாய மண்டல ஆராய்ச்சி

ஆகாய விமானங்களிலேறி உயரப் பறந்து ஆகாயத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. பூமியில் மிகவும் கொஞ்சமாக இருக்கிற ஹேலம் என்னும் வாயுவை பத்து மைலுக்கு அப்பால் ஆகாயத்தில் விட்டால் அது எவ்விதமாக ஆகுகிறது என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ள இப்பொழுது முயற்சி நடைபெற்று வருகிறது. இதற்கென தயார் செய்யப்பட்டுள்ள விமானம் ஆகாயத்தில் பத்து மைல்களுக்கு அப்பால் சென்று தானாக வெடித்துவிடுகிறது. அதற்குள்ளிருந்து சிறு சிறு விமானங்கள் வெளிக்கிளம்பி பூமியை நோக்கித் திரும்புகின்றன. ஆனால், அவ்விமானங்களில் ஆகாயம் நிறப்பப்பட்டு, அவைகளது வாய்தானாக மூடிக்கொள்ளும்படியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இவ்விமானங்களின் மூலமாக மழைகாலத்தில் மின்னொளி எவ்விதம் உண்டாகிறது என்பதைப் பற்றியும் தெரிந்துகொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

கடல் வாசம்

அப்துர் ரஹ்மான் பஜ்லு என்பவர் எகிப்தில் பிறந்தவர். ஆனால், இப்பொழுது அவர் வசிப்

பதற்கு எந்த தேசமும் இடம் கொடுப்பதில்லை. அவர் ஐரோப்பாவிலுள்ள எல்லா தேசங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டார். மூன்று மாதங்களுக்கு முன்னர் கிரீஸ் தலைநகரான எதென்ஸ் நகரில் குடியிருந்தார். பிறகு அவருக்கு, பிறந்த நாடாகிய எகிப்து செல்ல வேண்டுமென்ற விரும்பமுண்டாகி, எகிப்திற்குப் புறப்பட்டு வந்தார். ஆனால், அலெக்ஜாந்தரியா துறைமுகத்திற்குக் கப்பல் வந்தவுடன், அவரை எகிப்தில் கால் வைக்கக்கூடாது என்று கூறி திருப்பி அனுப்பப்பட்டது. அவர் மறுபடியும் கிரீஸ் தேசத்திற்குத் திரும்பிவந்தார். கிரேக்க அரசாங்கம் அவரைத் தனது ராஜ்யத்திற்குள் அடியெடுத்து வைக்க அனுமதிக்கவில்லை. ஆகவே, இப்பொழுது அவர் கரையில் வசிக்காமல் கடலில் கப்பல் பிரயாணத்திலேயே அலைந்து கொண்டிருக்கிறார்.

மனைவி விற்பனை

இங்கிலாந்தில் சில காலத்திற்கு முன்னர் மனைவிகள் விற்பனை சகஜமாக நடைபெற்று வந்தது. 1859-ம் வருஷத்தில் உட்லே என்ற விடத்தில் மனைவி விற்பனை ஒன்று நிகழ்ந்தது. அதாவது ஒருவர் தனது மனைவியை 6-பென்சுக்கு வேறொருவருக்கு விற்பனை செய்துவிட்டார்.

45-பவுன் பூட்ஸ்

பாரிசிலுள்ள பூட்ஸ் வியாபாரி ஒருவர் ஒரு ஜோடி பூட்ஸுக்கு 45-பவுன் அதாவது சற்றேறக்குறைய 700-ரூபாய் கிரயம் வாங்குகிறார். ஆனால், இந்த பூட்ஸை அவர் எல்லோருக்கும் தயார் செய்து கொடுப்பதில்லை. அக்கடைக்காரர் வைத்திருக்கிற அளவிற்கு எவருடைய கால்களிருக்கின்றனவோ அவருக்குத்தான் அவைகள் தயார் செய்யப்படுகின்றன.

இயேசுநாதர் கர்த்தரின் குமாரரா?

(தென்காசி. மௌலவி. மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப் வரைவது)

முஸ்லிம் சகோதர சகோதரிகளே!

தற்கால கிறிஸ்தவ சகோதரர்கள், இயேசுநாதரென்ற ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைக் கர்த்தரின் புத்திரரென்றும், அவரிடம் தெய்வத்தன்மைகள் இருப்பதினால் அவர் சந்தேகமின்றி கர்த்தரின் ஏகபுத்திரரென்றும் பொதுவாக எல்லா மக்களிடத்தும் குறிப்பாக தற்கால பாமர, மார்க்கக் கல்வியற்ற முஸ்லிம்களிடத்தும் புத்தக, பிரசங்க வாயிலாகப் பிரச்சாரம் புரிந்து வருகின்றனர். ஆதலால், இவ் வியாசத்தில் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களைக் கர்த்தரின் புத்திரரென்று கூறலாமா? கர்த்தருக்குரிய லக்ஷணங்கள் என்ன? அவைகள் அவர்களிடமிருந்ததா? என்பன போன்ற விபரங்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். இதைத் தாங்கள் கவனித்துப் படிப்பதுடன் கிறிஸ்தவ நண்பர்களும் இதைப் படித்துணரும்படி செய்வீர்களென்று நம்புகிறேன்.

கிறிஸ்தவ சகோதர சகோதரிகளே!

மரியாளென்ற ஓர் பரிசுத்த மாதரசியின் வயிற்றில் பிறந்து, "இஸ்ரவேலர்" என்ற சிதறுண்ட சமூகத்தை மட்டும் சீர்திருத்தி, கர்த்தரின் உண்மைப் பக்தர்களாக்க வேண்டுமென்ற கர்த்தரின் கட்டளையை சிரமேற்கொண்டுள்ள இயேசுநாதரான ஈஸாநபீ (இவர்களின்மீது கருணாநிதியின் காருண்யமும் அருளும் என்றும் உண்டாவதாக) இவர்களை தெய்வ அவதாரமென்றும், தெய்வ குமாரரென்றும் இன்னும் பலவாறாகவும் கூறிக்கொண்டு, பரிசுத்த சுரூபியான கர்த்தரின் கோபாக்கினைக்கு ஏன் ஆளாகின்றீர்கள்? இயேசுநாதரே "கர்த்தர் ஒருவரென்றும், அவரையே வணங்க வேண்டுமென்றும்" அவரிடத்தில் வினவிய ஒருவருக்குப் பதிற்கூறியதாக உங்களின் வேதத்தில் வரையப் பட்டிருப்பதை தாங்களேன் கவனிக்கவில்லை? "ஒரு ஸ்திரீயிடத்திற்

பிறந்தவன் சுத்தமாயிருப்பதெப்படி?" (யோபு 25-4.) என்ற வாக்கியம் உங்களின் பழைய ஏற்பாட்டில் வரையப்பட்டிருப்பதை நீங்கள் பார்த்ததில்லையா? நீங்களே கர்த்தர் அரூபியென்று கூறியும் வரைந்தும் வருகிறீர்கள். இவ்வித நிலைமையில் நீங்களேன் அக்கர்த்தரின் மஹா உக்ர கோபாக்கினைக்கு ஆளாகின்றீர்கள்? நீங்கள் யாரை தேவரென்றும், தேவரின் குமாரரென்றும் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறீர்களோ அவரித்தில் அடிமைத்தனத்தின் அடையாளங்கள் நம்மைவிடப் பன்மடங்கு இருந்தனவே! இயேசுநாதரென்ற அவரிடத்தில் தெய்வத்தன்மைக்கு ஒவ்வாத எத்தனையோ எண்ணற்ற தன்மைகளும், கர்த்தரிடம் அவர் பணிந்து வேண்டிக்கொண்ட அளவற்ற பிரார்த்தனைகளும், அவரின் துறவறமும், பய பக்தியும், கீழ்ப்படிதலும், தெய்வ வழிபாடும் எவ்வளவோ பகிரங்கமாய் இருந்தனவே! மேலும், மனிதனிலுள்ள மலம், ஜலம் எச்சி, சத்தி, கழிவு, அழுக்கு முதலிய ஆபாசத்தன்மைகள் யாவும் அமையப்பெற்ற ஒரு மனிதரையா கர்த்தரென்று எண்ணிக்கொள்வது? என்னே வெட்கம்!

ஒரு குடும்பத்தில் ஓர் மாது, ஒரு குழந்தையை வானரம், பன்றி, முதலிய சொரூபத்தில் ஈன்றெடுத்தால் அக்குடும்பத்திற்கு எத்துணைக் கேவலமாகவும், அருவருப்பாகவும் இருக்குமென்பதை வாய்விட்டுக் கூறல் சாலுமோ? அக் குடும்பத்தின் துயரத்திற்கு ஓர் எல்லை யுண்டோ? ஆழ்ந்து கவனித்துப் பார்த்தால் வானரமும், பன்றியும், மனிதனும் சிற்சில விஷயங்களில் ஒவ்வாவிடினும் சிருஷ்டியாயிருப்பதிலும், தின்னல், பருகல், மல ஜலங் கழித்தல் முதலிய விஷயங்களில் ஒப்பானவைகளே. இத்துணை தூரம் சம்பந்தமிருந்தும் தங்களுக்கு அவைகளைப்புத்திரர்களாக அடைவதைப் பொருந்துவதில்லையே. ஆனால், கர்த்தருக்கு மாத்திரம், எவ்வித சம்பந்தமும் ஒப்புமில்லாத ஒரு மனிதரை-தான் கர்த்தரின் அடியாரென்றும், அவரின் தூதுவரென்றும் அவர் பன்முறையும் தமது சொற் செயல்களால் அனுஷ்டித்துக்காட்டிய கர்த்தரின் ஒரு உத்தம பக்தரை-ஒப்புவமையில்லா கர்த்தரின் சந்ததியாக, ஆக்குவதென்றால் இஃதெங்ஙனம் பொருந்தும்? ஒருவர் தீனிக்கும், குடிப்பிற்கும், தூக்கத்திற்கும் தேவையுடையவராகி, மலஜலம் கழிவிற்கும் பலவந்தப்பட்டிருந்தால், அவருக்கும் கர்த்தருக்கும் எந்த விஷயத்தில் ஒற்றுமையுண்டு? இவ்விதத் தன்மையுடைய ஒரு மனிதரை கர்த்தரென்றோ, கர்த்தரின் குமாரரென்றோ சொல்லிக்கொள்வதும், உறுதி கொள்வதும் எங்ஙனம் பொருந்தும்?

இயேசுநாதரின் பக்தர்களென்றும் அவரைப் பின்பற்றியவர்களென்றும் நினைத்துக்கொண்டிருக்கும் தற்கால கிறிஸ்தவ சகோதர சகோதரிகளே!

தானே கர்த்தரென்று வாதித்த வணங்காமுடி மன்னனாகிய "பிர்ஔன்" என்பான் தனது தாவாவுக்குத் தக்கபடியாகவாவது நடித்து வந்தனனே. ஆனால் இயேசுநாதரிடத்திலேயோ அதுவுமில்லையே. இதற்கு மாற்றமாக இவர் தனது சொற்செயல் முதலிய சகல வற்றிலும் தன்னைக் கர்த்தரின் ஓர் அடியாரென்று காட்டி வந்தாரேயன்றி, தான் கர்த்தரென்றோ, கர்த்தரின் குமாரரென்றோ ஒரு வார்த்தையேனும் கருதவும் கூறவுமில்லையே. ஆனால் உங்களின் கூற்றுப்படி அவர், அவ்வாறு கூறியிருந்தால் தனது செய்கையிலும் அவ்வாறே ஒரு சிறிதாவது நடந்து காட்டியிருப்பாரல்லவா? அதுவுமில்லையே "பிர்ஔன்" என்பவனை கர்த்தரென்று கூறியவர்கள் தேவ கோபாக்கினைக்கு ஆளாகி மஹா கடின தண்டனை அடைந்திருக்கும் போழ்து, மனிதராகப் பிறந்து, மனிதராக வளர்ந்து, மனித குணம் யாவும் அமையப்பெற்று, ஆனால், கர்த்தரின் உண்மை பக்தராக விளங்கிய ஹஜ்ரத் ஈஸா (அலை) என்ற இயேசுநாதரை பிரத்தியக்ஷ விரோதமாய்க் கர்த்தரென்று சொல்வோர் எப்படிக் கர்த்தரின் கோபாக்கினைக்கும் தண்டனைக்கும் பாத்தியஸ்தர்களாக ஆகாதிருப்பர்? சற்று ஆழ்ந்து சிந்தித்து சத்தியத்தைப் பின்பற்ற முன் வாருங்கள்.

அன்புள்ள கிறிஸ்தவ நண்பர்களே!

உங்களின் கொள்கைப் பிரகாரம் சிலுவையிலறைவதற்காக யூதத் தலைவர்கள் இயேசுநாதரைப் பிடித்துக்கொண்டு போகும்போழ்து துக்கப்பட்டார்; மனம் நொந்தார்; பதறினார் அழுதார்; பலமுறை முகங்குப்புற விழுந்து கதறினர். "எலி எலி லாமா ஸபக்தனி (இதன்பொருளாவது-கர்த்தரே! கர்த்தரே என்னையேன் கைவிட்டு விட்டீர்)" என்றுகூக் குரலிட்டார் என்றெல்லாம் உங்களின் பைபிளில் காணப்படுகிறதே. இவ்விஷயத்திலிருந்து

இவர், கர்த்தரோ, அல்லது அவரின் புதல்வரோ என்று விளங்காமல் கர்த்தருக்கும் இவருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை; இவர் கர்த்தரின் தூதுவர் என்றுகூட விளங்காமல் மஹா கெட்டவரென்று விளங்குகிறதல்லவா? இந் நிலைமையில் முஸ்லிம்கள் அவர்களை கர்த்தரின் உண்மை தீர்க்க தரிசியென்று கூறுவதற்கு கிறிஸ்தவர்களாய நீங்கள் எத்துணை நன்றி செலுத்தவேண்டும்? அன்பர்களே! இதைப் போல் இன்னும் எண்ணற்ற ஆதாரங்களை உங்களின் பைபிளிலிருந்தே இயேசுநாதர், கர்த்தருமல்ல; அவரின் குமாரருமல்ல; மேலும், அவர் கர்த்தரின் ஒரு தூதுவர்தானென்பதை எடுத்து வரையமுடியும். ஆயினும், அறிவாளர்களுக்கு இவ்வளவேபோதும் என்றெண்ணியே இத்துடன் இவ்வியாசத்தை பூர்த்தி செய்கிறேன்.

பைபிளின் போதனையாவது :—

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் ("பிதா" என்ற பதத்தை இயேசுநாதர் கூறியது தன்னைப் படைத்து வளர்த்துக் காப்பாற்றுபவர் கர்த்தரே என்ற கருத்துடன் கூறியதேயொழிய உண்மையில் பிதாவல்ல என்பதை முன்வரைந்த விஷயங்களால் நன்கு தெரிந்துகொள்ளலாம்.) சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜியத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்கிறவன் அதில் பிரவேசிக்க மாட்டான்"—"அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோமல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோமல்லவா? என்பார்கள்"—"அப்பொழுது நான், ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே! என்னை விட்டகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்வேன்." (மத்தேசி 7-21, 22, 23)

சத்திய வேதமான குர்ஆன் ஷரீப் கூறுவதாவது :

வேதத்தை யுடையவர்களே! நமக்கும் உங்களுக்கு மத்தியிலுள்ள பொதுவான வார்த்தையில் (நாம் ஒன்று கூடுவோம் வாருங்கள். அதாவது.:—அல்லாஹ்வைத் தவிரவேறு எதையும் வணங்காதிருப்போமாக. அவனுக்கு எவ்வஸ்துவையும் இணையாக்காதிருப்போமாக. நம்மவரில் சிலர் சிலரை-றப்பாக (ரக்ஷகராக) ஆக்கிக் கொள்ளாதிருப்போமாக. எனவே, இதற்கும் நீங்கள் பின் வாங்குவீர்களாயின் நிச்சயமாக நாங்கள் முஸ்லிம் (=இறைவனின் ஆக்ஞைக்கு வழிப்படுபவர்)களாக இருக்கிறோம் என்பதற்கு நீங்கள் சாக்ஷியாக விருங்கள்.

நிச்சயமாக அல்லாஹ்தான் மர்யமுடைய குமார் 'மஸீஹ்' என்று கூறியவர்கள் திண்ணமாக நிராகரிப்பவர்களாகி விட்டனர். ஆனால், மஸீஹானவர், (ஹஜ்ரத் ஈஸா நபியவர்கள்) "இஸ்ராயீலின் சந்ததியினரே! எனக்கு றப்பாகவும் உங்களுக் றப்பாகவும் இருக்கின்ற அல்லாஹ்வையே வணங்குங்கள்; எவன் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றானோ அவன்மீது (சுவர்க்கத்தின்) சோலையை அல்லாஹ் விலக்கி விட்டான்; மேலும், அவன் சேருமிடம் நரகமே; அன்றியும், அநியாயக்காரர்களுக்கு உதவியாளர் (எவரும்) கிடையாது." என்று கூறினார். (5. அத்-72 வாக்கியம்.)

"நிச்சயமாக அல்லாஹ் மூன்றில் மூன்றாவதானவன்" என்று கூறினவர்களும் நிராகரித்தவர்களாகி விட்டனர்; ஆனால், (வணக்கத்துக்குரிய) ஒரே ஒரு நாயனைத்தவிர (வேறு நாயன் இல்லை. மேலும், இவர்கள் (அம்மாதிரிக்) கூறிக்கொண்டிருப்பதை விட்டு விலகவில்லையானால் அவர்களிலிருந்து நிராகரிப்பவர்களை நோவினை செய்யும்படியான வேதனை திண்ணமாகத் தொட்டுவிடும். (5-73)

எனவே, இவர்கள் அல்லாஹ்விடம் (தௌபாச் செய்து) மீண்டு அவனிடம் பிழை பொறுக்கத் தேடவேண்டாமா? மேலும், அல்லாஹ் மிக மன்னிப்பவனாக, பேறன்புடையயோனாக இருக்கின்றான். (5-74)

வேதத்தையுடைய (கிறிஸ்த)வர்களே! நீங்கள் உங்களின் மதத்தில் (அளவுக்கு) மீறாதீர்கள்; இன்னும், அல்லாஹ்வின்மீது உண்மையைத் தவிர (பொய்யை)க் கூறாதீர்கள்; மர்யமுடைய குமாரர் 'ஈஸா மஸீ' ஹானவர் அல்லாஹ்வின் தூதர் தாம்; இன்னும், அவனுடைய வார்த்தை (யினால் ஜனித்தவர்) தான்; அ(வன் அவ்வார்த்தையான)தை மர்யமிடத்தில் போட்டான். இன்னும், அவனாலுண்டான ஆத்மா(வை உடையவர்) தான்; ஆதலின், நீங்கள் அல்லாஹ்வையும் அவன் தூதர்களையும் (மெய்யாகவே) விசுவாசியுங்கள்; மேலும், மூன்று (தெய்வம்) என்று கூறாதீர்கள்; (அவ்வாறு கூறுவதைவிட்டு) நீங்கள் விலகிக்கொள்

ளுங்கள் ; (அது) உங்களுக்கு நலம். அல்லாஹ் ஒருவன்தான் வணங்கப்படுவான் ; அவன் தனக்குப் பிள்ளையிருப்பதை விட்டுப் பரிசுத்த மானவன் ; வானங்களில் உள்ளதும் பூமியில் உள்ளதும் அவனுக்கே உரியன ; மேலும், அல்லாஹ் பொறுப்பேற்பவனு யிருப்பது போது மானது. (4-171)

(குறிப்பு) இது சம்பந்தமான விஷயங்களை விரிவாகப் பார்க்க விரும்புவோர்கள் தென்காசி "முஸல்மான்" ஆபீஸிலிருந்து வெளியான 'ஹயாத்தே மஸீஹ்' முதற் பாகம், இரண்டாம் பாகம், கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு, முதலியவைகளைப் பார்க்கவும்.

லைலதுல் கத்ர்

மாட்சிமை தங்கிய இரவில் அதை (குர்ஆன்ஷரீபை) நிச்சயமாக நாம் இரக்கிஞேம். மேலும் மாட்சிமையான இரவு இன்னதென்பதை உமக்கு அறிவித்தது எது? மாட்சிமையான(அவ்) இரவானது ஆயிரம் மாதங்களைக் காட்டிலும் மேலானதாகும். அந்த இரவில் மலக்குகளும் ரூஹுவும் தங்களுடைய ரப்பின் உத்திரவுப்படி ஒவ்வொரு காரியத்தைக் கோண்டும் இரங்குவார்கள். ஈடேற்றம்,அது வைகறை உதயமாகும்வரை இருக்கிறது. (குர்ஆன்.)

அன்புற்ற சோதரீர்! நம் அடியார்மீது கிருபை புரிந்து பரிபாலித்து வருவோனுகிய சர்வ சக்தனை அல்லாஹுசுப்ஹானஹுவதஆலா தனது திருமறையில் 97-வது அத்தியாயத்தின் மூலம், மேற் கூறப்பட்ட அவ்வேதம் முதல் முதலாக இரக்கப்பெற்ற இரவைப்பற்றியும், அதன் மகிமையைப் பற்றியும் கூறியுள்ளார். தவிர, நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்கள், இரவுகளில் மேலானது 'கத்ரு' டைய இரவென்றும், அல்லாஹ்தஆலா கத்ருடைய இரவைக்கொண்டே மற்ற இரவுகளுக்கு சிறப்பளித்திருக்கின்ருன் என்றும் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிருர்கள். இத்தகைய சிறப்பினையுடைய இரவானது ரமலான் மாதத்திலேயே இருக்கிறதென்பதை திருவசனத்திலிருந்து தெரிந்து கொள்கிறேம். மேலும் அல்லாஹ் தஆலவே இந்த இரவின் மேன்மையைப் பற்றிக் கூறுகையில், இது ஆயிர மாதங்களைப் பார்க்கிலும் சிறந்ததெனச் செப்பியிருக்கிருன். அதாவது, அந்த ஓர் இரவில் நித்திரை ஒழித்து வணங்குவது ஆயிரமாதங்கள் வணங்குவதைக்காண மேல் என்பது கருத்தாகும். உதாரணமாக ஒரு நாளன்று நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்கள் தங்களுடைய சஹாபாக்களிடையே பனூ இஸ்ராயீல் வம்சத்தி லுள்ள வணக்கஸ்தராகிய ஹஸ்ரத் ஷம்ஊன் (ரஹ்) அவர்களது சரித்திரங்களை விரித்துரைக்குங்கால்: அவர் ஆயிரமாதங்கள் இராக்காலங்களில் வணக்கம் புரிந்தும் பகற்காலங்களில் மார்க்க விரோதிகளுடன் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிந்துகொண்டு மிருந்ததையும் கூறினுர்கள். அதுபொழுது சஹாபாக்களுக்கு மனக்கவலை ஏற்பட்டு 'அல்லாஹ்வுடைய ரசூலே! எங்கள் வயது கம்மியாக இருப்பதால் நாங்கள் அவ்வாறுன நற்கருமங்கள் செய்யமுடியாது போகின்றனவே' என வருத்தத்தோடு தெரிவித்துக் கொண்டனர். நம் நபி பெருமானுர் (ஸல்) அவர்கள் இது விஷயமாக சிந்தனையிலீடுபட்டிருக்குங்கால் ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலைஹி) இரங்கி 'ஏ! முஹம்மதே! நான் உங்கள் உம்மத்தோர்மீது ஒரு இரவை நன்கொடை யளித்திருக்கின்றேன் ; அவ்விரவு ஆயிர மாதங்களைவிட சிறப்புடையதாகும்' என்னும் திருவாக்கியத்தை அறிவித்தார்தள். ஆகவே, இந்த ஒரு இரவில் வணக்கம் செய்வது கொண்டு ஆயிர மாதங்கள் அந்த 'ஆபித்' வணக்கம் புரிந்து பெற்றுக்கொண்ட 'தவாபை' விட மேலான நன்மை கிடைக்குமென்பது திண்ணம்.

இந்த சிறந்த இரவைப் பலன்படுத்திக் கொள்ள தவசிரேஷ்டர் முன்னிருந்தே தக்க ஏற்பாடு செய்வர். இவ்விரவானது ரமலான்

மாதத்தில்தான் என்பதை நாம் நன்கு தெரிந்து கொண்டாலும் அது எத்தகைய இரவு என்பது வெளிப்படையாகக் கூறப்படவில்லை. ஆதலால் பெரியார்கள் அம்மாதம் முழுவதிலுமே நித்திரையை நீக்கி வணங்குகின்றனர். எனினும் இவ்வாறு செய்வது எல்லா மக்களாலும் இயலாதல்லவா? ஆதலால், அப்பெரியார்களில் பலர் தங்கள் அனுபவத்திலிருந்து இவ்விரவானது இருபது தேதிக்குமேலுள்ள ஒற்றைப் படையான தேதிகளில் வருகின்றதெனக் கூறியிருக்கின்றனர். ஆனால் அநேகப் பெரியார்கள் 'லைலதுல் கத்ர்' என்னும் வாக்கியத்தில் ஒன்பது எழுத்துக்களிருப்பதுடன் அவ்வாக்கியம் கத்ருடைய அத்தியாயத்தில் மூன்று முறைமடக்கி கூறப்பட்டிருப்பதால், ஒன்பதை மூன்றால் பெருக்கி 27-வது இரவென்று திட்டப்படுத்தி யிருக்கிறார்கள். இதற்கு சரித்திரங்களிலும் தக்க சான்றுகள் இருந்து வருகின்றன.

இவ்விரவில் இறைவனின் அருளும் கருணையும் இக்குவலய மாந்தருக்கு விசேஷமாக உண்டாவதால் மனித உணர்ச்சியிலும் அந்த இரவின் நிலைமையானது இதர இரவின் நிலைமையைப் பார்க்கிலும் மாறுபட்டிருக்கிறது. அனுபவமடைந்த பெரியார்கள் அவ்விரவின் விசேஷங்களில் சிலவற்றை விளக்கியிருக்கிறார்கள். அது வருமாறு :—

"அந்த இரவில் இறைவனடியார்களுக்கு அவனருள் நிரம்ப உண்டாகின்றது. அஃதொரு கண்ணிய மிக்க புண்ணிய இரவாய்ப் புலப்படுகிறது. ஆண்டவனது அருள் அரும்பும்போது அடியார்களுள்ளத்தில் ஒருவகை ரம்மியமுண்டாகி குதூகலம் ஏற்படுகிறது. அவ்விரவில் ஆண்டவனுடைய வணக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஒருவிதமான உற்சாகமும் கிளர்ச்சியும் உண்டாகின்றன. இவ்வண்டத்திலுள்ள கோடானுகோடிப் பொருள்களும்பரிசுத்தநிலை அடைந்திருப்பதாகத் தென்படும். பக்தர்களின் உள்ளத்திலுள்ள எல்லாக் கெட்ட எண்ணங்களும் மாறி அழிந்து போகின்றன."

இவ்விதமான நிலையை யுணர்ந்த இறைவனது நல்லடியார்களின் மனம் ஆர்வங்கொண்டு தனது மாணிடத் தன்மையை மறந்து பரவசமாகி இறைவனது வணக்கத்திலீடுபட்ட அவர்கள் தங்களுக்கு வேண்டுவனவற்றை விண்ணப்பிக்கின்றனர். இறைவனும் தனது பெருங் கருணையால் அப்பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்கிறான். கிடைப்பதற்கு அருமையான இச்சமயத்தை அடைவதற்காகவே புண்ணியவான்கள் மாதக்கணக்காகவும் நாட்கணக்காகவும் நாயனைத் துதிக்கின்றனர். அவ்விரவில் தியானத்திலிருப்பவர்களுக்கு உண்டாகக்கூடிய உணர்ச்சியில் மேலே கூறப்பட்டது மிகவும் சிறிய ஒரு பாகமே யாகும். இதனாலாகும் பேரின்பத்தை உள்ளது உள்ளபடியே தெரிந்து கொள்ள வேண்டுமாயின் ஒவ்வொருவரும் அதை அநுபவத்தில்தான் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த உணர்ச்சியையும் இன்பத்தையும் சொற்களால் எடுத்துரைக்க இயலாது. இப்படிப்பட்ட அருள் நிலையை அடைய ஒவ்வொருவரும் முயல வேண்டும். ஆபினும் நம் முயற்சி பயன்பெற அவ்வல்லோனின் அருளன்றோ வேண்டும்.

இதற்காகப் பெரியார்கள் பலவிதமாக வணங்கி யிருக்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தம் அனுபவத்தில் சித்தியடைந்த முறைகளையே கூறியிருக்கின்றனர். சிலர் அவ்விரவு முழுதும் நபில் தொழுகை நிறைவேற்றியிருக்கின்றனர். சிலர் 'திக்ரு' செய்வதிலேயே ஈடுபட்டிருந்திருக்கின்றனர். சிலர் குர்ஆன் ஓதி வந்திருக்கின்றனர். சிலர் சலவாத்து ஓதியிருக்கின்றனர். இவைகளில் எது சிறந்தது எது தாழ்ந்தது என்று வகுத்துக்கூற முடியாது. இப்பிரார்த்தனை முறைகளில் எதில் யார் யாருக்கு மனவோர்மையும் தெய்வ பக்தியும் இன்பமும் அதிகமாக ஏற்படுகின்றனவோ அதுவே அவர்களுக்குச் சிறந்தது. ஆகவே, அருஞ்சிறப்பினையுடைய இரவை நழுகவிடாமல் ஒவ்வொருவரும் பார்த்துக்கொள்வது அவசியமாகும்.

இதனைக் கருதி 27-வ இரவில் மஸ்ஜிதுகளில் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்படுவதும், சிற்றுண்டிகள் வழங்கப்படுவதும் வழக்கமாக இருக்கின்றன. சில சகோதரர்கள் இந்த இரவை ஆடம்பரங்களால் சிறப்பிக்கும் வேலைகளிலீடுபட்டு வெளிப்படையான இன்பத்தை அடைகின்றனர். ஆனால் அவ்விரவில் ஆண்டவனை வணங்கி பேரின்பத்தை யடைவேண்டுமென்ற விஷயத்தை மறந்து விடுகின்றனர். அத்தகையோர் தங்களுக்குக் கிடைத்த புற இன்பத்துடன் அகவின்பத்தையும் அடைய முயல்வார்களாக. இப்புண்ணிய இரவின் மாண்பை நம் சகோதரர்களும் நாமும் அடைய எல்லாம் வல்ல ரஹ்மான் கருணை புரிவானாக.

பித்று ஸதக்கா

(ஹனபி மத்ஹபு பிரகாரம்)

ஜக்காத் கொடுக்கக் கடைமைப்பட்ட ஒவ்வொருவரும் 'பித்று ஸத்தக்கா' கொடுக்க வேண்டும். (வாஜிபு.) இவ்வாறு கடமைப்பட்டவர்களில் எவர் ஸதக்கா கொடுக்கவில்லையோ அவரது நோன்பு அல்லாஹ்வின் சமூகத்தில் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாதென, ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. ஸதக்கா கொடுப்பதால் ஏழைகளுக்கு உபகாரம் செய்வதாகும். மேலும் அன்றைய திருநாளில் அவர்களும் மற்றவர்களுடன் சேர்ந்து சந்தோஷங் கொண்டாட ஹேது ஏற்படுகிறது. ஆதலால் பித்று ஸதக்காவை தொழுகைக்குச் செல்லு முன் கொடுப்பதும் அச்சதக்காவை தானியமாக கொடுப்பதைப் பார்க்கிலும் ஏழைகள் தங்களுக்குத் தேவையானவற்றை சுலபமாக வாங்கிக் கொள்ளும் வண்ணம் அதை பணமாக கொடுத்துவிடுவதும் உத்தமம்.

குடியிருக்க வீடு, கடன் முதலிய அவசியமான செலவுகளுக்குமேல் ரூ. 52½-அல்லது அது பெறுமானமுள்ள சொத்துக்களையுடைய ஒவ்வொருவரும் தனக்காகவும் தன் சிசுக்களுக்காகவும் பித்று ஸதக்கா கொடுப்பது வாஜிபு. ஆனால் பருவமடைந்த தனது மக்கள் முதலியோருக்காக பித்று ஸதக்கா கொடுக்க அவன் கடமைப்பட்டவனல்லன். ஆனால் மேற்கூறப்பட்டவர்களிடமும் ஸதக்கா கொடுப்பதற்கு ஏற்பட்ட அளவுள்ள சொத்திருந்தால் அவர்கள் பிறத்தியேகமாக ஸதக்கா கொடுக்கவேண்டும். பருவமடையாத தன் குழந்தைகளுக்குப் பிரத்தியேகமான சொத்திருக்குமாயின் அச்சொத்திலிருந்தே அக் குழந்தைக்குரிய பித்று ஸதக்காவை கொடுக்க வேண்டும். சித்த சுவாதீனமில்லாத தனது பெரிய குழந்தைகளுக்காக (பருவமடைந்தவர்களுக்கு) தகப்பனே ஸதக்கா கொடுக்க வேண்டும். நோயாளி, பிரயாணி, கர்ப்ப ஸ்திரீ, மாதவிடாய் கொண்ட பெண், ஆகியவர்கள் மேற்கண்ட காரணத்தால் நோன்பு நோற்காவிடினும் அவர்களிடம் மேற்கண்ட விகிதப்படி சொத்திருந்தால் அவர்கள் பித்று ஸதக்கா கொடுக்கவேண்டும். (வாஜிபு.)

ஈதுல் பித்று பெருநாளாகிய ஷவ்வால் மாதம் முதல் தேதியன்று கிழக்கு வெளுத்தவுடன் பித்று ஸதக்கா கொடுப்பது வாஜிபாக ஏற்படுகிறது. இந்த தேதிக்குமுன் கொடுத்தாலும் அது நிறைவேறி விடும். ஆனால் அன்றைய தினம் பெருநாள் தொழுகைக்கு போகுமுன் கொடுப்பது முஸ்தஹப்பு. ஷை தேதியில் கிழக்கு வெளுத்தவுடன் பித்று ஸதக்கா வாஜிபாக ஏற்படுவதால் கிழக்கு வெளுப்பதற்கு முன் குழந்தை பிறந்தால் அந்த குழந்தைக்காக பித்று ஸதக்கா கொடுப்பது வாஜிபு. கிழக்கு வெளுத்தபின் பிறந்த குழந்தைகளுக்காக ஸதகாக் கொடுப்பது வாஜிபல்ல. கிழக்கு வெளுப்பதற்குமுன் குழந்தை பிறந்து கிழக்கு வெளுத்தபின் அக்குழந்தை இறந்து போனாலும் அக் குழந்தைக்காக ஸதக்கா கொடுப்பது வாஜிபு. பித்று ஸதக்கா கொடுப்பதற்கு தகுந்த சொத்துள்ளவனாக ஒருவன் கிழக்கு வெளுக்கும் போது இருந்து, கிழக்கு வெளுத்தபின் ஏழையாகிவிட்டால், அவனும் பித்று ஸதக்கா கொடுக்க கடமைப்பட்டவனாவான்.

மணிக்கோதுமை, முந்திரிப்பழம், கோதுமை மாவு, ரவா ஆகியவைகளை பித்று ஸதக்காவாக கொடுக்க விரும்பினால் அறை 'ஸாஉ' கொடுக்க வேண்டும். வாற்கோதுமை, பேரீச்சம்பழம் ஆகி இவைகளை ஸதக்காவாக கொடுப்பதானால் ஒரு 'ஸாஉ' கொடுக்கவேண்டும். இவைகளையல்லாமல் தன்னிடமுள்ள நெல், சோளம், கம்பு முதலிய தானியங்களை ஸதக்காவாக கொடுக்க விரும்பினால் முற்கூறப்பட்ட அளவுள்ள கோதுமை முதலியவைகளைக் கிரயம்போட்டு அக்கிரயத்துக்கு ஏற்ற தானியத்தைக் கொடுக்கவேண்டும். இவ்வாறு கொடுப்பதைப் பார்க்கிலும் கிரயத்தைப் பார்த்து பணமாகக் கொடுப்பதே மேல்.

ஜக்காத் பணத்தை யார்யாருக்குக் கொடுக்கலாமோ அவர்களுக்கு பித்ரு ஸதக்காவும் கொடுக்கலாம். ஆனல் பந்துக்களில் பித்ரு ஸதக்காவை வாங்கத் தகுந்த யோக்கியதையுள்ளவர்களிருந்தால் அவர்களுக்கு கொடுப்பதுதான் நல்லது. பலருடைய பித்ரு ஸதக்காவை ஒரு மிஸ்கீனுக்கு கொடுக்கலாம். அவ்வாறே ஒருவருடைய பித்ரு ஸதக்காவைப் பலருக்கு கொடுத்தலும் பொருந்தும். ஆயினும் அவ்வாறு ஒருவருடைய ஸதக்காவைப் பலருக்குக் கொடுப்பது கூடாதென சிலர் கூறுவர். ஆதலால் பேணுதலுக்காக ஒருவருக்கே கொடுத்துவிடுவது உத்தமம்.

1040-திர்ஹத்தின் எடையுள்ள உளுந்து அல்லது கொள்ளின் அளவுள்ள அளவைக்கு ஒரு 'ஸாஉ' (மரக்கால்) என்று பெயர். 200-திர்ஹம் ரூ. $52\frac{1}{2}$-எடையுள்ளதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இக்கணக்குப்படி 1040-திர்ஹத்திற்கு ரூ. 273-எடையாகும். தற்சமயம் அரசாங்க அமுலிலுள்ள அளவைகளில் பட்டணம் படியில் ஒருபடி 130-ரூபாய் எடையுள்ளது. இதன்படி ஒரு 'ஸாஉ' என்பது இரண்டு படியும் 13-ரூ. எடையுள்ளதுமான $2\frac{1}{10}$ படியாகும். இக்கணக்குப்படி $\frac{1}{2}$ 'ஸாஉ' என்பது மதராஸ் படியில் சுமார் ஒன்றே ஒரு வீசம் படியாகிறது. தற்பொழுது மதராஸில் மணிக்கோதுமைபடி 1-க்கு. 0 - 3 - 6 விற்கிறது. இதன்படி ஒன்றே ஒரு வீசம் படிக்கு சுமார். 0 - 4 - 0 ஆகிறது. இது தான் ஒருவருடைய ஸதக்கதுல் பித்ருவாகும். இவ்வாறே அந்தந்த ஊர்களின் கோதுமைக் கிரயத்தை நிதானித்து அதன் கிரயத்தைக் கொடுக்கவேண்டும்.

(ஷாபியீ மத்ஹப் பிரகாரம்)

தனக்காகவும், தன் போஷணையிலிருக்கின்ற மனைவி, மக்கள் முதலானவர்களுக்காகவும் தன் ஊரில் முக்கியமாக உடயோகிக்கப்படுகிற தானியத்தில் ஒரு 'ஸாஉ' பித்ரு கொடுப்பது வாஜிபு. இதன் விலையைக் கொடுக்கக் கூடாது. கெட்டுப்போன அல்லது குறையுள்ள, அல்லது ஈரமுள்ள தானியங்களைக் கொடுக்கக் கூடாது. ஆனல் அந்த ஈரம் காய்ந்து அதைப் பத்திரப்படுத்தி வைக்கவோ, அல்லது உணவுக்கு உபயோகிக்கவோ தகுந்ததாக இருப்பின் அதைக் கொடுக்கலாம். இந்த பித்ரு வாஜி பாவதற்கு நான்கு ஷர்த்துக்களிருக்க வேண்டும். அவை யாவன :—

(1) முஸ்லிமாக இருக்கவேண்டும். தன் போஷணையி லிருப்பவர்களுக்காக பித்ரு கொடுக்க வேண்டுமாயின் அவர்களும் முஸ்லிமாக இருக்க வேண்டும்.

(2) தான் அடிமையாக இருக்கக் கூடாது.

(3) பெருநாள் இரவு வருவது அதாவது முதல் நாள் சூரியாஸ்தமன மாகுதல்.

(4) கடன் இல்லாமலும், தனக்கும், தன் பராமரிப்பிலுள்ள மனைவி மக்கள் ஆகியவர்களுக்கும் தேவையான இருப்பிடம், உடமை, உடை, முதலியவைகள், பெருநாளின் இரவு பகலில் தனக்கும் தன் குடும்பச் செலவுகளுக்கும் தேவையானவைகள் போக அதிகப் படும்படியான சொத்துக்களிருக்க வேண்டும். இந்த நான்கு ஷர்த்துக்களில் ஏதேனுமொன்று இல்லாதிருந்தால், ஸதக்கா வாஜிபாகாது. ஆகவே, ஈதுப் பெருநாளைக்கு முந்தின தினத்தில் சூரியாஸ்தமனமான பின்பு பிறக்கும் குழந்தைகள், விவாகம் செய்து கொள்ளப்பட்ட மனைவி ஆகியவர்களுக்காக பித்ரு கொடுக்க வேண்டியதில்லை. ஷை சூரியஸ்தமனமாகிய பின் பணக்காரனுனும், இஸ்லாம் மதத்தைத் தழுவினலும் வாஜி பில்லை. ஷை சூரியஸ்தமானதிற்குப்பின் ஸதக்கா கொடுக்காமல் இறந்து விட்டாலும், தன் மனைவியை விவாக விலக்கு செய்து விட்டாலும், தன் சொத்து தொலைந்து போனலும் அவன்மீது வாஜிபான பித்ரு அவனை விட்டு நீங்காது. ரமலான் மாதத்தின் கடைசி நாளில் சூரியஸ்தமனமானதிலிருந்து மறுநாள், அதாவது பெருநாளன்று, சூரியஸ்தமனமாகும்வரை பித்ரு கொடுக்கலாம். ஆனல், பெருநாள் தொழுகைக்குமுன் பித்ருவைக் கொடுத்துவிடுவது சுன்னத்து, இதற்குமேல் காரணமில்லாமல் பிற்படுத்துவது மக்ரூஹ். ஆனல் தனக்கு பந்துவானவர்கள், தாயாதியானவர்கள் ஆகியவர்களில் ஏழைகளை எதிர்பார்த்து அவர்களுக்காக ஸதக்காவைப் பிற்படுத்தி வைப்பது சுன்னத்து.

அன்புற்ற நேயர்காள்! பித்ரு ஸதக்கா கொடுப்பது கொண்டு மூன்று பிரயோஜனங்கள் உண்டாகின்றன. (1) நோன்பு அல்லாஹுதஆலா விடத்தில் ஒப்புக்கொள்ளப் படுகிறது. (2) மறணமாகும் நேரத்தில் ஆத்மா அடையும் நோவினையை விட்டும் விடுதலைப்

பெறுவது. (3) கப்ருடைய 'அதாபி'னின்று அச்சம் தீர்ந்திருப்பது. ஆகவே நம் முஸ்லிம் நேயர்கள் தங்கள் தங்கள்மீது கடமையாக வுள்ள இப் புண்ணிய கைங்கரியத்தை கைக்கொண்டு இகபர சாதனங்களை அடைவார்களாக.

ஈதுப்பெருநாள் தொழுகை

ஊரிலிருப் போனாகவும், சுவாத்திய சாலியாகவும், அடிமையல்லாத சுயேட்சை வாதியாகவும், வயதையடைந்த ஆண் பிள்ளையாகவும், புத்தி சுவாதீனமாகவும் கண், கால் சுவாத்தியமாகவுமுள்ள முஸ்லிமின்மீது இரண்டு ஈதுப்பெருநாள் தொழுகைகளும் வாஜிபு. ஆனால் தொழுகைக்குப்பின் குத்பா ஓதுவது சுன்னத்தாகும். ஒரு ஊரில் பல விடங்களில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம். ஆனால் ஒரே இடத்தில் தொழுதுவது நலம். இவ்வாறு தொழுவதுகொண்டு இஸ்லாத்தின் ஒற்றுமை ஐக்கியம், ஆகியவைகள் மிளிர்ந்து இலங்கும். பெருநாள் தொழுகை யாவரும் ஒன்று சேர்ந்து தொழுவதற்காக ஏற்பட்டிருப்பதால் ஜமாஅத்து தவறிவிட்டால் அதைக் 'கலா'ச் செய்யவேண்டியதில்லை. ஆனால் வேறிடத்தில் அதை ஜமாஅத்துடன் தொழலாம். அத்தொழுகை ஏதோ அசந்தர்ப்பமாக எல்லோருக்கும் தவறிவிட்டாலும் அல்லது ஷவ்வால் மாதப் பிறையைக்கண்ட சமாச்சாரம் பகலுக்குப்பின் கிடைத்தாலும் அத்தொழுகையை மறுநாள் தொழலாம். மறுநாளும் தவறிவிடின் மூன்றாவது நாளில் தொழக்கூடாது. ஆனால் காரணமின்றி மறுநாளைக்கு பிற்படுத்துவது மக்ரூஹ்.

சூரியோதயத்திற்குப் பின் சுமார் ஒருமணி கழிந்த பின்னிருந்து மத்தியானம்வரை பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம். இது தான் பெருநாள் தொழுகைக்குரிய நேரமாகும். ஆனால் தொழுகையை நிறைவெற்றிக் கொண்டிருக்கும்பொழுதே மத்தியானமாகிவிட்டால் அந்த தொழுகை நிறைவேறாது.

"இந்தப் பெருநாள் தொழுகையை அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகிறேன்" என்று நிய்யத்து (நிர்ணயம்) செய்து 'அல்லாஹு அக்பர்' என்று தக்பீர் கட்டவேண்டும். பின்பு 'தனா' (சுப்பான கல்லாஹும்ம........) ஓதிவிட்டு கையை யுயர்த்தி தக்பீர் சொல்லி கையைத் தொங்க விடவேண்டும். இவ்விதமாக இரண்டு முறை தக்பீர் சொல்லித் தொங்க விட்டு மூன்றாவது முறையில் முன்போல் 'தக்பீர்' கட்டிக்கொள்ள வேண்டும். இவ்வாறு மூன்று முறை தக்பீர் சொல்வதில் ஒவ்வொரு முறையின் இடை நேரத்தில் மூன்று 'தஸ்பீஹ்' ஓதப் பிடிக்கும் அவ்வளவு நேரம் மௌனமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு தக்பீர் கட்டுவதில் 'தக்பீர் தஹ்ரீமா'வையும் (முந்தின தக்பீரையும்) சேர்த்து நான்கு முறை தக்பீர் சொல்ல வேண்டியிருக்கும். பின்பு வழக்கம்போல் எல்லாத் தொழுகையிலும் ஓதுவது போல் அஊது, பிஸ்மில்லாஹ், ஸூரத்துல் பாத்திஹா, கிராஅத் ஆகியவைகளை ஓதி ருக்கூஉ ஸுஜூது செய்து இரண்டாவது ரக்அத்தை வழக்கம்போல் ஆரம்பித்து தொழவேண்டும். ஆனால் கிராஅத் ஓதி முடிந்தபின் முற்கூறிய பிரகாரம் மூன்று முறை தக்பீர் சொல்லி கையைத் தொங்க விடவேண்டும். பின்பு நான்காம் முறை தக்பீர் சொல்லி 'ருக்கூஉ' செய்ய வேண்டும். இவ்விதமாக இரண்டு ரக்அத்தையும் தொழுது சலாம் கொடுத்தபின் குத்பா ஓதவேண்டும்.

இமாமைப் பின்பற்றித் தொழுவோர் 'இந்தப் பெருநாளின் தொழுகையை இந்த இமாமைப் பின்தொடர்ந்து அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகிறேன்' என நிய்யத்துச் செய்து தக்பீர் கட்டவேண்டும். பின்பு எல்லாத் தொழுகையிலும் இமாமுக்கும் முக்ததிகளுக்கும் எந்தெந்த விதிகளிருக்கின்றனவோ அவைகளெல்லாம் இத் தொழுகையிலுமுண்டு. பெருநாளன்று தொழுகைக்கு முன் நபில் தொழுவது மக்ரூஹ். பெருநாள் தொழுகையை நிறைவேற்றியபின் வீட்டிற்கு வந்து நான்கு 'ரக்அத்' நபில் தொழு

வது நல்லது. 'ஈதுல் பித்று' தொழுகைக்குச் செல்லுவோர் வழியில் மெதுவாக தக்பீர் சொல்லிக்கொண்டு போகவேண்டும். ஆனால் உரக்கச் சொல்லுபவர்களைத் தடுக்கவும்கூடாது. ஈதுல் பித்று பெருநாளன்று தொழுகைக்கு முன் ஒன்று அல்லது மூன்று அல்லது ஐந்து பேரீச்சம் பழங்களையேனும் வேறு மதுரமான வஸ்துக்களையேனும் புசிப்பது முஸ்தஹப்பு.

அன்று பஜ்ருக்குப்பின் மிஸ்வாக்குச் செய்து, நீராடி, தன்னிடமுள்ளவைகளில் சுத்தமானதும், அழகானதுமாக உடைதரித்து வாசனை திரவியங்களைப் பூசி தக்பீர் சொல்லிக்கொண்டு பெருநாள் தொழுகை நிறைவேற்றப்படும் இடத்திற்கு நடந்துபோவது முஸ்தஹப்பு. வாகனங்களில் ஏறிச்செல்வது குற்றமல்ல. ஈதுப்பெருநாள் தொழுகைக்குப் போகும்போது ஒரு ரஸ்தா வழியாகப் போய் வரும்போது மற்றொரு ரஸ்தா வழியாக வருவது முஸ்தஹப்பு.

ஈதுத்தொழுகையில் இமாம் தக்பீர் சொன்னபின் ஒருவன் வந்து இமாமுடன் சேர்ந்தால் அவன் தானாகவே மூன்றுமுறை கையையுயர்த்தி தக்பீர் சொல்லிக் கொள்ளவேண்டும். இமாம் ருக்கூஉ விலிருக்கும்போது வந்து சேர்ந்தால் இமாம் ருக்கூஉவைவிட்டு நீங்குவதற்கு முன் தக்பீர் சொல்லி அப்புறம் இமாமுடன் ருக்கூஉவில் சேர்ந்து கொள்ளலாமென்று தோன்றினால் அவ்வாறு செய்யலாம். இல்லையேல், இமாமுடன் ருக்கூஉவில் சேர்ந்துகொண்டு அதிலேயே மூன்றுமுறை தக்பீர் சொல்லவேண்டும். ஆனால் ருக்கூஉவில் தக்பீர் சொல்லும்போது கையையுயர்த்தவேண்டியதில்லை. ருக்கூஉவில் தக்பீர் சொல்லி முடிவதற்குள் இமாம் அதைவிட்டு நீங்கிவிட்டால் தக்பீர் சொல்லுவதையும் விட்டுவிடவேண்டும். இமாம் ஒரு ரக்அத் தொழுதபின்போ அல்லது அவர் இரண்டாவது ரக்அத்தில் ஸுஜூது அல்லது இருப்பில் இருக்கும்போதோ வந்துசேர்ந்தால் இமாம் சலாம் கொடுத்தபின் எழுந்து தவறினவைகளைத்தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். ஆனால் தவறியவைகளை நிறைவேற்றும்போது கிராஅத்துக்குப்பின்தான் தக்பீர் சொல்லவேண்டும். இமாமுடன் தொழுகை கிடைக்காவிடில் வேறு இடத்தில் ஜமாஅத் நடந்தால் அங்கு சென்றேனும் இமாம் ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றவேண்டும். இல்லாவிடில் நாலு ரக்அத் நபில் தொழுகவேண்டும்.

வஹ்தத்துல் உஜூத். அல்லது உள்ளமைப் பொருள் ஒன்றே

(சென்ற அக்டோபர்மீ 294-ம் பக்கத் தொடர்)

மெய்யன்பீர்! மேற்சென்ற மூர்த்திகள் மூவரின் கூற்றுகள் மூன்றும், முத்தைபோன்றனவாகும். அரிநெல்லிக்கு நெறி எத்துணை என்பதைக்கூட எண்ணி அறியா, அறிவிலிகளில் சிலர், மார்க்கமறியா மாக்களிடையே சென்று "மஃரிபத்" (மெய்ஞ்ஞானம்) "இல்மெலத்துன்னீ" (தான்தோன்றி அறிவு) "இல்முல் ஹகாயிக்" (அகமியக்கலை) "இல்முல் அஸ்ரார்" (இரகசியக் கல்வி) என்னும் பெயர்களின் திரைமறைவில், பல பல குப்று (அவிசவாசமா)னவும்' ஷிர்கா (இணைவைத்தலா) னவுமான கொடிய விஷயங்களைக் கூசாமல் களகளவென்று கொட்டி கவிழ்த்துவிட்டு,கடைசியில் நான் உங்களுக்கு சொல்லக்கூடாத இரகசியங்களை எடுத்து போதித்திருக்கிறேன். இதனால் நீங்கள் என்னை காபிர் என்று நினைத்தாலும்நினைக்கக்கூடும். அதனாலென்ன பாதகமில்லை, என்று முற்றுப்புள்ளி வைத்தபின் இதனாலேயே ஹஜ்ரத் 'அபூ அப்தில்லாஹில் குரஷி (ரஹ்) அவர்கள் அவ்வாறு கூறினார்கள்; ஹஜ்ரத் ஜைனுல் ஆபிதீன் (ரலி.) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் என்று ஒத்திகை செய்துவிடுகிறார்கள். இப்பாதகர்களைச் சூழ்ந்து கொண்டிருக்கும் பாமரமக்கள் என் செய்வார்கள்

பாவம்! தங்களுக்குத் கிடைத்த பாக்கியமே பாக்கியமென்றெண்ணி பாஷாணம் கலந்த (அவர்கள் போதித்த) பானத்தை பாலென்று தான் பருகிவிடுகின்றனர். விஷத்தை உண்ட அப்பாமர மக்கள் மெய்ஞான உஜ்ஜீவனை இழந்து அஜ்ஞான கல்லறையில் அடக்கப் பெறுவதைக் கண்ணுறும் அறிஞர்கள் அப்போதகர்களை நோக்கி அட கொலைபாதகமே!! ஏன் நீங்கள் இவ் வடாத காரியத்தை புரிகின்றீர்கள்; இது அடுக்குமா! ஆண்டகைக்கு அஞ்சுங்கள்! ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் கொணர்ந்ததைப்பற்றி அதன்படி போதனை செய்யுங்கள் என்று சொல்லப்போனால், எங்களிடம் இவ்வாறு கேட்க எந்த "ஷய்குல் இஸ்லாம்" உங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறார்! நாங்கள் அரைவது அத்துவைதமாகும். துவைதிகளான உங்களுக்குப் பிடிக்காது ஞானபோதம்; என்றெல்லாம் வாய்மதம் பேசுகின்றனர் இக்காலை அப்பேயர்.

தோழர்காள்! துன்மார்க்க மென்பது, மனிதப்பூண்டு மண்ணில் முளைத்த நாள் முதலாய் துலைக்க முடியாத ஒரு தொத்து வியாதியாகும். சன்மார்க்கத்தை சமைத்து, அதை விரும்பி அதற்கு விசேஷ சலுகைக்கிடமளிக்க வல்ல இறைவன் நாடினால் துன்மார்க்கத்தை அழித்துவிடலாம். ஆனால் அவன் அவ்வாறு நாடவில்லை என்பனபோன்ற கருத்துக்களும் குர்ஆனில் குறைவின்றி மலிந்து காணப்பெறுகின்றன. சன்மார்க்கத்தை சமைத்த சாக்ஷாத்தின் சம நீதிக்கு துன்மார்க்கத்தை தோற்றி வைப்பதும் வேண்டற்பாலது போல, சன்மார்க்கத்திற்கு சலுகை காட்டும் வல்லிறைவன் துன்மார்க்கத்தை துலைக்காமலிருப்பதும் நீதியேயாதலால் இத் துன்மார்க்கத் தூதர்களைக் கண்டு நாம் துக்கிப்பதற்கிடமில்லை. ஆனால் சன்மார்க்கச் சாரணர்களான சஹாபா, (ரலி)க்கள், அவர்களைப் பின்பற்றினவர்களான 'தாபியீன், (ரஹ்)கள் மற்றும் அவ்லியா (ரஹ்)க்கள் போன்ற பெரியார்களின் பொன்மொழிகளை புகழோடுரைத்து இகள் துன்மார்க்கத்திலே இம்மாக்களை அத்தூதர்கள் இழுத்து செல்லுவதை கண்டும் கவலைப்படாமலிருப்பதெவ்வாறு என்னலாம் நீங்கள்.

யாமுரைப்பதை சற்றே ஓர்ந்து சிந்தித்துப் பாருங்கள். நாயகத்திருவசனமான 'அஹாதீஸ், அஸ்ஹாப்கள் மற்றும் பெரியார்களின் பேருரையான' அக்பார் 'ஆஸார், முதலியவைகளையெல்லாம்விட மிகச்சிரந்ததான திரு குர்ஆன், அல்லாஹ்வின் அருள் வாக்காகும். அத்திருவேதத்தின் சில வாக்கியங்களின் மொழிபெயர்ப்பை கீழே பொரிக்கின்றோம். அதை நன்றாய் ஊன்றி படியுங்கள்.

நிச்சயமாக, அல்லாஹ், உவமைக்காக சிறு (பொருளான) கொசுவை - இன்னும் அதைவிட அற்பமானதை, எடுத்துரைக்க நாணமாட்டான் எனவே, எவர்கள் விசுவாசிகளாயிருக்கின்றனரோ, அவர்கள் அவ்வுதாரணம் உண்மையானதென்று உணருவார்கள். மேலும் எவர்கள் அவிசுவாசிகளாயிருக்கின்றனரோ, அவர்கள் அல்லாஹ் அதைக்கொண்டு என்ன உதாரணத்தை நாடினான் என்று கழறுவார்கள். (இறைவன்) அதைக்கொண்டு அனேகரை வழிதவறச் செய்வான். இன்னும் அனேகரை நேர்வழி பெறச்செய்வான். ஆனால் (நாயன் அதைக்கொண்டு பாபிகளையல்லாது (மற்றவர்களை) வழி சறுகச்செய்யான்.

இத்திருவேத வசனங்களிலிருந்து நமக்குத் தெரியவருவது யாதெனில், 'குர் ஆனின்' ஒரே வாக்கியம் அனேகரின் வழி கேட்டிற்குக் காரணமாகவும், இன்னும் அனேகரின் நேர் வழிக்கு காரணமாகவும் அமைந்திருக்கின்றதென்பதே.

வல்ல நாயனும் அல்லாஹ்வின் திருவேத வாக்கியத்தைப்பற்றியதொரு கட்டளை இவ்வாறிருக்கும் போழ்து ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி.) அவர்கள் கூறியதைக்கொண்டும் ஹஜ்ரத் ஜைனுல் ஆபிதீன், (ரலி.) அவர்களின் கூற்றைக் கொண்டும் ஹஜ்ரத் அபூ அப்துல்லாஹில் குரைஷீ (ரஹ்) அவர்களின் பொன்மொழியைக் கொண்டும் சிலர் வழிகெட்டு துன்மார்க்கத்தில் இரங்கி நடப்பதிலே நாம் ஆச்சரியங் கொள்வதற்கில்லை. ஆனால் இப்பெரியார்களின் வாக்கியங்களைக்கொண்டு எல்லாரும் துன்மார்க்கத்தில் இரங்கிவிடுவார்கள் என்றும் எண்ணலாகா.

எவர்கள் தீயர்களென்றும் பாவிகளென்றும் நாயனால் தீர்மானிக்கப் பெற்றிருக்கின்றனரோ அவர்களே இவைகளுக்குத் தப்பர்த்தம் கொண்டு கெடுவர். எவர்களை நாயன் நல்லவர்களென்று நாடினானோ அவர்கள் இவ்வாக்கியங்களைக் கொண்டு நேர்வழி பெறுவர். இவர்கள் உத்தமர்களின் உண்மைக் கூற்றுகளிலிருந்து நேர்வழி பெறுகிறார்களென்பதென்ன! அடாத காரியம் புரிந்துளரும் அஜ்ஞானிகளின் அநீதக் கூற்றுகளிலிருந்தும் அவர்கள் நேர்வழியே பெறுகின்றனர். உதாரணமாய், ஒரு சில

நூற்றாண்டுகளுக்கு முன் பஃதாத், பட்டணத்தின் பேரறிஞர்களில் ஒருவர் பள்ளியை (மஸ்ஜிதை) நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போழ்து, குடித்து மதிமயங்கிய ஒரு குடிகாரன், தள்ளாடி தடுமாறி அவ்வழியே நடந்துகொண்டிருப்பதற் கிடையே, உளரிக் குளரி இரண்டு கவிகளை அவனே இயற்றி இராகத்தோடு படித்துக்கொண்டு போனான். அவ்வரபிக் கவிகளின் பொழிப்புரை யாதெனில்,

> "ஷஃபான்" மாதத்தில் இருபது தேதிகள் சென்றுவிட்டால், உனது இரவின் குடியினத்தை பகலோடு இணைத்துவிடு. (இரவின் பாகத்தையெல்லாம் சேர்த்துப் பகலில் குடிக்கும்போது) சிறிய பாத்திரங்களால் அருந்தவேண்டாம்; காலம் சிறிய பாத்திரங்களுக்குத் தக்கவாறு (விசாலமாய், இல்லாது குறுகி இருக்கிறது.

என்பதே. ஷஃபானுக்கடுத்த மாதம் ரமலான், அல்லவா. அம்மாதம் பூராவும் பகற்காலங்களில் மதுவருந்தமுடியாது. மதுவோ எமது உயிருக்குயிரான பொருள். ரமலான், மாத பகற்காலங்களில் விடுபடப்போகும் மதுவை நினைத்தால் எமது உயிர் நடுங்காமல் இருக்கமுடியுமா? அதை ஒருவாறு சாந்தப்படுத்துவோம். அதற்குப் பரிகாரமாய் ஷஃபான் பிந்திய பத்தின் பகற்காலங்களில் அதிகமாய் குடித்துவிடலாம். அவ்வயம் வழக்கம் போல் நாம் சிறிய சிறிய பாத்திரங்களில் மொண்டு குடிக்கவேண்டுமென்பதில்லை. அவ்வாறுசெய்வதில் நேரம் வீணாய் கழிந்துபோகும் எனவே மொந்தை மொந்தையாய் எடுத்து கட கட, வென்று விடுவோம் என்பதே அக்குடிகார கவியின் கருத்து.

இப்பாக்களை செவிமடுத்தார் அப்பேரறிஞர். அவரின் உளத்தில் ஊன்றிப் பதிந்திருந்த மெஞ்ஞானவித்து முளைத்துகிளைத்து விட்டது; பூத்துக்காய்த்து பழுத்தும் போனதுமல்லாமல் கனிரசத்தேனும் பொங்கிச் சொட்டவாரம்பித்தது. அவ்வளவுதான்; மனம்போன போக்கில் அவர் முகம் இருந்த திசையை நோக்கிச் சென்று பாதாளவனம் புகுந்து விட்டார். கடைசியில் சிறப்பிற்குரிய "மக்காமு அல்லமா" வில் வந்து தங்கினர். என்றாலும் அவரின் நிலைமை இறக்கும்வரை மாறாமல் பொங்கிய மெஞ்ஞான கனிரசத்தேன் வழியும் தன்மையுடைத்தாகவே இருந்தது. இதிலிருந்து நாம் உணரவேண்டிய தென்னவென்றால், இப்பெரியார் அக்குடிகாரனின் கவிகளுக்கு, அவன் கருதிய கருத்துக்களுக்கு நேர்மாற்றமான கருத்துக் கொண்டார் என்பதே. என்னே இன்னாரின் விளக்கம் இருந்தவாறு!! இப்பெரியார் குடிகாரன் குளரிக் குளரிக் கூறிய! கவியிலிருந்து பொங்கி வடிதற்குரிய மெஞ்ஞானப் பேரின்பக் கருத்தை உணர்ந்ததில் நாம் ஆச்சரியம் கொள்ளவேண்டுவதில்லை. ஏனெனில், நமதிரக்ஷகர் (ஸல்) அவர்களின் உத்தமத் தோழர்களில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ரிவாயத்து செய்யும் கூறும், ஒரு ஹதீதில் (சமாச்சாரத்தில்) இருந்தும், நாயக மவர்களின் திருப்பேரரின் அருமைப் புதல்வர் ஜைனுல் ஆபிதீன் (ரலி) அவர்கள் கூறிய கவியிலிருந்தும், "விலாயத்தைப் பெற்ற ஹஜ்ரத் அபூ அப்தில்லாஹில் குரைஷி (ரஹ்) அவர்களின் போதனையிலிருந்தும் குப்ரை(அவிசுவாசத்தை)யும் ஷிர்க்கை (இணை வைத்தலை)யும் விளங்கிக் கொண்டிருக்கும் வீணர்களைக் கண்டு நாம் வியப்படையவில்லை யல்லவா ?

உத்தமத்தியாகம் புரிந்து உலகினர்க்கு இஸ்லாமென்னும் சத்திய சன்மார்க்கத்தை எடுத்துப் போதித்து பிரகடனப் படுத்திய மெஞ்ஞானசொரூபிகளின் உண்மைப் போதனையினால் ஒரு சிலர் காபிர் (அவிசுவாசி) களாய் போய் விடுகிறார்கள் என்றால், அஞ்ஞானம் படைத்த அறிவிலிகளான வெறியர், குடியர்களின் பாபத்திற் கிடமளிக்கும் பொய்கூற்றுகளினால், மகோன்னத மெஞ்ஞானிகளாம் பேரறிஞர்களான மறு சிலர் இருக்கவேண்டியது ஞாயந்தனே. இதில் ஆச்சரியம் என்னை ?

முன்னே கூறப்பெற்ற மூன்று பெரியார்களின் திருவாக்குகளிருந்தும், இவைகளைப் போன்ற மற்றவர்களின் கூற்றுகளிலிருந்தும் நேர்வழி பெறுவதற்கான கருத்து கொள்ளக் கூடியவர்கள், இருவகையாய்ப் பிரிகின்றனர். இவ்விரு வகுப்பினுள் ஒரு சாரார் ஈமானி (நம்பிக்கையி)ன் ஆரம்ப எல்லையில் கால்வைத்துள்ள 'முஸ்லிம், (சாந்த சீலர்)களாகும். இவர்களே "அவாம்" (சாமான்யமானவர்)களென்று கருதப்படுகின்றனர். இவர்கள் அப்பெரியார்களின் வாக்குகளிலிருந்து உத்தமமான ஒரு பொதுக்கருத்தை விளங்கிக் கொண்டு தங்கள் நம்பிக்கையை (ஈமானை) மெய்ப்படுத்துகின்றனர். அப்பொதுக்கருத்து யாதாகுமெனில்? இப்பெரியார்களின் திருவாக்கியங்களுக்கு ஆழ்ந்ததோர் உண்மைக்கருத்

திருக்கின்றது; நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கும் (ஈமானுக்கும்) நமது அனுஷ்டான முறையான சாந்தி மதத்திற்கும் (இஸ்லாத்திற்கும்) அக்கருத்து கொஞ்சமும் முரண்பாடுடையதன்று. நாம் ஆரம்ப எல்லையில் நின்றுகொண்டிருப்பதனுலும், அங்கு நாம் தெரிந்துகொண்ட விதி விலக்குகளை சரிவர ஒழுகி நடக்காமையாலும், அக்கருத்து நமக்கு புலனுகவில்லை. நாம் கால் வைத்திருக்கும் ஆரம்ப எல்லையிலேயே தயங்கி நின்றுவிடாமல் விதி விலக்குகளை ஒழுகி நடந்து செல்வோமெனின் அக்கருத்து நமக்கு புலனுகும். முத்தைப்போன்ற அக்கருத்து ஜ்வலித்துக்கொண்டிருக்கும் உச்சஸ்தானத்தைப் போயடையும் பாட்டையில்தான் நாம் இறங்கி நின்று கொண்டிருக்கின்ரேம். எனவே அக்கருத்து நமது சாந்திமதத் (இஸ்லாத்)தின் நிர்ணயக் கொள்கைக் (அகீதாவிற்)கும், அனுஷ்டானங் (அஃமால்) களுக்கும் எவ்விதத்திலும் முரண்படுவதாயில்லை. வெகு தூரத்திற்கப்பால் நமக்கு நேர் எதிரிலே அக்கருத்து ஜ்வலித்துக் கொண்டுதானிருக்கிறது. நமது மனக்கண் மங்கி இருப்பதால் நமக்கிப்பொழுது அ(க்கருத்)து புலனுகவில்லை. நமது மனக்கண் மங்கி இருப்பதற்கு காரணமாவது :—

> அவ்வாரன்று. எனினும் அவர்களின் ஹிருதயங்களின்மீது அவர்கள் சம்பாதிப்பவர்களாயிருந்தார்களே. அதுவே (பாபமே) துருவாய்ப்பற்றி இருக்கிறது. குர்ஆன்.

என்னும் வேத வாக்கியத்திலுள்ளபடி, நாம் செய்த பாவங்களே நமது அககண் ஒளியை அணைத்துகொண்டு வருகின்றன. ஆதலால் நம்மை நாம் நொந்துகொண்டு இப்பொழுதே நம் குறையை நீக்கிக் கொள்ளவேண்டும். அல்லாமல் நாமிருக்கும் சாந்திமதத் (இஸ்லாத்)தில் குறை இருப்பதாகவோ அல்லது அப்பெரியார்களின் திருவாக்கியக் கருத்துகளில் குற்றமிருப்பதாகவோ எண்ணுவது மடமையினும் மடமை (ஜஹ்லெ முரக்கப்) ஆகும், என்பதே சர்வ சாதாரண மக்கள் (அவாம்கள்) விளங்கும் பொதுக்கருத்தாகும்.

சாமான்யர்கள், பெரியார்களுடைய ஆழ்ந்த கருத்தையுடைத்தனவான வாக்கியங்களுக்கு மாத்திரம் இத்தகைய பொதுக்கருத்தை கொள்கின்றனர் என்பதென்ன? குர்ஆன் 'ஹதீஸ்' களிலுள்ள "முதஷாபிஹாத்தா" (சாமான்யர்களால் ஒரு குறிப்பான கருத்தைக் கொள்ள முடியாதவைகளா)ன வாக்கியங்களுக்கும் இத்தகைய பொதுக் கருத்தையே கொடுக்கின்றனர்.

அப்பெரியார்களின் கூற்றுகளிலிருந்தும் குர்ஆன், 'ஹதீஸ்'களின் அவ்வித வாக்கியங்களிலிருந்தும் இக்கருத்தை விளக்கிய ஒரு சாமான்ய மனிதர், அதன்பின் சாமான்யராயிருப்பதில்லை. அவர் இக்கருத்தை உணர்வதே அடுத்தபடியில் கால் வைப்பதாய்க் கருதப்படுகிறது. அதையே நாம் "எகீன்" (திடசித்தம்) என்று கூறுகிரேம். ஆரம்பத்தில் அவரின் அந்தஸ்த்து, வெறுமனே நம்பிக்கை (ஈமான்) மட்டிலுமிருந்தது. இப்பொழுது அவர் திடசித்த நம்பிக்கையாளர் (மூஃமினெமூகின்) என்னும் விசேஷ பட்டத்திற்குரித்தானவராய் திகழ்கிரு்ர். இவ்வந்தஸ்த்தை அடைந்த ஒருவர் விதி விலக்குகளை கொஞ்சம் பேணிநடந்தால், அவரின் "எகீனே" (திடசித்த நம்பிக்கையே) வெகுதூரத்திற்கப்பால் ஜ்வலித்துக் கொண்டிருக்கும். அக்கருத்துக்களை அன்னருக்கொருவாறு துலக்கியும் காட்டக்கூடும். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை; தூரதிருஷ்டி கண்ணுடியை நாம் அணிந்து பார்க்கும்பொழுது அனேக மைல்களுக்கப்பால் இருக்கும்பொருள் நமக்குப் புலனுகவில்லையா?

(தொடரும்)

பெருமை

எவனுடைய இருதயத்தில் அணுவளவேனும் பெருமையிருக்குமோ அவன் சுவர்க்கம் புகமாட்டான், என்று நபி பெருமானுர் (ஸல்.) அவர்கள் சொல்ல, அங்கிருந்த ஒருவர் "தன்னுடைய உடை, பாதரக்ஷை நல்லதாக யிருக்கவேண்டு மென்று விரும்புகிறுனே?" என்று சொன்னுர். அப்போது நபி பெருமான் (ஸல்.) அவர்கள் ஆண்டவன் அழகானவன்; அவன் அழகையே விரும்புகிறுன். பெருமையானது உண்மையை மிகைத்து (மற்ற) மனிதர்களைத் தாழ்வு படுத்தக்கூடியதாக யிருக்கிறது" என்று சொன்னுர்கள்,

நஞ் சகோதரர்களுக்கு

கண்ணியம் வாய்ந்த எனது பெரியோர்காள்! அன்பர்காள்!! நண்பர்காள்!!! முஸ்லிம்களாகிய நம்மில் தொழுகையை நிறைவேற்றுபவர்கள், நோன்பு நோற்பவர்கள், ஹஜ்ஜுச் செய்பவர்கள், ஜக்காத்துக் கொடுப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்பது சற்று சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு நன்கு தெரியவரும். அப்படி இருந்தும் நம்மில் அமலில்லை என்பதாகவே நமது வாயிஜ்களும், பிரசங்கிகளும், மதபோதகர்களும், மார்க்கோபன்யாசகர்களும் நம்மை எப்பொழுதும் குறைகூறிக்கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் கூறும் குறையை நாம் மறுத்துவிடவும் முடியவில்லை. ஏனெனில், நாம் எவ்விதமாக அமல் செய்யவேண்டுமோ அவ்விதமாகவே அந்த அமல் இருக்கவேண்டுமென்று நாம் முயற்சி செய்வதில்லை. "ஜனங்களுக்கு நன்மையை ஏவித் தீயதை விலக்கும்படியான ஒரு வர்க்கத்தினர் உங்களில் இருக்க வேண்டும்" என்று அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா நம்மைக் குறித்துக் கூறிய கட்டளைப்படி நம்மில் அப்படிப்பட்ட வர்க்கம் இல்லை என்பதை நாம் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இவ்வர்க்கம் நம்மில் இல்லாததால் நமக்குள் மூடஆசாரங்கள், மூடநம்பிக்கைகள், தந்நலம், பேராசை, ஒரு தலைப்பக்ஷம், பகைமை, நயவஞ்சகம், வெட்கமின்மை முதலிய கெட்ட குணங்களும் துற்நடத்தைகளு முண்டாகிவிட்டன. இவைகளின் காரணமாக நாம் நாளுக்குநாள் தரித்திரத்திலும் வறுமையிலும், கவலையிலும் பீடிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறோம்.

சகோதரர்களே! நமது கிரியைகளைச் சீர்திருத்திக் கொள்வதற்கு இரண்டு வழிகளே இருக்கின்றன. ஒன்று திருகுர்ஆன், மற்றொன்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை விமர்சனம் செய்யப்பட்ட ஸீரத். இவைகளிரண்டையும் கவனித்து நமது கிரியைகளை நாம் சீர்திருத்திக் கொள்வோமாயின் இன்னும், இவ்விரண்டு மார்க்கங்களுக்கும் ஏற்றவாறு செய்வோமாயின் நமது கவலைகள், கஷ்டங்கள், அமைதியின்மைகள் ஆகியவைகளை விட்டு விடுதலை பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாகி விடுவோம். ஆகவே, உருது பாஷையை அறிந்த ஆன் பெண் இருபாலரும் திருகுர்ஆனின் உறுதிமொழி பெயர்ப்புகளையும் (தமிழ் பாஷையை அறிந்த ஆண் பெண் இருபாலரும் திருகுர்ஆன் தமிழ்மொழி பெயர்ப்புகளையும்—ப. ர்) உடன் வைத்துக்கொண்டு ஓதுவதுடன் நாம் செய்யவேண்டியதென்ன? செய்து கொண்டிருப்பதென்ன? என்ற விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மார்க்கத்திற் குழைக்கும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வாங்கிப் படித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நற்குண நன்னடக்கைகளைப் பற்றிய விவரங்களையுணர்ந்து அதன்படி நடப்பதற்கு முன் வருவீர்களாக. இவ்விதமாக முஸ்லிம்களது ஒவ்வொரு குடும்பமும் திருகுர்ஆனை அதிகாரியாகவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நற்குண நன்னடக்கைகளை வழிகாட்டியாகவும் ஏற்படுத்தி மரணம், ஜீவியம், விவாகம், விருத்தசேதனம், முதலிய சுப அசுப காரியங்களில் திரு குர்ஆன் ஹதீது ஆகியவைகளது கட்டளைகளுக்கிணங்கக் காரியங்களை நிறைவேற்றக் கற்றுக்கொள்ளவேண்டும். அப்படிக் கற்கும் பக்ஷத்தில் வெகு சீக்கிரத்தில்உலகத்திலுள்ள எல்லா வகுப்பினரைப் பார்க்கினும் முஸ்லிம்கள் தாம் மிகைத்தவர்கள் என்று திருகுர்ஆன் வாக்களித்துள்ள வெற்றி நிச்சயம் அடைவதற்குத் தகுதியுள்ளவர்களாகி விடுவீர்கள்.

பிரியமுள்ள சோதரீர்! மரணம் ஜீவியம் ஆகிய இரண்டையும் ஏற்படுத்தியதற்குக் காரணமென்ன? என்பதைப் பற்றி நாம் விசாரணை செய்யப்புகின் திருகுர்ஆனில் அதற்கு தக்கவிடை நமக்குக்கிடைக்கிறது. "உங்களில் கிரியைகளைச் செய்வதில் மிகவும் அழகியவர் யார்? என்பதை அறிந்துகொள்வதற்காகவே" என்பதாக திருகுர்ஆன்கூறுகிறது. எனவே, நற்கிரியைகள் இரண்டுவகைப்படும். ஒன்று இறைவணக்கம்; மற்றொன்று ஜனஊழியம்

நபிகள்நாயகம் (ஸல்) அவர்களுடையவும், சங்கைவான்களான ஸஹாபிகளுடையவும் ஜீவியங்கள் முழுவதும் இவ்விருவகை நற்கிரியைகள் அடங்கியவைகளாகவே இருக்கின்றன. அப்பெரியார்கள் ஒவ்வொரு க்ஷணத்திலும் அல்லாஹுதஆலாவை ஞாபகத்திலேயே வைத்திருந்ததுடன் ஜனங்களுக்கு ஊழியம் செய்வதாகவே இருந்தனர்.

எனவே, முஸ்லிம்களாகிய நாமும் அவர்களைப்பின்பற்றி எழுந்திருத்தல், உட்காருதல் ஆகிய சகலகாரியங்களிலும் அவனது நாமத்தை ஜபித்துக் கொண்டிருப்பதுடன் தனது சொந்த வாழ்க்கைக்குரிய முயற்சிகளுடன் ஏதேனும் ஒரு விதத்தில் ஜன ஊழியமும் செய்து ஜனங்களது கஷ்ட சங்கடங்களை இயன்றவரை கொஞ்சமேனும் நிவர்த்தி செய்துகொண்டே இருக்கவேண்டியது அவசியமாகும். "எல்லாசிருஷ்டியும் அல்லாஹ்வின் குடும்பமேயாகும். ஆகவே அவனது குடும்பத்தாருக்கு யார் அதிகமான ஊழியம் புரிகின்றனரோ அவர்தான் அவனிடத்தில் எல்லாரினும் அதிகப்பிரியமானவராக இருக்கிறார்?" என்பதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தஹதீதை வாயிஜ்களும் மற்றவர்களும் அடிக்கடி தங்களது பிரசங்கங்களிலும் உபதேசங்களிலும் பிரஸ்தாபிப்பதையும், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் வியாசங்கள் பலவற்றிலும் இந்தஹதீது பிரஸ்தாபிக்கப்படுவதையும் நாம் கேள்விப்பட்டுமிருக்கிறோம், பார்த்துமிருக்கிறோம். ஆகவே, முதலாவதாக நாம் நமது சட்டைக்கழுத்தினுள் முகத்தை வைத்து நமது அகத்தைப் பரிசோதித்துப் பார்த்து, இந்த ஹதீதின்படி நாம் நடக்கிறோமா என்பதைக்கவனித்துப் பார்த்தோமாயின், இந்த ஹதீதின்படி நடக்கவில்லை என்பதை நிச்சயமாக அறிந்து கொள்வோம். உங்களது ஜீவியத்திலும், செல்வத்திலும் எத்தனை பாகத்தை நண்பர்களுடன் கூடிக்குலாவுவதிலும், வேடிக்கை விளையாட்டுகளிலும், அரசாங்க அதிகாரிகளைக் குஷிப்படுத்துவதிலும், சுகபோகத்திலும், இச்சையை நிறைவேற்றிக் கொள்வதிலும், தற்பெருமை அகம்பாவம் ஆகியவைகளிலும் வீணாகச் செலவு செய்திருக்கிறீர்கள் என்பதைக் கவனித்துப் பாருங்கள். இந்தக் காலங்களும் பொருள்களும் எங்கு சென்றன? சென்றுபோன உங்களது வாழ்நாட்களில் ஒரு க்ஷணப் பொழுதாகினும், இன்னும் செலவாகிவிட்ட உங்களது செல்வங்களில் அணுப்பிரமாணமேனும் நீங்கள்நன்மை செய்வதற்கென்று திரும்ப வரப்போகின்றனவா? என்பதை யோசித்துப் பாருங்கள். வரப்போவதில்லை என்பது திண்ணம். ஆகவே, நீங்கள் எவ்வளவு பெரிய நஷ்டத்திற்காளாகி இருக்கிறீர்கள். போனது போகட்டும், இனிமேலேனும் எஞ்சியுள்ள ஜீவியத்தையும் செல்வத்தையும் ஏன் ஜாக்கிரதையாகக் கழிக்கலாகாது என்பதைப்பற்றிச் சிந்தியுங்கள். உங்களது ஜீவியத்திலும் செல்வத்திலுமிருந்து சில மணிநேரங்களும், சில துட்டுக்களுமேனும் ஹஜ்ரத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களது பரிசுத்தமானதும் தெளிவானதுமான ஊழியத்தில் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கும்படி இஸ்லாம் உங்களை வினவுகின்றது. முஸ்லிம்களே! தூங்கிக்கொண்டிருக்கிற உங்களது ஆன்மாக்களைத் தட்டி எழுப்புங்கள். இப்பெரிய ஊழியத்தைச் செய்வதற்காக உங்களது இருதயங்களைச் சித்தம் செய்யுங்கள். முஸ்லிம்களே! அல்லாஹுதஆலா தனது திருமறையில் தன்னைப்பற்றி "றப்புல் ஆலமீன்" அதாவது அகிலத்தார்களை ரக்ஷித்துக் காத்துப் பரிபக்குவப்படுத்தி வளர்ப்பவன் என்று கூறி இருக்கிறான். எனவே, நம்மையும் ஏனைய எல்லா உலகத்தையும் வளர்ப்பவன் அவ்வொரு றப்பேயாகும் என்பதும், அவனது பரிபாலனத்தின் கீழிலேயே முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார், நல்லோர், தீயோர் ஆகிய எல்லோரும் வாழ்ந்து குறிப்பிட்டகாலதவணை முடிந்தவுடன் இவ்வுலகை விட்டுச்சென்று விடுகின்றோம் என்பதும் தெளிவாகப் புலப்படுகிறது.

அல்லாஹுதஆலா தன்னை றப்புல் ஆலமீன் என்று திரு குர்ஆனில் சொல்லி இருப்பது போலவே நமது கடைசி நபியாகிய ஸெய்யிதுனா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களை "றஹ்மத்துன்லில் ஆலமீன்" அதாவது அகிலத்தாருக்குக் கருணை என்பதாகத் திரு குர்ஆனில் அருளி இருக்கிறான். எனவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையென்னும் உஜூதானது முழுவுலகத்திற்கும் கருணையாக இருக்கிறது. ஆகவே, அந்த நாயகம் (ஸல்) அவர்களது நற்குண நன்னடக்கைகளின்படி காரியங்களைச் செய்வோமாயின் நமது காரியங்களும் றஹ்மத்தாக அதாவது கருணையாக மாறி விடுகிறது.

முஸ்லிம் சகோதரர்களே! முனிசிபல்போர்டு, டிஸ்டிரிக்ட் போர்டு, அஸம்பிளி, கௌன்சில் முதலியவைகளுக்குத் தேர்தல் நடைபெறும் காலத்தில் உங்களுடைய ஊழியர்கள் என்று நினைத்து நீங்கள் வாக்களித்துத் தெரிந்தெடுக்கிற உங்களது பிரதிநிதிகள் சமூக நன்மைக்காக இஸ்லாத்தின் சட்டத்திற்குட்பட்டு என்ன காரியம் செய்திருக்கிறார்கள் என்பதையும் கவனித்து அவருக்கு வாக்களியுங்கள். இந்தப் பிரதிநிதிகள் விரும்புவார்களாயின், இன்னும் இவர்களுக்கு உண்மை உணர்ச்சி இருக்குமாயின் நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கான துறைகள் அவசியம் வெளியாகிவிடும். ஆனால், அவர்கள் செல்வந்தர்களாகவும், பசியென்ற கவலை யற்றவர்களாகவுமிருப்பதானது கஷ்டத்திற்குட்பட்ட ஏழை ஜனங்களது நிலைமையைச் சீர்திருத்துவது எப்படி என்பதைப் பற்றிச்சிந்திக்கவில்லை. ஆனால், இந்த போர்டில் அங்கத்தினராகி விட்டதால் இன்னின்ன விதத்தில் நாம் கீர்த்தி வாங்கவேண்டும், புகழ் சம்பாதிக்கவேண்டும் என்றும், இவைகள் மூலமாக இன்னின்ன விதமான சுகபோகங்களை அனுபவிக்கவேண்டும் என்ற கவலை மட்டிலும் நிச்சயமாக உண்டாகிவிடும். ஆதலால், அவைகளை அடைவதற்காக ஒரு பார்ட்டியை ஏற்படுத்தி விளம்பரங்கள், பிரசுரங்கள் மூலமாக ஜனங்களிடம் விழிப்பை யுண்டாக்கித் தனக்கு ஆலிமென்றும், லீடரென்றும், பீரென்றும், சட்டசபை அங்கத்தினரென்றும் கீர்த்திப் பிரதாபத்தை யுண்டாக்கிச் சுகவாழ்வடையகின்றனர்.

ஆனால், உண்மையான முறையில் இஸ்லாமிய சட்டப்படி சமூகத்தை வளர்ப்பவராக ஆகுபவர்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் "பைத்துமால்" என்னும் பொதுநிதியை ஏற்படுத்தி அவ்வட்டாரத்திலுள்ள ஏழை சிறுவ சிறுமிகளுக்குக் கல்வி, வித்தை ஆகியவைகளை யளிப்பர், விதவை, அனாதை, இயலாதவர், கஷ்டப்படுவோர் ஆகியவர்களுக்கு உதவிபுரிவர். அத்துடன் மதபோதர்களையும் மதபோதகிகளையும் நியமித்து ஸ்திரீ புருஷர்களுக்கு மார்க்க சம்பந்தமாகவும், தேச சம்மந்தமாகவுமுள்ள அறிவுகளை வளர்ச்சி செய்து ஜனங்களிடம் ஒற்றுமை, நற்குண நன்னடத்தை ஆகியவைகள் உண்டாகச் செய்து லௌகீக வைதீகம் சம்பந்தமாகச் சரியான அபிப்பிராயம் கொடுக்கத் தக்கவர்களாகத் தயார் செய்வர். உலகிலுள்ள சகல கலைகளிலும், வித்தைகளிலும், தொழில்களிலும் மிக்கவர்களாகும்படி பயிற்சி அளிப்பர். இவ்விதமான காரியங்களைச் செய்பவர்களைக் குறித்துத்தான் இறைவன் தனது திருமறையின் கண் "நன்மையை ஏவித் தீயதை விலக்கும்படியான ஒரு கூட்டத்தினர் உங்களில் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கவேண்டும்" என்று கூறியுள்ளான். இவ்வாறான ஒரு கூட்டம் நம்மவரில் உண்டாகி அக்கூட்டத்தினர் வெற்றியுடன் மேற்கண்ட காரியங்களைக் கவனிப்பாராயின், தற்போதைய இருள் சூழ்ந்த இக்காலத்திலும்கூட முஸ்லிம் அல்லாதாரிடம் "அல்லாஹ்வின் மார்க்கத்தில் கூட்டங் கூட்டமாகப் பிரவேசிப்பார்கள்" என்ற தெய்வத் திருமறையின் கருத்து பிரதி பலிப்பதை நிச்சயமாகச் செய்து காண்பிக்க முடியும். இத்தகைய ஒரு கூட்டம் நம்மிலேற்பட்டு திரிகரண சுத்தியாக அக்கூட்டத்தினர் உழைக்கவும், அவர்களது உழைப்பு பயன்படவும் இறைவன் கிருபை செய்வானாக. ஆமீன்.

நமது அனுதாபம்

சிலோன் கொழும்பு பிரபல வர்த்தகரும், தர்மசீல கொடை வள்ளலும், ஆலிம்களின் அன்பரும், நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தின் போஷகருமாகிய ஆலீஜனாப் அல்ஹாஜ் P. B. உம்பிச்சி J. P. அவர்கள் இப்பொய் உலகமாகிய தாருல்பனாவை விட்டு மெய் உலகமாய தாருல்பகா அளவிற் சேர்ந்தார்களென்னும் துக்ககரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருந்துகிறோம். அல்லாஹ்தஆலா அவர்களுக்கு மேலான பதவியை அளிப்பானாக. மர்ஹூம் அவர்களது வபாத்தானது பொதுவாக முஸ்லிம் உலகிற்கே ஓர் பெரும் நஷ்டமாகுமென்பது வெள்ளிடை. அல்லாஹ்தஆலா நம்மனைவர்களுக்கும், குறிப்பாக அவர்களது பந்துமித்திரர்களுக்கும் 'சப்ர்' என்னும் பொறுமையைத் தந்தருள் புரிவானாக. அவர்களது பந்துக்களுக்கும் குறிப்பாக மருகர் கான் சாஹிப் C. V. கோயா அவர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்தாலியும் காதியானும்

முசோலினியின் ஊர்க்காரியிடம் காதியானி ஜெனரலின் படுதோல்வி.

(ஜமீன்தார் உதவி ஆசிரியர் எழுதியது).

சென்ற 1934-ம் வருஷத்து வசந்த காலத்திலே ஒரு நாள் மாலை 5 மணிக்கு லாகூர் நகரம் மிகவும் வனப்பும் ரம்மியமும் பொருந்தியதாக இருந்தது. நகரிலுள்ள சிங்காரத் தோட்டங்களிலும், ஹோட்டல்களிலுள்ள உத்தியான வனங்களிலும் ஜனங்கள் கும்பல் கும்பலாகக் கூடி ஒருவருக்கொருவர் பேசி அகமகிழ்ந்து கொண்டிருந்தனர்.

இதற்குள் அங்குள்ள ஸிஸிலி ஹோட்டலின் முன் சில மோட்டார்கள் வந்து நின்றுகொண்டிருந்தன. ஹோட்டலிலுள்ள வேலைக்காரப் பையன்கள் விதம் விதமான பதார்த்தங்களை தட்டைகளில் வைத்துக்கொண்டு இங்கும் அங்கும் சென்றுகொண்டிருந்தனர். ஹோட்டலில் ஒருவிதமான சந்தோஷக் குறிகள் காணப்பட்டன. அதன் வாலிப மானேஜரது முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது. இதிலிருந்து பெரிய வேட்டை அகப்பட்டுவிட்டது போல் தெரியவந்தது. ஹோட்டல் ஹாலில் இருபது முப்பது பேர்கள் வரை கூடி இருந்தனர். இவர்களில் மேனாட்டு மோஸ்தராவில் முற்றிலும் மூழ்கி இருக்கிற வாலிபர்களுமிருந்தனர். ஆனால், அவர்களிற் பெரும்பாலர் நீண்ட ஷேர்வானிகளும், ஜுப்பாக்களும் அணிந்தவர்களாக இருந்தனர். இவர்களது தாடியையும் தலைப்பாகைகளையும் இதர கோலங்களையும் பார்க்கும்போது இவர்கள் அனைவரும் மார்க்க பக்தி நிறைந்த புண்ணியவான்கள் என்றே தோன்றும். அன்றியும், இவர்களுக்குத் தலைவராக இருப்பவர் "ஹஜ்ரத்வாலித்" (தந்தை) அவர்கள் என்று கூறியவுடன் சபையிலுள்ள மற்றவர்களெல்லோரும் ஸலவாத்துகளை ஓதிக் கண்ணில் கையை வைத்துக்கொண்டிருந்தனர்.

எனவே ஹோட்டல் மானேஜர், வேலைக்காரப் பையன்களை அழைப்பதற்காக மணி அடிக்கும் அலாரத்தின் பட்டனில் கையை வைத்தார். உடனே பணிப் பையன் ஒருவன் அவ்வறையினுட் பிரவேசித்தான். மானேஜர் சாகிப் அவனை சைகையாற் றன்னிடமழைத்து "மிஸ். ரோபோவை அழைத்துவா" வென்று கட்டளையிட்டார். ஐந்து நிமிஷங்களுக்குப் பின் அறையின் தலைவாசல் மெதுவாகத் திறக்கப்பட்டது. மேனாட்டு மங்கையொருத்தி தனது பொன் மயிர்களைத் தன் சீப்புக்களால் கோதிக்கொண்டு உள்ளே பிரவேசித்தாள். ஹோட்டல் மானேஜர் அவளை புன்னகை பூத்த முகத்துடன் தலையிலிருந்து கால்வரை ஒருமுறை ஏறெடுத்துப் பார்த்து அவளிடம் "இன்று நமது ஹோட்டலுக்கு வந்திருக்கிற விருந்தினர்கள் யாவரென்பதை நீயறியாயோ? நமது ஹோட்டலின் எதிர்காலம் உனது மேனாட்டு மயக்குவெற்றி பெறுவதைப் பொறுத்திருக்கிறது. ஹாலில் வீற்றிருக்கும் விருந்தினருக்கு உபசாரம் செய்வாயாக. ஆனால், அவர்களின் தலைவரிடம் உனது மாய வேலைகள் பலித்துவிட்டால் "ஹோட்டல் ஸிஸிலி" என்று அழைக்கப்படுகிற இந்த இடம் முஸ்லிம்களுக்குச் சொந்தமானதாக இருப்பதன் காரணத்தால் பெரும்பாலும் செழிப்பில்லாததாக இருந்து வருகிறது ஆகவே, உனது மாய லீலைகளுக்கு அந்த முடிசூடா மன்னர் வசப்பட்டு விடுவாராயின் இந்த ஹோட்டல் அவரது வாசஸ்தலமாக மாறிவிடும். முடிசூடா இம்மன்னரது கண் ஜாடை ஒன்று மட்டிலும் அவரது சிஷ்ய குழாத்தினர் இந்த ஹோட்டலை அபிவிருத்திக்குக் கொண்டுவரும்படி நிர்ப்பந்தித்து ஏனைய பெரிய ஐரோப்பிய ஹோட்டல்களுக்குச் சமமானதாக ஆக்கிவிடும் என்று கூறி அனுப்பினார்.

இத்தாலிய இளநங்கையாகிய இவ்வதிரூபிக்கு இவ்வளவு கூறியது போதுமானது. மேலும், ஒரு சிறு சமிக்ஞை மாத்திரம் போதுமானது. அதிக சமர்த்துக்காரியாதலால், தனது எதிர்

காலத்தின் இரகசியம் அவ்வாரணங்கியின் கைவச மிருப்பதாகவே அந்த ஹோட்டல்காரர் நினைத்திருந்தார். ஆனால், தலைவிதியை யார் தான் முற்கூட்டியே நிதானிக்க முடியும். கிணறு வெட்ட பூதம் வெளிப்பட்டது போலும், ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றானது போலும், ஹோட்டலின் எதிர்கால அபிவிருத்தியை நாடி மானேஜர் செய்த இக்காரியம் அந்த ஹோட்டலுக்கிருந்த அற்ப சொற்ப கிராக்கியையுங்கூட உலைவைத்து விடும் என்பதை அவர் உணர்ந்தாரில்லை.

அந்த ஹாலினுள்ள கடைசித் தலைவாசற் கதவு கொஞ்சங் கொஞ்சமாகத் திறந்தது. ஹாலுக்குள் இவள் பிரவேசித்ததானது பூர்ணச சந்திரன் தன்றண் கதிர்களைவீசி உதயமானது போலிருந்தது. ஆங்கு கூடியிருந்த வாலிபர் வயோதிகர் ஆகிய யாவரும் இவள்பால் பார்வையைச் செலுத்தி இவளை நோக்கிய வண்ணமாக இருந்தனர். அச்சபையின் தலைவரது கீழ்நோக்கிய பார்வையும் கூட அவளது முக ரூபலாவண்யத்தை ஏக்கமுடன் பார்த்தவண்ணமிருந்தது. அவளது அழகென்னும் மின்சார சக்தியானது அங்கிருந்த வயோதிகர் வாலிபர் ஆகிய இருபாலாரையும் சமமாகவே தாக்கிக் கொண்டிருந்தது. இதற்குள் மற்றொரு தலைவாசல் வழியாக ஒரு பணிப்பையன் தோன்றி ஆங்கு மூலையில் இருந்த கிராம்போன் பெட்டியினண்டையில் ரிகார்டுகளின் பெட்டியை வைத்தகன்றான். இத்தாலிய மங்கையான இவள் அப்பெட்டியின்பால் சென்று அந்த ரிகார்டுகளை வைக்கத் தொடங்கினாள். பெட்டியிலிருந்து தோன்றும் இனியகுறலோசையும், மனத்தைக் கவரத்தக்க பாடல்களும், இவளது முகதாமரையும் அங்கிருந்தவர்களது உள்ளத்தைக் கொள்ளை கொண்டுளங்களைக் குழைத்தது.

பின்னர், அவளது சைகைகளையுணரும்படியான அந்த ஜனங்கள் ஆகாரமருந்துவதற்கு முன்னர் அவர்களிடம் அவளை அந்த ஹோட்டல் மானேஜர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

பின்னர், அதே இரவு 12-மணிக்கு இவ்வடியேன் "ஜமீன்தார்" பத்திரிகாலயத்தில் தந்திச் சமாசாரங்களின் மொழிபெயர்ப்புகள், இதர வியாசங்கள் முதலியவைகளை ஒழுங்கு செய்து கொண்டிருந்தபோது ஸிஸிலி ஹோட்டலின் வாலிப மானேஜர் எனது அறைக்குள் வேகமாக வந்தார். அவரது முகத்தில் தூசு படிந்திருந்தது. அவர் திக்பிரமை யடைந்தவரைப்போல் காணப்பட்டார். நான் அவரை நாற்காலியில் உட்காரும்படி கூறி அவருக்கு நாற்காலியும்கொடுத்தேன். ஆயினும், அவர் தன் நிலைமையையிழந்து வந்திருந்ததால் அவருக்கு உட்காருவதற்காக நான் நாற்காலியை அளித்ததையுங்கூட அவர் உணரவில்லை. இவரது இந்நிலைமையைப் பார்த்து நான் ஆச்சரியமடைந்தவனாக அவரைநோக்கி, ஏன் மன்சூர்சாகிப் சுகமாக இருக்கின்றீர்களல்லவா? ஏன் இவ்வளவு பரபரப்பு? என்று வினவினேன். அதற்கவர் கொடுத்த மறுமொழியானது "மிஸ் ரோபோ தூக்கிக்கொண்டுபோகப்பட்டாள்" என்ற வாக்கியமாக இருந்தது.

பிறகு, நான் அவருக்கு அருந்த ஷர்பத்துகளும் சிகரட்டுகளும் அளித்தபின் அவரது நிலைமை அவரிடம் வந்தது. பிறகு சாவதானமாக நடந்த விருத்தாந்தங்க ளத்தனையும் கூறினார். அதாவது அழகிற் சிறந்த வனிதையான அந்த இத்தாலிய ஸ்திரீயின் மூலமாகத் தனது ஹோட்டலை அபிவிருத்தி செய்து கொள்ளலாம் என அந்த மானேஜர் நம்பி இருந்தார். ஆயினும், ஒரு சமிக்ஞையின் மூலமாக அவள் ஸிஸிலி ஹோட்டலுக்குப் பதிலாக காதியான் நகரமாளிகையை அலங்கரிப்பதற்காகத் தூக்கிச் செல்லப்பட்டாள்" என்பது தெரிய வந்தது.

முஸோலியின் ஊர்க்காரியான ஒரு வனிதை எவ்விதமான பீரங்கியும் துப்பாக்கியும், வெடிக்குண்டு வீசும், விமானமும், டாங்கியும், மெஷின் பீரங்கிகளும் இல்லாமலும் எவ்வித மான உயிர் சேதத்தையும் உண்டாக்காமலும் காதியான் கோட்டையை வீழ்த்தி விட்டனள். இத்தாலிய சர்வாதிகாரியான முசோலினி அபிசீனியாவின் மீது படை யெடுப்பதற்கு முன் காதியான் கோட்டையை அவரது ஊர்க்காரிகைப் பற்றிய விதத்தை ஒருமுறை கவனித்திருப்பாராயின் ஆயிரக் கணக்கான குற்றமற்ற அபிசீனியரது உதிரம் ஆற்றுப் பெருக்குபோல் ஓட்டப்படவேண்டிய அவசியமே இருந்திருக்காது.

எவ்வாறாயினும் ரோபோ காதியான் சென்று விட்டனள். ஸிஸிலி ஹோட்டலின் மானேஜர் கூறிய வாய்மொழிப்படி அவள் பலபித்னவிற்கும் இலக்காகிவிட்டாள். அவளுக்கு இவ் விஷயம் அதுபோழ்து தெரியாதிருந்தாலும் பின்னர் காதியானிலிருக்கும்போதேனும் தெரிந்திருக்கலாம். ஆனல், லாகூரில்

இதனைப்பற்றிய பிரஸ்தாபமே எங்கும் நிறைந்திருந்தது. அவள்மீது விதம் விதமான சமாச்சாரங்களெல்லாம் சொல்லப்பட்டன. காதியானில் குழந்தைகளைப் பராமரிப்புச் செய்து கொள்வது மட்டிலும் தான் அவளது வேலை என்பதாக அவளுக்கு எவ்வளவோ கூறியும், அவள் காலத்தை அறிந்தவளாதலால் அவளை ஏமாற்ற முடியவில்லை. எத்தனையோ விதமான ஆசை வார்த்தைகள் கூறியும், ஆயிரக்கணக்கான கெட்டபெயர் வாங்கிக்கொண்டும் காதியானில் அவளை இருக்கும்படிச் செய்ய முடியவில்லை. இவள் எவ்விதமாகவோ தப்பினேன் பிழைத்தேன் என்று லாகூர் வந்து சேர்ந்து விட்டனள். ஆயினும், லாகூரிலுள்ள ஒவ்வொரு குழந்தைகளது நாவிலும் அவளது பெயர் நாமம் இருந்துகொண்டிருந்தது. அவள் சென்ற விடமெல்லாம் "மிஸ்ரோபோ" என்ற சப்தமே அவளது செவிக் கெட்டிற்று. ஆகவே, அவள் லாகூரையும் வெறுத்தனள். ஸிஸிலி ஹோட்டலிலிருந்த வேலையும் அவளுக்கு முன்னமே போய்விட்டது. ஆகவே, அவள் "காதியான் ரோமா" என்ற ஒரு ருசிகரமான கதையை ஏற்படுத்தி விட்டு அவள் லாகூரை விட்டுச் சென்றனள். நேயர்காள்! மேலே கூறப்பட்டுள்ள பெரியார் இன்னாரென்பது சொல்லாமலே தங்களுக்குத் தெரியும், அந்த கபோதிகளின் காமக்கூற்று எவ்வாறிருக்கிற தென்பதை இதிலிருந்து தெரிந்துக் கொள்வீர்களாக.

"ஜமீன்தார்"

ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களது சாமர்த்தியம்

பஸரா, கூபா நகரங்களின் வரலாறு

ஹஸ்ரத் உமர் பாறூக் (றலி) அவர்கள் கலீபா பதவியை யடைந்தபின் இஸ்லாமிய அரசியலில் செய்த அரும் பெரும் காரியங்கள் உலகப் பிரசித்தமானவை. அவைகளைப் பற்றித் தனியே எழுதுவதாயின் ஒரு பெரும் புத்தகமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஆதலின், ஹஜ்றத் உமர் பாறூக் (றலி) அவர்கள் காலத்திலேற்பட்ட ராணுவ தளங்களைப் பற்றி மட்டிலும் இங்கு சிறிது விவரிக்க விரும்புகிறோம். ஹஸ்ரத் உமர் பாறூக் (றலி.) அவர்களது காலத்தில் பாரசீக ஏகாதிபத்தியத்தையும், உரோம ஏகாதிபத்தியத்தையும் ஏககாலத்தில் எதிர்த்து யுத்தம்செய்யவேண்டியிருந்தது. இவ்விரு அரசாங்கங்களும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு அறபிதேசத்தை அடக்கிக்கீழ்படுத்த முயற்சிசெய்துகொண்டிருந்தன. ஆகவே, மகாவல்லமை பொருந்திய இரு அரசாங்கங்களை எதிர்த்து யுத்தம் செய்வதால் மதீனமா நகரிலிருந்து நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள போர்க்களங்களுக்குச் சேனைகளையனுப்பவோ எல்லைப்புறங்களைப் பாதுகாக்கவோ முடியாததாதலின் அறபி நாட்டின் எல்லைகளில் ராணுவ வசதிகள் நிறைந்த பல முக்கிய இடங்களில் அரண்களையும், ராணுவ தளங்களையும் ஏற்படுத்தி அங்கு சைனியங்களை அனுப்பி எந்நேரமும் யுத்தத்திற்குத் தயாராக இருக்கும்படியும் திட்டம் செய்தார்கள். சில இடங்களில் குதிரைப் பட்டாளங்களையும் அதாவது ஏககாலத்தில் அவசரமாக யுத்தத்திற்குச் செல்ல 40-ஆயிரம் குதிரை வீரர்கள் எந்நேரமும் தயாராக வைக்கப்பட்டிருந்தனர். ஆயினும் இவர்கள் ஓரிடத்தில் மட்டிலும் வைக்கப்படவில்லை. 4-ஆயிரம் பேர்களுக்கு ஒரு இடம் வீதம் பிரித்து வைத்திருந்தார்கள். இப்படி பிரித்து வைக்கப்பட்டிருந்ததால்தான் ஷாம்தேசத்தில் யுத்தம் நடந்தபோது அங்குள்ள முஸ்லிம்களுக்கு உதவிபாக இராக் தேசத்துப் போர் முனையிலிருந்தும், இராக் தேசத்து போர்முனைகளுக்கு ஷாம் தேசத்திலிருந்தும் அவசர காலத்தில் ஆயிரக்கணக்கான குதிரை வீரர்கள் உதவிக்குச் சென்று இருபெரிய ஏகாதிபத்தியங்களையும்

வீழ்த்தினர். இவ்வாறு ராணுவ வசதிக்காக ஏற்படுத்தப்பட்ட பல குடியேற்றங்கள், இக்காலத்திலும் சிறந்த பட்டிணங்களாக விளங்குகின்றன. அவைகளில் எகிப்திலுள்ள கைரோ, இராக்கிலுள்ள பஸரா, கூபா, திமிஷ்கு முதலியவைகள் குறிப்பிடத்தக்கதாகும். அவைகளில் கூபாவையும் பஸராவையும் பற்றிய சில விபரங்களை இங்கு குறிப்பிடுவோம்.

பஸரா

பாரசீகம், இந்துஸ்தானம் முதலிய தேசங்கள் கடல் வழியாக வந்து இஸ்லாமிய நாடுகளைத் தாக்காதிருக்கும் பொருட்டு, பாரசீக வளைகுடாவின் வழியாக இந்தியக் கப்பல்களும் பாரசீகக் கப்பல்களும் வந்து தங்குகிற இடமாகிய 'ஈலா' என்ற இடத்திற்குப் பக்கத்தில் ஒரு நகரை நிர்மாணிக்க வேண்டும் என்று ஹிஜ்ரீ 14-ம் வருஷத்தில் 'அத்பத்துப்னு அஜ்வான்' என்பவருக்கு ஹஜ்ரத் உமர்பாறூக் (றலி.) கட்டளை பிறப்பித்தார்கள். தவிரவும், நகரம் அமைய வேண்டிய நிலத்தின் அமைப்பு, நகரத்தின் தோற்றம் முதலியவைகள் எவ்விதமிருக்க வேண்டுமென்ற விபரங்களெல்லாம் அவர்களாலேயே அறிவிக்கப்பட்டது. எனவே, அத்பா (றலி.)அவர்கள் இவ்வுத்திரவைபெற்றுக்கொண்டதும், 800 பேர்களுடன்புறப்பட்டு, 'ஹாஜீபா' என்ற இடத்திற்கு வந்தார்கள். இது சமவெளியாகவும், பொடிக்கற்கள் நிறைந்த பூமியாகவும், அக்கம்பக்கத்தில் ஜலவசதிகள் நிறைந்த இடமாகவும், அரபியர்களது வாசத்திற்குத் தகுதியாகவும் இருந்தது. எனவே, அந்த இடம் ஹஜ்ரத் உமர்பாறூக் (றலி) அவர்கள் கூறிய இலக்ஷணங்கள் பொருந்திய இடமாக இருந்ததால் இதே இடத்தில் ஹஜ்ரத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் போட்ட பிளான்படி நகரை அமைத்தார்கள். ஒவ்வொரு கபீலாவுக்கும் தனித்தனித் தெருக்கள் அமைக்கப்பட்டன. வீடுகள் சாமான்ய கட்டிடங்களாகவும் கூறை வேய்ந்தவைகளாகவு மிருந்தன. அறபிக்கோத்திரங்களில் எந்தெந்தக் கோத்திரத்தை எங்கெங்கு குடியேற்ற வேண்டுமென்பதைக் கவனித்து அவர்களை அங்கு குடியேற்றும் பொறுப்பு 'ஆஸிமுப்னுவல்ப்' என்பவரிடம்ஒப்புவிக்கப்பட்டிருந்தது. அங்கு கட்டப்பட்டிருந்த சர்க்கார் கட்டிடங்களில் ஜாமிஆ மஸ்ஜித், அரசாங்கக்காரியாலயம், சிறைச்சாலை ஆகியவைகள் குறிப் பிடத்தக்கவைகளாயிருந்தன. ஹிஜ்ரீ 14-ம் வருஷத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்நகரம் ஹிஜ்ரீ 17-ம் வருஷத்தில் நெருப்புக்கிரையாகி விட்டது. இதனால் அநேகம் கட்டிடங்கள் வெந்து சாம்பலானதுமல்லாமல் மிகச் சொற்பமானவைகளே எஞ்சின. அக்காலத்தில் கவர்னராக இருந்த ஹஜறத் 'ஸஅதுப்னு அபீவகாஸ்' (றலி.) அவர்கள் ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.)அவர்களுக்கு இச்சம்பவத்தை அறிவித்து நகரைப் புதுப்பித்துக்கட்டவும், கெட்டிக் கட்டிடங்கள் அமைக்கவும் அனுமதி கேட்டிருந்தார்கள். ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் கெட்டிக் கட்டிடங்கள் கட்டிக்கொள்ள அனுமதி கொடுத்தார்களாயினும் எவரும் தமது வீட்டில் மூன்று அறைகளுக்குமேல் அதிகமாகக் கட்டிக்கொள்ளக்கூடாது என்று கட்டளை யிட்டார்கள்.

பஸராவிலிருந்து, டைக்ரீஸ் நதி 10 மைல் தூரத்திலிருக்கிறது. ஆதலின், டைக்ரீஸ் நதியிலிருந்து பஸராவுக்கு ஒருகால்வாய் வெட்டிக் கொண்டுவரும்படி கலீபா அவர்கள் கட்டளையிட்டார்கள். அதுபொழுது கவர்னராகஇருந்த ஹஜ்றத் அபூமூஸா அஷ்அரீ (றலி.) அவர்கள் இக்கால்வாயை வெட்டி நகருக்கு ஜலவசதியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். ஆகவே, இக்கால்வாயை வெட்டியவர் ஹஜ்றத் அபூமூஸா அஷ்அரீயாதலின் அவர்பெயரால் இதற்கு "மூஸா கால்வாய்" என்ற பெயர் வந்தது. இந்நகரின் ஜனத்தொகை மிகவும் சீக்கிரமாக பெருகிற்று. 'ஜியாதுப்னு அபீஸுப்யா' னுடைய அரசாங்க காலத்தில் ராணுவ ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்பட்டிருந்தவர்களது பெயர்கள் மட்டிலும் 80 ஆயிரம் பேர்வரை இருந்தது. இவர்களது மனைவிமக்கள் 120 ஆயிரம் பேர்வரை இருந்தனர். ஆகவே, ராணுவத்தில் சம்பந்தப்பட்டவர்களது குடும்ப ஜனத்தொகை மட்டிலும் இந்நகரில் 2 லக்ஷம் என்பதாகத் தெரிகிறது. இவர்களையல்லாமல் மற்ற ஜனங்களுமிருக்கின்றனர். ஹஸ்ரத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் காலத்தில் இங்குள்ள ராணுவதத்திற்காக 4 ஆயிரம் குதிரைகள், இங்கு எந்நேரமும் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

இந்நகரம், ராணுவ வசதியைக்கருதி ஆதியில் ஸ்தாபிக்கப்பட்டாலும் இங்குவந்து குடியேறியவர்களில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைத் தரிசித்த பாக்யம்பெற்ற ஸஹாபிகளும் இருந்தனர். அறபிக் கோத்திரங்கள் இங்கு குடியேற்றப்பட்டாலும் இவர்களது கல்வி அபிவிருத்திக்

காகவும் மதபோதனைக்காகவும்பல சிறந்தமேதாவிகளான 'மஃகலுப்னுயஸார்' (றலி.), அப்துல்லாஹிப்னுமிஃபல் (றலி.), இம்ரு னுப்னுஹஸீன் (றலி.) முதலிய ஸஹாபிகளேயும் அனுப்பிவைத்திருந்தார்கள். ஆதலின் இது கல்வியறிவிலும் சிறந்தவர்கள் நிறைந்த பட்டிணமாயிற்று. அறபிக்கல்விகளுக்கு இந்நகரத்தில்தான் அஸ்திவாரங்களிடப்பட்டன. அறபி இலக்கியத்தைப் பற்றி இவ்வுலகிலேயே முதல்முதலாக எழுதப்பட்ட "கித்தாபுல் ஐன்" என்ற கிரந்தம் இந்நகரில் தான் எழுதப்பட்டது. இக்கிரந்தத்தை இயற்றியவர் கலீல் பஸரீ (றஹ்) என்பவராவார். அறபியாப்பிலக்கணம், சங்கீதக் கல்வி ஆகியவைகள் இங்குதான் ஆரம்பமாயின. அறபிலக்கணத்திற்கு முதல் நூலாசிரியரான இமாம் ஸீபவைஹி (றஹ்.) இங்கு கல்விபயின்றவரேயாவர். முஜ்தஹிதுகளான இமாம்களில் ஒருவராக இருந்த பிரபல தாபிஇயும் ஸூபியுமான ஹஸ்த் ஹஸன் பஸரீ (றஹ்) இங்குதான் பிறந்தவர். எனவே, இந்நகரம் வெகு காலம் வரை இஸ்லாத்தின் நாகரீகத்தையும் முன்னேற்றத்தையும் எடுத்துக்காண்பிக்கும் சிறந்த முன்மாதிரியாக இருந்துகொண்டிருந்தது.

கூபா

இது பஸராவைப் பார்க்கிலும் அதிகமாகப் பிரபல்யம் வாய்ந்தது. மதாயன் முதலிய நகரங்கள் முஸ்லிம்கள் வசம் வந்தபின்னர் பிரதம தளகர்த்தராகவும் கவர்னராகவு மிருந்த ஹஸ்றத் ஸஅதுப்னு அபீவகாஸ் (றலி.) அவர்கள் ஹஜ்றத் உமர்பாறூத் (றலி.) அவர்களுக்கு எழுதி "அறபியர்கள் இங்கு வசித்ததால் அவர்களது கோலமும் நிறமும்கூட மாறிவிட்டது" என்பதாக அறிவித்துக்கொண்டார்கள். அதற்கு உத்தரமாக கலீபா ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் "அங்குள்ள சீதோஷ்ணஸ்திதி அறபியருக்குப் பிடிக்கவில்லை யென்றால் கடல் திடல் ஆகிய இரண்டு முறையிலும் ராணுவ வசதியுள்ள இடமாக வேறொரு இடத்தை அவர்களுக்காகத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்." என்பதாகத் தகவல் அறிவித்தார்கள். இதன்பேரில் ஹஜ்றத் ஸல்மானும், ஹுதைபாவும் (றஹ்.) இதற்காக நியமிக்கப்பட்டனர். இவர்கள் மணற் பாங்காகவும், கற்கள் நிறைந்ததாகவுமுள்ள ஒரு இடத்தைக் கண்டுபிடித்தனர். அந்த இடத்தில்தான் கூபா நகரம் நிர்மாணிக்கப்பட்டது.

மேலும், இஸ்லாத்திற்கு முன்னர் இராக் தேசத்திலிருந்த அறபி அரசாங்கத்தின் அதிபதியான 'நுஃமானுப்னுமுன்தர்' என்பவரது குடும்பமும் இதே இடத்தில் தான் வாசஞ் செய்தார்கள். அவ்வம்சத் தரசர்கள் கட்டிய பிரபல கட்டிடங்களாகிய கூர்னக், ஸதீத் முதலியவைகளது சின்னங்கள் இந்நகருக்கு அக்கம் பக்கத்திலேயே காணப்படுகின்றன. இந்த இடத்தின் இயற்கை வனப்பு பார்ப்பதற்கு மிக ரம்மியமானதாக இருக்கிறது. தவிரவும் இராக்கிலுள்ள பிரபல நதிகளிலொன்றான யூப்ரடீஸ் நதியானது இங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. மேலும், அறபி தேசத்திலேயே மிகச் சிறந்த புஷ்டங்களான கஹ்வான், ஷக்காயிக், கைஸூம், கராமி முதலியவைகளது வனங்கள் இங்கு நிறம்ப இருந்ததால் அறபியர்கள் இந்த இடத்தை "கத்துல் அத்ராஉ" (காதலியின் கன்னம்) என்பதாகக் கூறிவந்தனர்.

எனவே, இந்நகரம் ஹிஜ்ரீ 17ம் வருஷத்தில், சுமார் 40 ஆயிரம்பேர்கள் குடியேறுவதற்குத் தகுந்த வசதியுடன் கட்டப்பட்டது. 'ஹய்யாஜுப்னு மாலிக்' என்பவரது மேல் பார்வையின் கீழ் அறபியரிலுள்ள பற்பல கோத்திரக்காரர்களும் தனித்தனி மஹல்லாக்களில் குடியேற்றப் பட்டனர். நகர நிர்மாணத்தைப் பற்றி ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் தங்கள்கைப்படக் கட்டளைகளை எழுதி அனுப்பி இருந்தார்கள். இக்கட்டளை களின் படி ரஸ்தாக்கள், பஜார்கள், தெருக்கள், சந்துகள் முதலியன 60 அடி, 45 அடி, 30 அடி $10\frac{1}{2}$ அடி அகலங்களுள்ளனவா யமைக்கப்பட்டன.

இங்குள்ள ஜாமிஆ மஸ்ஜிது, உயரமான சதுர மண் மேடுபோட்ட திண்ணையின்மீது சுமார் 40-ஆயிரம் ஜனங்கள் ஏககாலத்தில் தொழுகையை நிறை வேற்றுவதற்குத்தக்க விசாலமுள்ளதாகக் கட்டப்பட்டது. இதன் நாற்புறங்களிலும் திறந்த மைதானம் காலியாக விடப்பட்டிருந்தது. கட்டிடங்கள் ஆரம்பத்தில் உலர்ந்த புற்களாலும், வைக்கோல்களாலும் கூரையிடப்பட்டனவாகவே இருந்தன. ஆயினும், பஸரா நகரில் நெருப்புப் பற்றிக்கொண்ட சம்பவம் ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்களுக்கு எட்டியபோது செங்கல்லும், சுண்ணும்பும் சேர்ந்த கெட்டிக் கட்டிடங்களைக் கட்டும்

படி கட்டளையிட்டார்கள். ஜாமிஆ மஸ்ஜிதுக்கு எதிரில் 200-முழம் நீளத்தில் விசாலமான மண்டபம் நிழலுக்காகப் போடப்பட்டிருந்தது. இம் மண்டபத்தில் நிறுத்தப்பட்ட தூண்கள் நௌஷேர்வானது கட்டிடங்களிலிருந்து எடுக்கப்பட்ட சலவைக் கற்றூண்களாகும். தவிர, நௌஷேர்வானது கட்டிடங்களுக்குச் சரியான வாரிசுகாரர் எவருமிருக்கவில்லை யாதலின் அரசாங்கச் சட்டங்களின்படி நௌஷேர்வானுடைய கட்டிடங்களை அடைய அருகதையுள்ள சரியான வாரிசுகாரர் கலீபா அவர்களாகவே இருந்தார்கள். என்றாலும், ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் இச்சலவைக் கற்றூண்களது கிரயத்தைத் தம்முடைய மஜூஸிய பிரஜைகளுக்குக் கொடுத்துவிட்டார்கள். அதாவது அவர்கள் செலுத்தவேண்டிய வரிப்பணத்தில் அந்தக் கிரயத் தொகையை வஜா செய்துவிட்டார்கள். மஸ்ஜிதிலிருந்து 200-முழத் தூரத்திற் கப்பால் அரசாங்கக் காரியாலயம் கட்டப்பட்டது. இக் காரியாலத்தில்தான் அரசாங்க பொக்கிஷமாகிய 'பைத்துல் மாலு' மிருந்தது. பொது தர்மச்சத்திரம் ஒன்றும், வெளியிட மிருந்துவரும் பிரயாணிகள் தங்குமிடமும் இத்துடன் சேர்ந்திருந்தன. இதில் தங்குபவர்களுக்கு அரசாங்கத்தாரால் இலவசமாகச் சாப்பாடு அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், சில காலத்திற்குப்பின் இங்கிருந்த பைத்துல்மாலில் திருட்டுப் போய் விட்டதால், அரசாங்கக் காரியாலயக் கட்டிடத்தை மஸ்ஜிதுடன் இணைத்துவிட வேண்டும் என்பதாகக் கட்டளையிட்டார்கள். இவ் வேலையை பிரபல பாரசீக நிபுணரான ஒரு சிற்பி மிகச் சாதுர்யமாகவும் பார்ப்பதற்கு அழகாகத் தோன்றும் விதமாகவும் அரசாங்கக் காரியாலயக்கட்டிடங்களைப் பெருக்கி மஸ்ஜிதுடன் இணைத்து விட்டார். எனவே அது போழ்து கவர்னராக இருந்த ஹஜ்றத் ஸஅதுப்னு அபீவகாஸ் (றலி.) அவர்கள் ரோஜ்பா என்ற அச்சிற்பியையும் அவரதுசகாக்களையும், மதீனமா நகருக்கு அனுப்பிவைத்தார். கலீபாவான ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் அச்சிற்பிகளது திறமையான வேலைகளை வெகுவாகப் பாராட்டியதுடன் அவர்களுக்கு உபகாரச் சம்பளங்களையும் ஏற்படுத்தினார்கள். இந்த மஸ்ஜிதையல்லாமல் ஒவ்வொரு மஹல்லாவுக்கும் தனித்தனி மஸ்ஜிதுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன. இங்கு அறபிலுள்ள சகல கோத்திரத்தவரும் குடியேறினார்கள்.

இந்நகரம் ஹஜ்ரத் உமர்பாறூக் (றலி.) அவர்களது காலத்திலேயே அதிக முன்னேற்றமும், முக்கியாம்சமும், சீரும், சிறப்பும்பெற்று விளங்கியமையான் இதனை ஹஜ்ரத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் "இஸ்லாத்தின் தலை" என்று அழைத்து வந்தார்கள். உண்மையில் இந்நகரம் அக்காலத்தில் அரபி ராணுவத்தின் தலைமைஸ்தானமாகவுமிருந்தது. அதற்குப் பின்னரும் அக்நகரின் ஜனத்தொகை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே சென்றது. இங்கு குடியேறுபவர்களும் பெரும்பாலும் அரபி வம்சத்தினராகவே இருந்தனர். எனவே, ஹிஜ்ரீ 64-வது வருஷத்தில் எடுக்கப்பட்ட ஜனக்கணிதப்படி ரபீஆ, முலர் கோத்திரங்களைச் சேர்ந்தவர்களது வீடுகள் மாத்திரம் 50 ஆயிரம் என்றும், இதர கோத்திரக்காரர்களின் வீடுகள் 24 ஆயிரம் என்றும், யமன் வாசிகளின் வீடுகள் 6 ஆயிரம் என்றும் தெரியவந்தது. பிற்காலத்திலேற்பட்ட மாறுதல்களும் முன்னேற்றங்களும் பூர்வீக அடையாளங்களை அழித்துவிட்டனவாயினும், அங்குள்ள சில கட்டிடங்களின் சின்னங்கள் நீண்டகாலம் வரை இருந்துகொண்டிருந்தது. ஹிஜ்ரீ 8-வது நூற்றாண்டில் இப்பரிசுத்த நகருக்கு 'இப்னுபத்தூதா' என்ற பிரசித்திபெற்ற சரித்திராசிரியர் சென்றபோது இந்நகரை நிர்மாணித்த கவர்னர் ஹஜ்ரத் ஸஅதுப்னுஅபீவகாஸ் (றலி.) அவர்கள் கட்டிய அரசாங்கக் காரியாலயத்தின் அடித்தளங்கள் அழியாமல் இருந்ததைப் பார்த்ததாக எழுதி இருக்கிறார்.

இந்நகரில் குடியேறியவர்களுக்கு மார்க்க கல்வி போதிக்கவும் ஹதீதுகளைக் கற்பிக்கவும், மார்க்கத்தீர்ப்பளிக்கவும் ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் (றலி.) அவர்கள் சிலமுக்கிய அறிஞர்களான ஸஹாபிகளுடன் இந்நகருக்கு வந்தார்கள். இப்றாஹீம் நக்ஈ (ரஹ்), ஹம்மாத் (றஹ்), இமாம்அபூஹனீபா (ரஹ்.) இமாம்ஷஅபீ (றஹ்.) ஆகியவர்கள் இந்நகரில்பிறந்து இந்நகரில் அறிவுச்சுடர் கொழுத்திய சூரியர்களாக இருந்தனர். ஹஜ்ரத் அபூயூஸுப் (றஹ்.) முதலிய 40 சிஷ்யர்களின் துணையைக்கொண்டு இமாம் அபூஹனீபா (றஹ்) அவர்கள் இயற்றிய ஹனபி பிக்ஹு சட்ட கிரந்தம் இவ்விடத்தில்தான்.

ஹஜ்ரத் அலீகர் ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் கலீபாவாக இருந்தகாலத்தில் இந்நகரைத் தங்களது தலைமை ஸ்தலமாகக் கொண்டிருந்தார்கள். அப்படி இங்கிருந்தபோது தான் ஹஜ்ரத் அவர்களது உத்தரவின்படி அபுல்

அஸ்வத்தூஹ்லீ (றஹ்.) என்பவர் அறபி இலக்கணக் கிரந்தத்தை முதல் முதலாக இயற்றினர். ஹஜ்ரத் இமாம் அபூஹனீபா (றஹ்.) அவர்கள் பிறந்த காலத்தில் ஹஜ்ரத்அலீ (றலி.) அவர்களிடம் அவர்களது தந்தையரான தாபித் (றஹ்.) அவர்கள் கொண்டுவந்தபோது ஹஜ்ரத்அலீ (றலி) அவர்கள் அக்குழந்தைக்காக துஆச் செய்தார்கள். பிற்காலத்தில் இக்குழந்தை மிகப் பிரசித்திபெற்ற அறிவாளியாக இருக்கும்படி இறைவனைப் பிரார்த்தித்தார்கள். ஹஜ்ரத் அவர்களது துஆபரக்கத்தின்படி இமாம் அபூ ஹனீபா (றஹ்) அவர்களது கீர்த்தி இவ்வுலகில் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார் யாவரிடமும் பரவி இருப்பது உலகறிந்த உண்மையாகும்.

இந்திய முஸ்லிம் மன்னர்களது ஆட்சியிலிருந்த மத உரிமை

இந்தியாவில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை வேண்டப்படும் இற்றைநாளில் வகுப்புக் கலவரங்கள் முற்றிக்கொண்டே வருகின்றன. வகுப்புப் பூசல்களைக் கிளப்பிவிடும் பிரசுரங்களும் புத்தகங்களும் ஆங்கிலபாஷையிலும் சுதேச பாஷைகளிலும் பிரசுரிக்கப்படுவது குறையவில்லை. தேச பக்தர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்களிற் சிலர் மிகவும் வைராக்யமும் துவேஷமும் கொண்டவகுப்பு வாதிகளாக இருக்கின்றனர். பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் சில பாடப்புத்தகங்களும்கூட வகுப்பு துவேஷத்தை வளர்ப்பனவாகவே இருக்கின்றன. இவ்விதமான நிலைமை ஏற்படுவதற்கு தற்போதைய இந்தியாவில் முஸ்லிம்கள் மைனரிட்டியாகவும், ஹிந்துக்கள் மெஜாரிட்டியாகவும் இருப்பதும், தற்போதைய பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன் மைனரிட்டி வகுப்பினராகிய முஸ்லிம்கள் இந்தியாவை அரசாட்சி புரிந்ததும் மிகவும் சௌகரியமான நிலைமையை உண்டுபண்ணி விட்டது. இவ்விதவகுப்பு துவேஷம் வளர்க்கப்பட்டு வருவதால் மைனரிட்டி வகுப்பினரான முஸ்லிம்கள் மெஜாரிட்டி வகுப்பினரால் பலவிதத்திலும் சங்கடப்படுகின்றனர். எங்கேனும் வகுப்புக்கலகம் ஏற்பட்டுவிட்டதாகப் பத்திரிகைகளில் பிரசுரமாகுமாயின் அதனைத் தொடர்ந்து அடிபடுவதும் சாவதும், இறுதியில் சிறைதண்டனை அடைவதும் முஸ்லிம்களாகவே இருக்கின்றனர். செல்வாக்கும் தந்திரமுமுள்ள முஸ்லிம் அல்லாதார் எப்பொழுதும் மிகைத்தவர்களாகவே இருந்து வருகின்றனர். நீதியும் நேர்மையும் படைத்த முஸ்லிம் அல்லாதாருக்கு அவர்கள் சமூகத்தில் போதிய செல்வாக்கில்லை. ஆதலால், அவர்களும் உண்மையைப் போதிக்க அஞ்சி வாளாவிருந்து விடுகின்றனர். சுதந்திரம் சுதந்திரம் என்று கூச்சலிடும் காங்கிரஸ்காரர்களது போக்கு முஸ்லிம்களை அலக்ஷியம் செய்வதாகவும், அவர்களிடம் பழி வாங்கும் தோரணையாகவுமே இருக்கிறது. இவர்களது இப் போக்கானது நாட்டில் வகுப்புச் சமரசத்தை யுண்டாக்காமல் வகுப்புப் பிளவையே யுண்டுபண்ணும். வகுப்புப்பிளவு இருக்கும் வரை அவர்களது சுதந்திர முயற்சி பகற்கனவே என்பதை அவர்கள் உணர்ந்திருந்தும், அதற்கான முயற்சி செய்யாமலிருந்து வருவது இந்தியர்களுக்கு சுதந்திரம் வாங்குவதற்காக அவர்கள் முயலவில்லை என்பதையும், முஸ்லிம்களை அடக்கி ஒடுக்கிக் கீழ்படுத்துவதற்காகவே அவர்கள் முயன்று வருகின்றனர் என்றும் எண்ண இடமேற்படுகிறது. இவ்விதமான வகுப்புணர்ச்சியை வளர்ப்பதற்கு, இந்தியாவில் ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்கள் ஹிந்துக்களைக் கொடுமைப் படுத்தினார்கள் என்றும், ஹிந்துக்கோவில்களை இடித்து மஸ்ஜிதுகள் கட்டினார்கள் என்றும், ஹிந்துக்களைப் பலவந்தமாக இஸ்லாத்தில் சேரும்படிச் செய்தார்கள் என்றும் பிரசாரம் செய்யப்படுகின்றது. ஆகவே, இச்சிறு வியாசத்தில் ஹிந்துக்களால் வெறுக்கப்படும் முஸ்லிம் அரசரான 'ஔரங்கஜேபின்' காலத்தில் பிரஜைகளுக்களிக்கப்பட்டிருந்த மத சுதந்திரத்தைப் பற்றி மட்டிலும் சிறிது விளக்குவாம். ஔரங்கசீப் சக்கரவர்த்தி கி. பி. 1659-ம் வருஷம் முதல்

1704-ம் வருஷம் வரை ஆட்சிபுரிந்தார். இதே காலத்தில் ஐரோப்பாவிலும் பல அரசாங்கங்கள் இருந்து கொண்டிருந்தன ஆகவே, ஔரங்க ஜீப்பின் ஆட்சியைப்பற்றி வாசக நேயர்கள் ஒருவித அபிப்பிராயத்துக்கு வருவதற்கு முன் ஐரோப்பாவில் மத சுதந்திரம் எவ்வாறிருந்தது என்பதைப் பற்றியும் சிறிது தெரிந்து கொள்வது அவசியமாகும்.

கி. பி. 1685-ம் வருஷத்தில் Edict of Nantes ஐ மறுப்பதற்காகவும், மதவைராக்கியத்தினுலும் 14-வது லூயி என்பவர் 10 ஆயிரம் பிரஞ்சு புரோட்டஸ்டன்டுகளை தேசப்பிரஷ்டம் செய்தார். தற்போதுள்ள ஜெர்மன் சர்வாதிகாரியான ஹர்ஹிட்லர் ஆயிரக் கணக்கான யூதர்களை ஜெர்மனியைவிட்டு வெளியேற்றி விட்டார். இந்த நாகரீககாலத்திலும் கூட மதவேற்றுமை பாராட்டுவது நியாயமெனக் கருதப்படுவது தான் ஆச்சரியமாக இருக்கிறது. இவ்விதமான சம்பவ மெதுவும் ஔரங்க ஜீபின் ஆட்சியில் நடந்ததாகக் காண்பிக்க முடியாது. சக்கிரவர்த்தி ஔரங்கஜீப் மதவேற்றுமையைப் பாராட்டி எவரையும் எந்தச் சமயத்திலும் கூட எவ்விதத் தொந்தரையும் செய்ததில்லை. அப்படி இருக்க அவர் தேசப்பிரஷ்டம் செய்ததாக ருஜூப்பிப்பது எங்ஙனம்? "ஔரங்கஜீப் ஆட்சி காலத்தில் மத வேற்றுமைக்காக ஒரு ஹிந்துவுக்கேனும் சிறைவாச தண்டனை விதித்ததாகவோ, அல்லது அவனது சொத்தின்மீது அதிகவரி ஏற்படுத்தியதாகவோ, அல்லது ஒரு மனிதன் அவனது வம்சத்தின் வழக்கப்படி செய்த வணக்க முறைக்காக அவனை விசாரணை புரிந்ததாகவோ தெரியவில்லை" என்பதாக எலிபின்ஸ்டன் கூறி இருக்கிறுர். "முஸ்லிம்களது அரசாட்சி காலத்தில் ஹிந்துக்கள் நீதியில்லாமல் ஒருபோதும் பிடிக்கப்பட்டதில்லை. இது ஆட்சிபுரிவோரின் போக்கில் சகிப்புத்தன்மை, துவேஷ மின்மை என்பவைகளது உயிர் ஐக்கியமாகி இருக்கிறது என்பதை அறிவிக்கிறது. ஆனுல், இதற்கு நேர்மாருக இங்கிலாந்தில் கத்தோலிக்கரும், புரோட்டஸ்டன்ட் மதத்தை ஒப்புக் கொள்ளாதவரும் சமீப காலம் வரை மத துவேஷத்திற்குவேட்டையாடப்பட்டுக்கொண்டிருந்தனர்" என்பதாக ஸர் பி. ஸி. ரே என்பவர் எழுதியுள்ளார். "முதலாவது ஜேம்ஸ் (கி. பி. 1603--1625), இரண்டாவது சார்லஸ் (1660-1685) காலங்களில் ராஜ்யத்தில் மதத்திற்குப் பூரணமான செல்வாக்கிருந்து கொண்டிருந்தது. கி. பி. 1660-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட மதச் சட்டப்படி குறிப்பிட்ட ஒருவகுப்பினர் கொடிய தண்டனைக்குட் படுத்தப்பட்டனர். 1673-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஆக்டின் பிரகாரம் கத்தோலிக்கர் முதலியவர்கள் அரசாங்க உத்தியோகத்திற்கு அருகதை யற்றவர் என்று தீர்மானிக்கப்பட்டது. எல்லா சர்வகலாசாலைப் பட்டங்களும், கல்வி சம்பந்தமான உத்தியோகங்களும் பற்பல வகுப்பினருக்கும் சமமாக அளிக்கப்பட வேண்டுமென்றேற்பாடு செய்ததானது 1871-ம் வருஷத்துச் சம்பவமாகும். ஸ்டுவர்ட் வம்சத்தினரது மதவைராக்கியப் போக்கின் கதியானது முதலாவது சார்லஸ் (1625—1649) கொலையிலும், இரண்டாவது ஜேம்ஸ் (1685—1688) பட்டத்தைத் துறந்ததிலும் முடிவு பெற்றது. தவிரவும் 1688-ல் நிகழ்ந்த பிரபல புரட்சிக்குக் காரணம் இரண்டாவது ஜேம்ஸின் கத்தோலிக்க மதக் கொள்கையாகவே இருந்தது" என்பதாக மான்டேகு எழுதியுள்ளார்.

ஔரங்கஜீபும் ஜிஸ்யா வரியும்.

ஔரங்கஜீப் ஜிஸ்யாவரி வாங்கியதைப்பற்றி முஸ்லிம்அல்லாதார்ஆபேக்ஷனை செய்கின்றனர். மதத்துவேஷமுள்ள நூலாசிரியர்கள் துரும்பைத் தூணுக்கி எழுதி விடுகின்றனர். ஜிஸ்யாவரி என்பது என்ன? அது எப்பொழுது ஏற்பட்டது என்ற விபரத்தை மிகச் சில நூலாசிரியர்களே அறிந்துள்ளனர். இவ்வரி ஔரங்கஜீப் சக்கிரவர்த்தியால் இட்டுக்கட்டி உண்டாக்கப் பட்டதல்ல. கி. பி. 7-வது நூற்ருண்டிலேயே இவ்வரி இருந்ததாகச் சரித்திரங்களிலிருந்து தெரியவருகிறது. இஸ்லாத்தில் ஜிஸ்யாவரி யூத கிறிஸ்துவர்களிடம் விதிக்கப் பட்டது. அவர்கள் இவ்வரியைக் கொடுப்பதற்காக அவர்களது உயிர்களையும் பொருள்களையும் காப்பதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளப் பட்டது. அவர்கள் ராணுவ ஊழியம் செய்ய வேண்டியதில்லை. எனவே, ஜிஸ்யாவரி கொடுப்பவர் "திம்பி" என்பதாக அழைக்கப்பட்டனர். இவர்கள் முஸ்லிம்களைப் போல் சமபாத்திய முள்ளவர்கள். "திம்பியைக் கொல்வது முஸ்லிமைக் கொலை செய்வதாகவே கருதப் படும்" என்பதாக நான்காவது கலீபா ஹஜ்ரத் அலீகர் ரமல்லாஹு வஜ்ஹஹு கூறி இருக்கி

றார்கள். இவ்வுண்மையை அறியாமல் வீ. ஏ. ஸ்மித், லீன்ஸ்பூல் போன்ற அறிஞர்கள் ஜிஸ்யா வரி வெறுக்கத்தக்கதெனவும், ஜனங்களைக் கஷ்டப்படுத்தும் வரியெனவும் கருதுகின்றனர். இவர்கள் உண்மையை யுணரவில்லை. இவர்களது இவ்வபிப்பிராயம் தப்பருத்தத்தை அடிப்படையாகக் கொண்டது. இவ்விதமானதும், இதனைப் பார்க்கினும் கொடுமையானதுமான வரி இங்கிலாந்திலும் விதிக்கப்பட்டிருந்தது. ராணுவ ஊழியத்திற்குப் பதிலாக ஸ்கூடேஜ் என்பதாக ஒரு வரி முதலாவது ஹென்றியின் காலத்தில் விதிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது ஹென்றியின் காலத்திலும் கூட அது இருந்தது. நார்மன் அரசர்களது ஜாகீர் வரிகளை ஜனங்கள் கோபமான பார்வையிலேயே நோக்கிக் கொண்டிருந்தனர். Benevolence ரூபாயைப் பலவந்தமாக வசூல் செய்தல், நிர்ப்பந்தப்படுத்திக் கடன் வாங்குதல் ஆகியவைகளை மார்ட்டினும் போக்ஸும் வெறுக்கத் தக்க முறையில் வசூல் செய்தனர். பிரஞ்சுப் புரட்சி காலத்தில் பிரஞ்சுக்காரர்கள் அதிக வரியால் கஷ்டப்பட்ட விபரம் சரித்திரத்தில் என்றும் அழியாமல் இருந்துவருகிறது. ஔரங்கஜீப் விதித்த ஜிஸ்யா வரி இவ்வளவு பளுவுள்ளதா? அல்லது இதனை வசூல் செய்யும்போது கொடுமையும் முரட்டுத்தனமும் செய்யப்பட்டனவா? என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். சரித்திரத்தைச் சுண்டிப்பார்க்கும் அறிஞர்கள் ஔரங்கஜீபின் மீது குறைகூற மாட்டார்கள்.

ஔரங்கஜீப் பக்கா முஸ்லிமாக இருந்தார்.

ஔரங்கஜீப் பக்கா முஸ்லிமாக இருந்தார் என்பதும், திரு குர்ஆன், ஹதீது ஆகியவைகளைப் பலமாகப் பின்பற்றினார் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். தவிரவும், வீ. ஏ. ஸ்மித் கூறுகிறபடி "அவர் நீதியும் இரக்கமும் வாய்ந்த நீதிபதியாக இருந்தார். இன்னும் தனது சொந்த ஆசாரப் பழக்கங்களைக் கவனிக்குமிடத்து அவர் பய பக்தியுள்ள ஒரு தபசியைப்போலிருந்தார். இவ்விதமான தன்மையுள்ள ஒருவர் மதத்துவேஷமும் வேற்றுமையும் பாராட்டுவாரா? இஸ்லாமிய சமத்துவத்திற்குக் கெட்ட பெயர் உண்டாவதற்கு அவர் காரணமாக இருக்க விரும்புவாரா? என்பதைச் சிந்தித்து பாருங்கள். மொகலாய அரசர்களுக்கு விரோதமாக எழுதும் மனப்பான்மையுள்ள வீ. ஏ. ஸ்மித் என்பவரது விஷமத்தனமுள்ள பேனாவும்கூட "ஔரங்கஜீப் மரணதண்டனை எவருக்கும் விதிக்கவில்லை; அவரது அரசாங்கத்தில் அவர் எப்பொழுதேனும் கொலை செய்ததாக எங்கும் காணப்படவில்லை" என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறது. "முஸ்லிம்களது அரசாங்கம் இருந்துகொண்டிருந்த தேசங்களில் ஜனங்களுக்கு எவ்விதமான தொந்தரையுமிருந்ததில்லை. எங்கேனும் அப்படி இருந்ததாக வெளியாகுமாயின் அது ஸ்தலத்திலுள்ள பல வேறு காரணங்களின் நிமித்தமாகவே இருக்கும். அது வேண்டுமென்று செய்ததாகவோ அல்லது மத வேற்றுமையின் காரணமாகவோ இருக்கமாட்டாது" என்பதாக ஆர்னல்ட் தமது புத்தகத்தில் எழுதியுள்ளார்.

19-வது, 20 நூற்றாண்டிலுள்ள நூலாசிரியர்களும் கூட முகலாய சக்கிரவர்த்திகள் அளித்துள்ள தாராள சிந்தையையும், மத சுதந்திரத்தையும் பற்றி வேண்டியமட்டிலும் எழுதி இருக்கிறார்கள். ஸர் ஜான்மால்கம் என்பவர் "பரிபூரணமான மத சுதந்திரமும் தாராள சிந்தையும் அளிக்கப்பட்டிருந்ததால் ஹிந்துக்களது பூர்வீகமானதும் மதிக்கத்தக்கதுமான ஆசாரங்கள் அவமதிக்கப்படவில்லை" என்பதாக எழுதியுள்ளார். ஆகவே உண்மை சம்பவம் இப்படியிருக்க ஔரங்கஜீபை மத வைராக்கியம் கொண்டவர் என்று கூறுவது வீண் கூற்றேயாகும்.

ஈதுப் பெருநாள் யாருக்கு!

மாண்புமிக்க புண்ணிய ரமலானில் நோன்பு நோற்று, தராவீஹ் தொழுது அல்லாஹ் தஆலாவால் விலக்கப்பட்டவைகளைவிட்டு நற்கருமங்கள் புரிந்த நல்லடியார்கட்கே ஈதுப் பெருநாள். அப் புண்ணியசீலர்களான நல்லடியார்களே ' கண்ணியமிக்கத் தினத்தை சிறப்பாகக் கொண்டாடி ஏகவல்லபராபரனின் நல்லருளைப் பெற்றுக்கொள்வர். அன்னாரே ஜெயசீலராவர்.

சாந்தி அளிப்பது சன்மார்க்கம் ஒன்றே

மனித அபிவிருத்திக்கும் இயற்கைக்கும் மாற்றமாக யாதொரு சட்டதிட்டங்களும் இஸ்லாமென்னும் சத்திய சன்மார்க்கத்திற் தேடியலைந்தாலும் கிடைத்துக்கொள்ள முடியாது. இறைவன் மன்பதைகளில் அமைத்துள்ள தத்துவங்களை செவ்வனே சீரிய முறையில் நடாத்தி மானிட அபிவிருத்திக்குரிய நேரான வழியிற் செல்லச் செய்வதே இஸ்லாத்தின் நோக்கமாகும். ஆகவேற்றான் அளவிட யியலா பெருங்கலை திறண்ட இது காலை, தேசீய வாதிகளென்ன? ராஜீயவாதிகளென்ன? சமூக சீர்திருத்தக்காரர்களென்ன? ஸைன்ஸ் நிபுணர்களென்ன? எல்லா வித சீர்திருத்தக்காரர்களும் மனித அபிவிருத்திக்கென கருதும் யென்னென்ன சீர்திருத்தங்களுண்டோ அதைவிட பன்மடங்கு மேலான தோரணையில் இஸ்லாத்தில் மலிந்து கிடைப்பதைக் காணலாம்.

ஆகவே, சமத்துவ சகோதரத்வமெனும் உச்சஸ்தானத்தை யிழந்து அடிமை கீழ்படிதலெனும் வியாதியாற் அவதியுறும் தீயரெனப்படுவர் முதல் ஏனைய எந்த சாரார்கட்கும் தக்க பயனளித்து சாந்தியை தோற்றுவிக்கும் உயரிய ஔஷதம் இஸ்லாத்தில் உறைந்து கிடக்க, அதை உணராது மேலும் துன்பத்தாலேயே பீடிக்கப்பட்டுழலுவதற்கு இஸ்லாமிய மூலக் கோட்பாடுகளை உணராமையே காரணமாம்.

அந்தோ! வலியவரும் செல்வத்தை கைவிட்டு அடிமைப் பிணியால் நோவுறும் அன்பர்காள்! எம்மத ஸ்தோத்ர கூடமாம் மஸ்ஜித் யெனும் வணக்க ஸ்தலங்களில் ஓர் உண்மை முஸ்லிமுடன் பெருந்தலைவர் அல்லது அவ்வூர் அரசர் முதற் புஜம் தோய்ந்து சமமாய் நின்று ஸ்தோத்தரிப்பதை நோக்குவீர்களாக? அத்துடன் அவ்வரசரை விட்டு அப்பாற் அகன்று வணங்குமாறு புகல யாவராலும் இயலாது யெனும் சட்டத்தையும் நோக்குங்கள்! சமத்துவத்தை கைபூண்ட இத்தகையபடிப்பினை ஏனையவர்களின் மூளை, ஹ்ருதயங்களிற் உணர்ச்சி பண்ணிவிட செய்துள்ளார்கள். உங்களின் ஹ்ருதயங்களும்அவ்வாறு புத்துணர்ச்சிபெறுவதெக்காலம்! இத்துடன் எம் மதஸ்தாபகர் முஹம்மது (ஸல்.) அவர்களின் உயர் மிகு வாழ்க்கையில் மலிந்து தோன்றும் சமத்துவ சகோதரத்வம் சுதந்திரம் சுயேட்சை போன்றவற்றிற் சிலதுகீழே தரப்படுகின்றது ஊன்றிக் கவனிப்பீர்களாக. தூபிலிலாழாது இஸ்லாத்தின் உயரிய கயிற்றை இறுக பிடித்து நன்மார்க்க கறை சேர எழுவீர்களாக!

சமத்துவம்

தற்காலை சமத்துவம்! சமத்துவம்!! யென்னும் ஒலி வானமளாவி நிற்கிறது. ஆனால் அதனை அநுஷ்டித்து காட்டியவர்கள் முஸ்லிம்களே, யென்பது தக்க ஆதாரத்துடன் இப்பத்திரிகை மூலம் அடிக்கடி வெளிவந்துலவுகிறதென்பதை நேயர்கள் நன்குணர்வர். மேலும், அச்சமத்துவம் முஸ்லிம் சமூகத்திற்றான் மலிந்து கிடக்கிறதென்பதை கீழ்தரப்படும் நபிகள் கோமான் (ஸல்.) அவர்களின் அனுஷ்டானத்தைக் கொண்டு தெற்றனப் புலனாகும்.

ஒரு காலை, ஒரு பெண்ணணங்கு தன் வறுமையின் கோரத்தால் திருடிவிட்டனள். எனவே அம்மாதை நபிகள் கோமான் (ஸல்.) அவர்கள் சமூகம் கொணரப்பட்டது. அது தருணம் யெல்லா குறைஷிகளும் அம்மாதுக்காக க்ஷமிக்கத் தேடுகிறார்கள். உடனே நபிகள் கோமான் (ஸல்.) அவர்கள் அக்குரைஷிகளை நோக்கி “ஓ! குரைஷிகாள்? நுங்கட்கு முன்னுண்டாய சாரார்கள் ஏழைக்கொருவிதம் பணக்காரருக்கு ஒருவிதம் தீர்ப்புக் கூறுவார்கள். ஆகவேற்றான் அவர்கள் நாசமாக்கப்பட்டனர்; இறைவன்மீது சத்தியமாக அல்லாஹ்வுடைய தூதர் முஹம்மதுடைய மகள் பாத்திமா (றலி.) திருடிவிட்டாலும் அவர் கரத்தையும் கொய்யத் தயங்கமாட்டேன்” யென அறிவித்துள்ளார்கள். என்னே! சற்குண தயாளரின் சமத்துவ தீர்ப்பு!

208350

அவ்வாறே [illegible]குப் பிரதிநிதியாய் வந்த உமர் (றலி.) அவர்களின் அனுஷ்டிப்பை நோக்குங்கள். ஒருபோழ்து உமர் (றலி.) அவர்கள் தமது வேலையாளுடன் பைத்துல் முகத்தஸ் புறப்பட்டார்கள். அது சமயம் அவர்களிடம் ஒரு ஒட்டகையே உள்ளதால் இருவரும் குறிப்பிட்ட தூரம் மாறிமாறி ஏறிச் சென்றார்கள். இறுதியாய் 'பைத்துல் முகத்தஸ்' புகுந்தருணம் பணியாளரின் முறையாய் இருந்தது. உடனே அவ்வேலைக்காரர் "உமர் (றலி.) அவர்களே! தாங்களே ஒட்டகைமீது ஏறிக் கொள்வீர்களாக" வென வேண்டுகிறார். வேலைக்காரரின் வேண்டுகோளை உமர் (றலி.) ஆமோதித் தேற்றுக் கொண்டார்களில்லை. எனவே இஸ்லாமிய க்லீபா தமது வேலையாள் ஒட்டகை ஏறிய நிலைமையில் ஒட்டகையின் கயிற்றைப் பிடித்து செல்கிறார்கள். எனின், அப்பெரியாரின் சீரிய சமத்துவ அனுஷ்டானத்தை சிந்தியுங்கள்!

இம்மட்டோ? முஸ்லிம்களின் நிலையை அறிந்து வருவதற்கென "ரோம்" தேசத்து சேனாதிபதியால் அனுப்பப்பட்ட வேவுகாரனொருவன் முஸ்லிம்களின் உண்மை நடையனுஷ்டானங்களைக்கண்டு உளம்பதறி வெருண்டவனாய் சேனாதிபதியிடம் கூறுவதை நோக்குங்கள்! "முஸ்லிம்கள் இரவில் துயில்புரிகிறார்களில்லை. ஆனால் வணக்கத்திலாழ்ந்து துறவிகளாய் திகழ்கிறார்கள். விடிந்ததும் வீரர்களாய் எதிரிகளை வெருண்டோடும் விதத்தில் வேலை செய்ய கங்கணம் கட்டுகிறார்கள். அவர்களில் அரசகுமாரனாயினும் களவிடுவானேல் அவனின் கரத்தையும் கொய்துவிடுகிறார்கள். அரச குமாரன் விபசாரம் செய்துவிடின் அவரையும் தாக்ஷண்யமின்றி கல்லெய்துக் கொல்லத் தயங்குறார்களில்லை" யென்பதே. இதுதான் இஸ்லாமிய உத்திரவின் உண்மை உருவாகும். இதுவே சாந்தி மார்க்கத்தின் சமத்துவ சட்டதிட்டமாகும். எனவே அன்பர்காள்! ஹிந்து மதத்தை விட்டொழித்து சமத்துவ மார்க்கத்தைத் தேடும் சாரணர்காள்! உங்களின் உயரிய நோக்கைப் பூர்த்தி செய்விக்கும் மதம் இஸ்லாமன்றி வேறு மார்க்கங் கிடையாதென்பதை மனத்திற் பதியுங்கள்! இன்றே ஓர் உண்மை முஸ்லிமாய்த் திகழுங்கள்!

சகோதரத்வம்.

ஒருகாலை நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் இஸ்லாத்தின் பிரசாரத்தை யெதிரிகளுக்கெடுத்தோதும் பொருட்டு 'தாயிப்' பெனும் நகருக்கேகினார்கள். ஆங்குள்ள புல்லர்களால் துன்புறுத்தப்பட்டு சகிக் கொணாதவர்களாய் ஒரு மலையடிவாரத்தில் வீற்றிருக்கிறார்கள். ஆவண், தேவதூதர் ஜிப்ராயீல் (அலைஹி) விஜயம் தந்து "ஓ முஹம்மதே! அந்த 'தாயிப்' வாசிகளை அழிக்குமாறு தாங்கள் உத்தர விடுவீர்களேல் இதோ! ஒரே நிமிடத்தில் இம்மலையைக் கொண்டே அவ்வூரைப் பாழ்செய்து விடுகிறேன்" னென இறைவனின் ஆக்ஞையைக் கூறுகிறார்கள். உடனே உலக தயாளர் உத்தமப் பெரியார் முஹம்மது (ஸல்.) அவர்கள் நாமும் அத்தாயிப் வாசிகளும் ஒரே "ஆதமி"ல் நின்றுமே புறப்பட்டோம். அவர்களும் நம் சோதரர்களே, ஏதோ ஒரு காலத்து அறிவிலியாய் திகழ்ந்தாலும் மற்றொரு காலம் அறிவாளியாய் திகழக் கூடும். ஆகையால் சகோதரரை சபிக்க யாரே முன் வருவர்" என மனத்திற் யெழுப்பி ஏ! இறைவ! இவர்கட்கு நல்லறிவை தந்தருள்வாயாக! என பராவியுள்ளார்கள் யெனின் சற்குண தயாளரின் சமத்துவ சகோதரத்துவந்தானென்னே!

மற்றொரு சமயம் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் மதீனாவின் கண்ணே நிறுவப்பெற்றுள ஸ்தோத்ர கூடமாம் மஸ்ஜித்யெனும் தேவாலயத்தில் வீற்றிருக்கிறார்கள். அதுபோழ்து ஓர் காட்டு அராபியொருவர் ஆங்கு வந்து அம்மஸ்ஜிதின் கண்ணே ஜல விஸர்ஜனம் செய்துவிடுகிறார். இதைக்கண்ட எல்லா தோழர்களும் கடுஞ்சினத்தாற் கடிந்து கண்களை சிவப்புற செய்கிறார்கள். அது சமயம் நபிகள் கோமான் (ஸல்.) அவர்கள் தோழர்களை நோக்கி தோழர்காள்! "அவரும் நம் சோதரரே. ஏதோ தெரியாமையால் ஓர் பிழை இழைத்திடின் சினங் கொள்ளற்க! க்ஷமித்திடுவீர்களாக!!" யெனக் கூறியுள்ளார்கள். அன்பர்காள்! சற்று சிந்தியுங்கள்! சத்திய சன்மார்க்கமாம் இஸ்லாம் சகோதரத்துவத்தை தன்னகத்தே பதித்திருப்பதை நோக்குங்கள்!

ஆகையால் இந்து சோதரர்காள்! சமத்துவ சகோதரத்வத்தைக்கோரும் நேயர்காள்! தாங்கள் தேடியலையும் ஔஷதங்கள் இஸ்லாத்திற் மலிந்து தென்படுவதைக் கண்ணோக்குங்கள்! ஓர் உண்மை முஸ்லிமாய்த் திகழ முற்படுங்கள்!! நல்லனவற்றிற்கு நாயன் நன்னருள் பாலிப்பானாக.

சந்தா நேயர்கட்கு!

அன்பீர் !

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1935—1936-ம் ஆண்டுகளுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பாக்கிகளை தாமதமின்றி 30-11-36 திகதிக்குள் அனுப்பிவைப்பார்களென எதிர் பார்க்கிறோம். இல்லையேல் நாளது டிசம்பர் மாதம் முதல் தேதி வெளியாகும் மாசிகையை வி. பி. செய்து அனுப்பிவைக்கப்படுமென்பதை அன்பர்கட்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

N. B.—வி. பி. -யில் அனுப்புவதுகொண்டு வீண் செலவு ஏற்படுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனாப் மு. முகம்மது ஷரீப் சாஹிப் அவர்கள்,

(208, ஸிலிங்கி ரோட்) இடமும்

பினங் வாசிகள்

ஜனாப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் அவர்கள்,

(113-A, சோலியா ஸ்டீட்) இடமும்

மலாக்கா & மலாய் நாட்டு வாசிகள்

ஜனாப் K. A. பகீர் முகம்மது சாஹிப்,

(P. O. Box No. 60, கிள்ளான்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்கு தெருவு, கொழும்பு) இடமும்

தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோறுகிறோம்.

மஃரிபத்துல் ஔகாத் (நேரங்களின் விபரம்)

நோன்பு வைக்கும் நேரம், நோன்பு திறக்கும் நேரம், சூரிய உதையம் முதலியவைகளை இதன்கீழ் குறிப்பிடுகிறோம் இதிற் கண்ட நேரங்கள் சென்னை நகருக்கு உரியனவாகும். சென்னைக்கு நேர்மேற்கில் உள்ளவர்கள் 69½ மையிலுக்கு 4 நிமிஷம் கூட்டியும் நேர்கிழக்கில் உள்ளவர்கள் 69½ மைலுக்கு 4 நிமிஷம் வீதம் குறைத்தும் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். கீழே குறிப்பிட்டுள்ள நேரங்களில் அஸ்தமனத்தை 5 நிமிஷம் பிந்தியும் சுப்ஹையும், சூரியோதயத்தையும் 5 நிமிஷம் முந்தியும் அனுஷ்டிப்பது நலம்.

இதனடியில் சில முக்கியமான ஊர்களையும் அவைகள் சென்னைவிட்டு எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதையும், அவ்விடத்திலிலுள்ளவர்கள் கூட்டிக்கொள்ளவேண்டிய நிமிஷங்களையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குச் சமீபத்திலுள்ளவர்கள் அதற்கேற்றவாறு தங்கள் ஊரின் நேரத்தை நிர்ணயித்துக்கொள்வார்களாக.

ரமலான்மீ	1௨ 14	8௨ 7	15௨ 22	22௨ 28	29௨ 30
நேரங்கள்	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.
ஸஹர் முடிவு	4—35	4—38	4—40	4—43	4—45
சுப்ஹுசாதிக் (மெய்வெள்ளை)	4—52	4—55	4—58	5—0	5—2
சூரியோதயம்	6—12	6—16	6—18	6—20	6—22
சூரியாஸ்தமனம்	5—39	5—40	5—42	5—43	5—45

முக்கிய பட்டணங்கள்

ஊர்	மைல்	நி	ஊர்	மைல்	நி
விழுப்புரம்	56	3½	தாராபுரம்	193	11¼
திருவண்ணாமலை	59	4	பெங்களூர்	187	[illegible]
கொழும்பு	25?	1½	கோயமுத்தூர்	241	14
இராமேஸ்வரம்	70?	4	காஞ்சிவரம்	43	2½
பட்டுக்கோட்டை	67?	4	வேலூர்	81	4
மன்னார்குடி	35?	2	ஆற்காடு	81	[illegible]
நாகப்பட்டணம்	31	2	தூத்துக்குடி	147	[illegible]
தஞ்சாவூர்	30	4	ராமனாதபுரம்	103	[illegible]
சீர்காழி	39	2	புதுக்கோட்டை	201	12
சிதம்பரம்	42	2	திருச்சினாப்பள்ளி	111	6½
பரங்கிப்பேட்டை	37	2	சேலம்	144	8½
கூடலூர்	37	2	தர்மபுரி	147	8½
செங்கல்பட்டு	22	1	மேட்டுப்பாளையம்	236	14
வாணியம்பாடி	126	7	உதகமண்டலம்	248	14½
திருநெல்வேலி	180	10½	மதுரை	150	[illegible]
திண்டுக்கல்	162	9½	சிவங்கை	124	7½

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T., Madras.